நூலகம்
கோண்டாவில்
பிரதேச சபை

உதயன்


சுடர் 30 | கதிர் 310 | வள்ளுவர் ஆண்டு 2046 | புரட்டாதி 15, வெள்ளிக்கிழமை 02.10.2015

## வவுனியா அரச அதிபர் இடமாற்றம்

வவுனியா, ஒக். 2
வவுனியா மாவட்ட அரச அதிபர் எம்.கே. பந்துல ஹரிச்சந்திர எதிர்வரும் 8ஆம் திகதி முதல் காலிமாவட்டத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.
வடக்கு மாகாண சபையுடன் ஏற்பட்ட முறு பக்கம் 24

# வாக்கெடுப்பின்றி நிறைவேறியது அமெ. தீர்மானம்

### நேற்றும் மாற்றங்கள் மேற்கொள்ள இலங்கை அரசு கடும் பிரயத்தனம்



ஜெனிவா, ஒக்ரோபர் 2
இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளை ஊக்குவித்தல் என்ற தலைப்பில் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் அமெரிக்கா தலைமையிலான நாடுகளால் முன்வைக்கப்பட்ட உள்ளக விசாரணையை வலியுறுத்தும் தீர்மானம் நேற்று ஏகமனதாக நிறைவேறியது.
தீர்மானம் சமர்ப்பிக்கப்பட்ட நேற்றைய தினமும் அதில் மேலும் சில திருத்தங்களை மேற்கொள்வதற்கு இலங்கை அரச தரப்புக் கடும் முயற்சிகளை மேற்கொண்டபோதும் அதற்கு அமெரிக்கா உட்பட அனுசரணை வழங்கிய நாடுகள் மறுத்துவிட்டன.
இலங்கையில் போரின்போது இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள், போர்க் குற்றங்கள் ஆகியவை குறித்து விசாரணை மேற்கொள்வதற்காக பொதுநலவாய மற்றும் வெளிநாட்டு நீதிபதிகள், வழக்கறிஞர்கள், சட்டவாளர்கள் ஆகியோரை உள் பக்கம் 23

## ஹுசைனின் கருத்து; பரணகம கண்டனம்

கொழும்பு, ஒக்.2
ஐ.நா. மனித உரிமைகள் சபையின் ஆணையாளர் சயிட் அல் ஹுசைனின் கருத்துக்குக் காணாமற்போனவர்கள் தொடர்பான ஜனாதிபதி ஆணைக் குழுவின் தலைவர் முன்னாள் நீதிபதி பராக்கிரம மக்ஸ்வெல் பரணகம கடும் அதிருப்தி வெளியிட்டுள்ளார்.
காணாமற்போனோர் குறித்த முறைப்பாடுகளை விசாரிக்க முன்னைய அரசின் காலத்தில் பக்கம் 24

## இலங்கையில் அதிகாரப் பகிர்வை ஐ.நாவில் வலியுறுத்திய இந்தியா

ஜெனிவா, ஒக்.2
இலங்கையில் 13ஆவது அரசமைப்புத் திருத்தத்தின் கீழ் அதிகாரப் பரவலாக் கலை இந்தியா வலியுறுத்துவதாக ஐ. நா. மனித உரிமைகள் சபையில் இந்திய பிரதிநிதி தெரிவித்தார்.
ஐ. நா. மனித உரிமைகள் சபையில் நேற்று இலங்கை தொடர்பான அமெரிக்கத் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட பின்னர் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு பக்கம் 24

## தலையணையில் முகம் கவிழ்த்து மூச்சுத் திணறியதில் குழந்தை சாவு

### ஊரெழு கிழக்கில் பரிதாபச் சம்பவம்

யாழ்ப்பாணம், ஒக். 2
பக்கத்துக்குத் தலையணை அணைப்பு எதுவுமின்றித் தலைக்கு மாத்திரம் தலையணை வைத்து நித்திரையாக்கப்பட்ட ஒன்றரை வயதுக் குழந்தை முகம் திரும்பி தலை யணையில் முகம் அழுத்தப்பட்டுச் சுவாசிக்க முடியாமல் பரிதாபகரமாக உயிரிழந்தது.
ஊரெழு கிழக்கு, ஊரெழுவில் இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. அதேஇடத் பக்கம் 24

## சுப்பர்மடத்தில் இளைஞர் கைத்துப்பாக்கியுடன் கைது

### துஷ்பிரயோக வழக்கொன்றில் தேடப்பட்டவர்

வடமராட்சி, ஒக். 2
பருத்தித்துறை, சுப்பர்மடம் பகுதியில் பொலிஸாரின் சோதனை நடவடிக்கையின்போது கைத் துப்பாக்கியுடன் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.
அவர் நேற்றுப் பருத்தித்துறை நீதிமன்றில் முற்படுத்தப்பட்டவேளை, அவரை எதிர்வரும் 12 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.
கைது செய்யப்பட்ட பக்கம் 24

## சிறுவர் துஷ்பிரயோகத்துக்கு எதிராக நேற்றுப் பேரணிகள்



யாழ்ப்பாணம், ஒக்.2
சர்வதேச சிறுவர் தினம் நேற்று நாடளாவிய ரீதியில் கொண்டாடப்பட்ட நிலையில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் சிறுவர் மற்றும் பெண்கள் துஷ்பிரயோகத்துக்கு எதிரான பேரணிகள் பல இடங்களில் நடத்தப்பட்டன.
விரிவு 02

## தீர்மானத்தில் திருத்தத்தை ஏற்கின்றோம்
– கூட்டமைப்பு

ஜெனிவா, ஒக்.2
ஜெனிவா மனித உரிமைகள் ஆணையகத்தில் இலங்கை தொடர்பாக அமெரிக்காவினால் சமர்ப்பிக்கப்பட்ட தீர்மானத்தில் சில பகுதிகள் நீக்கப்பட்டிருக்கின்ற போதிலும் மேலும் சில பகுதிகள் கடுமையாக்கப்பட்டுள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது. பக்கம் 23

## பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைப்பதற்கான திருப்புமுனை

### அமெரிக்கத் தீர்மானம் குறித்து சர்வதேச மன்னிப்புச் சபை கருத்து

ஜெனிவா, ஒக். 2
இலங்கை தொடர்பாக ஐ. நா. மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் நல்லெண்ணெத்துடன் செயற்படுத்தப்பட்டால், பாதிக்கப்பட்டவர்கள் நீண்ட காலமாக காத்திருக்கின்ற நீதியும் உண்மையும் கிடைப்பதற்கான வாய்ப்புள்ளது எனச் சர்வதேச மன்னிப்புச் சபையின் தென் ஆசியாவுக்கான ஆய்வாளர் இயக்குநர் டேவிட் கிரிவ்த்ஸ் தெரிவித்துள்ளார்.
இது தொடர்பில் அவர் நேற்று வெளியிட்டுள்ள செய்திக் பக்கம் 24

## இலங்கையைக் கண்காணிக்க செலவினம் 3, 37, 800 டொலர்

ஜெனிவா, ஒக். 2
ஐ.நா. தீர்மானத்தை இலங்கை நடைமுறைப்படுத்துகின்றதா என்பதைக் கண்காணிப்பதற்கு 3 லட்சத்து 37 ஆயிரத்து 800 அமெரிக்க டொலர் நிதி தேவை என்று, ஐ.நா. மனித உரிமைகள் சபை தெரிவித்துள்ளது. இந்த நிதியை உறுப்பு நாடுகளிடம், மனித உரிமைகள் சபை கோரி பக்கம் 24

## தந்தை செல்வா விரும்பிய தீர்வையே நாம் ஏற்போம்

### எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தன் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், ஒக். 2
தந்தை செல்வாவினால் ஏற்றுக்கொள்ளக் கூடிய ஓர் தீர்வையே – தமிழ் மக்களின் தீர்வாக நாங்கள் ஏற்றுக்கொள்வோம். தந்தை செல்வா எவ்வாறு தமிழ் மக்களுக்காகக் கடைசி வரை போராடினார். அதே போன்று நாமும் கடைசி வரை போராடுவோம். நாம் தமிழ் மக்களை ஒரு போதும் கைவிடமாட்டோம்.
இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.
யாழ்.புனித பத்திரிசியார் கல்லூரியில் நேற்று இடம்பெற்ற முத் பக்கம் 23

## தேசிய சிறுவர் தின நிகழ்வு நேற்று யாழ்ப்பாணத்தில்

யாழ்ப்பாணம், ஒக். 2
மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சின் ஏற்பாட்டில் சர்வதேச சிறுவர் தினத்தின் தேசிய ரீதியான நிகழ்வு நேற்று யாழ்ப்பாணத்தில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.
யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நேற்றுக் காலை 10 மணிக்கு மங்கள விளக்கேற்றலுடன் ஆரம்பமான இந்தச் சிறுவர் தின நிகழ்வில் பக்கம் 24

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச சிறுவர் தினம் யாழில் சிறப்புற நடந்தது

யாழ்ப்பாணம், ஒக்.2

சர்வதேச சிறுவர்தினம் நேற்று வடக்கில் பல இடங்களில் வெகு சிறப்பாக கொண்டாடப்பட்டது

வடக்கில் யாழ்ப்பாணம், வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் உள்ள பாடசாலைகள், பொது அமைப்புகள், சன சமூக நிலையங்கள் என பல இடங்களில் சிறுவர்தினம் வெகு சிறப்பாக கொண்டாடப்பட்டுள்ளது.



**யாழ்ப்பாணம்**

மகளிர் விவகார அமைச்சின் ஏற்பாட்டில் சர்வதேச சிறுவர் தினத்தின் பிரதான நிகழ்வு யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் கொண்டாடப்பட்டது. அதே போன்று யாழ். பொது நூலகத்திலும் சிறுவர்களுக்கான விளையாட்டுக்கள், அவர்களை மகிழ்வூட்டும் செயற்பாடுகளுடன் சிறுவர்தினம் கொண்டாடப்பட்டது.

யாழ்ப்பாணம் சாவகச்சேரியில் சாவகச்சேரி லயன்ஸ் கழகமும் தேசிய சேமிப்பு வங்கியின் சாவகச்சேரி கிளை ஆகியவை இணைந்து சாவகச்சேரி புவேந்தன் பாலர் பராமரிப்பு நிலையத்தில் சிறுவர் தின விழாவினை நடாத்தினர். நிலையத் தலைவர் வை.இராஜரத்தினம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் சாவகச்சேரி லயன்ஸ் கழக தலைவர் லயன் பு.டினேஸ் குமார் தலைமையில் லயன்ஸ் கழக உறுப்பினர்களும் தேசிய சேமிப்பு வங்கியின் சாவகச்சேரி கிளை முகாமையாளர் அ.கங்காததரனும் தென்மராட்சி பிரதேச செயலக சிறுவர் நன்நடத்தை அலுவலர் கஜன் ஆகியோரும் விருந்தினர்களாக கலந்து கொண்டனர்.

நிலையச் சிறார்கள் விருந்தினர்களால் மாலை அணிவிக்கப்பட்டு பாண்ட் வாத்திய சகிதம் ஊர்வலமாக அழைத்துவரப்பட்டனர். சாவகச்சேரி லயன்ஸ் கழகம் மற்றும் தேசிய சேமிப்பு வங்கிக் கிளையினால் சிறார்களுக்கு பரிசில்களும் இனிப்பு வகைகளும் வழங்கப்பட்டன.



**வவுனியா**

வவுனியா தெற்கு கல்வி வலயத்தால் நடாத்தப்பட்ட சிறுவர் தின விழா நெளுக்குளம் கலை மகள் வித்தியாலயத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் சிறுவர்களின் கலை நிகழ்வுகள் பல இடம்பெற்றதுடன் சிறுவர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

இவ்விழாவில் உதவிக்கல்விப் பணிப்பாளர் கே.கணேசபாதம் பிரதிக் கல்விப்பணிப்பாளர் நா. மாணிக்கவாசகம் ஆசிரிய ஆலோசகர் எஸ். விஜயகாந்தன் ஆசிரியஆலோசகர் கி.உதயகுமார் ஓய்வு பெற்ற அதிபர் திரு.தர்மகுலசிங்கம் ஓய்வு பெற்ற அதிபர் திருமதி தர்மகுலசிங்கம் மற்றும் வவுனியா தெற்கு வலயத்தை சார்ந்த நெளுக்குளம் கலைமகள் வித்தியாலய அதிபர் சு.அமிர்தலிங்கம் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

அத்தோடு வவுனியா மரக்காரம்பளை அ.த.க.பாடசாலை, வவுனியா புதுக்குளம் கனிஸ்ட வித்தியாலயம், சுந்தரேஸ்வரி அம்பாள் முன்பள்ளி சாஸ்திரிகூழாம்குளம், நெளுக்குளம் பாலர்பாடசாலை, நம்பிக்கை வாசல் சர்வதேச முன்பள்ளி என்பவற்றிலும் சிறுவர் தினம் வெகு சிறப்பாக கொண்டாடப்பட்டது. இந்த விழாவுக்கு விருந்தினராக சென்ற வடக்கு மாகாண உறுப்பினர் இந்திரராசாவால் சிறுவர்கள் கௌரவிக்கப்பட்டனர். அத்தோடு புதிய வீட்டுத்திட்டம் மணிப்புரம் ஸ்ரீ துர்க்கை அம்மன் முன்பள்ளியில் இடம்பெற்ற சிறுவர் தின நிகழ்வுகளில் முன்பள்ளியின் ஆசிரியர் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வுகளில் வவுனியா பிரதேச செயலாளர் திரு. கா. உதயராஜா கலந்து கொண்டு சிறுவர்களுக்கு பரிசில்களை வழங்கினார். கிராமசேவையாளர் வை.நசார், கிராம அபிவிருத்திச்சங்கத்தினர் என பலரும் கலந்து கொண்டனர். சிறுவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

வவுனியா சின்னப்புதுக்குளம் வாணி முன் பள்ளியில் இடம்பெற்ற சிறு வர் தின நிகழ்வுகளில் வவு னியா சிவில் பாதுகாப்பு பொறுப்பதிகாரி கிராம சேவையாளர் வேலுப்பிள்ளை மற்றும் சதாசகாய மாதா முன்பள்ளி மாணவர்களும் இணைந்து இந்நிகழ்வுகளை ஏற்பாடு செய்திருந்தனர். ஆசிரியர்கள், பெற்றோர்கள் என பலரும் கலந்துகொண்டனர். சிறுவர்களுக்கான பரிசில்களை வவுனியா மாவட்ட சிவில் பாதுகாப்பு அதிகாரி வழங்கினார்.

**கிளிநொச்சி**

கிளிநொச்சி பழைய மாவட்ட செயலகத்தில் நேற்று சிறுவர் தினம் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது. தெற்கில் உள்ள நூறுக்கும் மேற்பட்ட சிறுவர்களுடன் கிளிநொச்சி சிறுவர்களும் இணைந்து குறித்த சிறுவர் தினத்தை கொண்டாடினர். இந்த சிறுவர் தினத்தில் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் உட்பட பலர் கலந்துகொண்டிருந்தனர். சிறுவர்களுக்கான நிகழ்வுகள், போட்டிகள் கௌரவிப்புக்கள் என்பனவும் அங்கு இடம்பெற்றன.

அத்தோடு கிளிநொச்சி மத்திய கல்லூரி, இந்துக் கல்லூரி, உட்பட பல பாடசாலைகளிலும் சிறுவர் தினம் வெகு சிறப்பாக கொண்டாடப்பட்டுள்ளது. கலை நிகழ்வுகளை உள்ளடக்கி குறித்த சிறுவர் தினம் சிறுவர்களை மகிழ்வூட்டும் விதமாக இடம்பெற்றுள்ளது.

இவ்வாறு சர்வதேச சிறுவர் தினம் வடக்கில் பல பாகங்களில் வெகு சிறப்பாக இடம்பெற்றுள்ளது. மன்னார் மாவட்டத்தில் சிறுவர் தினம் பாடசாலை மட்டங்களில் மேற்கொள்ளப்பட்ட போதும் சிறுவர் பெண்களுக்கு எதிரான பொது கூட்டமாக இடம்பெற்றது. இது போன்று முல்லைத்தீவிலும் சிறுவர் தினம் பாடசாலை மட்டங்களில் இடம்பெற்றுள்ளன. (ற-21,ரி,135,402,86,106)



# சிறுவர் துஷ்பிரயோகத்துக்கு எதிராக நேற்றுப் பேரணிகள்

## சர்வதேச் சிறுவர் தினத்தை முன்னிட்டு

யாழ்ப்பாணம், ஒக்.2

சர்வதேச சிறுவர் தினம் நேற்று நாடளாவிய ரீதியில் கொண்டாடப்பட்ட நிலையில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் சிறுவர் மற்றும் பெண்கள் துஷ்பிரயோகத்துக்கு எதிரான பேரணிகள் பல இடங்களில் நடத்தப்பட்டன.

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற பேரணியை யாழ். மாவட்ட தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கம் ஏற்பாடு செய்திருந்தது. அதில் மாவட்ட மீனவ ஒத்துழைப்பு இயக்கம், தேசிய பெண்கள் சம்மேளனம், யாழ். மாவட்ட கிராமிய உழைப்பாளர் சங்கம், வலி வடக்கு பிரஜைகள் குழு என்பன இணைந்திருந்தன.

யாழ். மத்திய பஸ் நிலையத்தில் ஆரம்பமான பேரணி ஆஸ்பத்திரி வீதியூடாக யாழ். மாவட்ட செயலகத்தை அடைந்தது.

பேரணியில் கலந்துகொண்டிருந்த வர்கள் 'உரிமைக்காய் போராடுவோம். மனித மாண்பினை வளர்த்திட ஒன்றிணைவோம்', 'குற்றச் செயல்கள் அதிகரிப்பதன் மர்மம் தான் என்ன? அரசே பதில் சொல்லு', 'சிறுவர் உரிமையைப் பறிக்காதே', 'சிறுவர் மற்றும் பெண்களின் உரிமைகளை பாதுகாக்கின்ற மற்றும் அவர்களை கௌரவத்துடன் நடத்துகின்ற சமூகத்தை கட்டியெழுப்புவதற்காக ஒன்றிணைவோம்', 'காவல் துறையினரே குற்றவாளிகளை கைது செய்து நடவடிக்கை எடுங்கள்', 'சிறுவர்களை பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தாதே', 'எம் இளம் சமுதாயத்தை திட்டமிட்டு சீர்குலைக்காதே', 'அரசினதும் காவல்துறையினதும் அசமந்தப் போக்கே குற்றங்கள் அதிகரிக்கக் காரணம்', 'காம வெறியர்களால் எம் இனம் வாழாமல் இடையில் அழிந்து போகின்றதே', 'குடி குடியைக் கெடுக்கும்', 'காவல்துறையினரே குற்றவாளிகளை கைதுசெய்து தண்டனை கொடுங்கள்' போன்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தியிருந்தனர்.

பேரணியின் முடிவில் ஜனாதிபதிக்கான மனு யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் (காணி) சு.முரளிதரனிடம் கையளிக்கப்பட்டது.

உரும்பிராய் பிள்ளையார் ஆலயம் முன்பாக இதுவரை ஏற்பட்ட அனர்த்தங்களின்போது உயிர்நீத்த சிறுவர்களுக்கான பிரதான ஈகைச் சுடரேற்றலுடன் வயாவிளான் மத்திய கல்லூரி மாணவர்களின் ஊர்திப் பவனி நடைபெற்றது. உரும்பிராய் சந்தியில் அமைந்துள்ள ஆலய முன்றலில் இருந்து கல்லூரி வளாகம் வரைக்கும் ஈகைச்சுடர் பவனி இடம்பெற்றது. முதலில் பிரதான சுடர் ஏற்றப்பட்டு பிரதான வீதி வழியாகச்சென்று கல்லூரியை அடைந்தது. இந்த நிகழ்வில் வட மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் பிரதம விருந்தினராக கலந்துகொண்டதுடன் ஆசிரியர்கள் மாணவர்கள் மற்றும் வட மாகாணசபை உறுப்பினர் பா. கஜதீபன் ஆகியோர் கலந்துகொண்டனர்.



சர்வதேச சிறுவர் தினமான நேற்று கொட்டதெனியாவ சிறுமிக்கு நடந்த கொடுமைக்கு நீதி கோரி முள்ளியவளை வித்தியானந்தக் கல்லூரி மாணவர்களால் ஆர்ப்பாட்டம் ஒன்று மேற்கொள்ளப்பட்டது. கல்லூரி மாணவர்கள் அனைவரும் திரண்டு இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

'சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் பெண்களுக்கு எதிரான வன்முறை மற்றும் போதை பொருள்களை ஒழிப்போம்' என்ற நோக்கில் சிறுவர் மற்றும் வயோதிபர் தினத்தை ஒட்டி நேற்று நிகழ்வு ஒன்று மன்னாரில் நடைபெற்றது. அதில் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டு கொலைசெய்யப்புட்ட சிறார்கள் மற்றும் பெண்களுக்கு நடந்த அநீதி ஏனைய சிறுவர்கள் மற்றும் பெண்களுக்கு நடக்காமல் இருப்பதற்கு தகுந்த நடவடிக்கையை உடனே எடுத்து பெண்கள் உரிமைகளை பாதுகாக்க வேண்டும்' என மன்னாரில் பெண்கள் அமைப்புகள் வேண்டுகோள் விடுத்தன.

மன்னார் புனித செபஸ்தியார் கோவிலில் பேரணி நிகழ்வொன்று மன்னார் மீனவ ஒத்துழைப்பு பேரவையின் ஏற்பாட்டில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் வட மாகாண கடற்றொழில் மற்றும் போக்குவரத்து அமைச்சர் பா.டெனிஸ்வரன், பேரவையின் உறுப்பினர் அந்தோனி பிறிமுஸ் சிராய்வா, தமிழ் அரசு கட்சியின் இளைஞர் அணி செயலாளர் வி.எஸ். சிவகரன், மன்னார் பிரஜைகள் குழுவின் செயலாளர் பீ.ஏ. அந்தோனி மார்க், அதன் உத்தியோகத்தர் ஏ.சகாயம், அருட்தந்தையர்கள், அருட்சகோதரர்கள், பெண்கள் அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் பாடசாலை சிறார்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். புனித செபஸ்தியார் கோவிலில் இருந்து புறப்பட்ட பேரணி ஊர்வலமாக சென்று மன்னார் மாவட்ட செயலகத்தை அடைந்து அங்கு மன்னார் மாவட்ட செயலாளரிடம் மனு வழங்கப்பட்டது.

திருகோணமலையில் சிறுவர் மற்றும் பெண்களுக்கு எதிரான வன்முறை மற்றும் போதைப் பொருள்களுக்கு எதிரான சமாதான ஊர்வலம் திருகோணமலை உதயம் மாவட்ட குடும்ப தலைமைத்துவ பெண்கள் அமைப்பால் முன்னெடுக்கப்பட்டது. இந்த ஊர்வலம் திருகோணமலை மக்கேசர் விளையாட்டரங்கு முன்றலில் ஆரம்பமாகி திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச செயலகம் வரை சென்றது.

கல்முனை கார்மேல் பற்றிமா கல்லூரி தேசிய பாடசாலையிலும் சிறுவர் தினத்தை முன்னிட்டு சிறுவர்கள் அவர்களது உரிமைகள் தொடர்பான பதாகைகளை ஏந்தப்பட்டு கொண்டாடப்பட்டது.

(ற-10,7,40,101,56)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பாலியல் லஞ்சம் கேட்கின்றார்கள்!

## முழங்காவிலில் இந்திய வீட்டுத் திட்டப் பயனாளிகளான பெண்கள் குற்றச்சாட்டு செஞ்சிலுவைச் சங்கப் பணியாளர்கள் மீது விசாரணைகள் ஆரம்பம்

கிளிநொச்சி, ஒக். 2
போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான இந்திய வீட்டுத் திட்ட உதவியை வழங்குவதற்கு பாலியல் லஞ்சம் கோரப்பட்டுள்ளது என்று குற்றச்சாட்டு எழுந்துள்ளது.
கிளிநொச்சி முழங்காவில் பகுதியில் மேற்கொள்ளப்பட்டுவரும் இந்தத் திட்டத்தின் கீழான பயனாளிப் பெண் ஒருவரிடம் இருந்து பாலியல் லஞ்சம் கோரப்பட்டுள்ளது. இது குறித்து இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் கிளிநொச்சி மாவட்ட அலுவலகத்தில் அந்தப் பெண் நேரடியாக முறையீடு செய்திருக்கிறார்.
இந்திய வீட்டுத் திட்டத்தை வடக்கில் செயற்படுத்தும் ஒரு பங்காளியாக இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம் உள்ளது. திட்டத்தை நடைமுறைப் படுத்துபவர்களாகச் சங்கத்தின் கொழும்பு அலுவலகத்தைச் சேர்ந்த அதிகாரிகளே உள்ளனர் என்று உள்ளூரைச் சேர்ந்த சங்க உறுப்பினர்கள் உதயன் பத்திரிகையிடம் தெரிவித்தனர்.
முழங்காவில் பகுதிகளில் இந்திய வீட்டுத் திட்டப் பணிகள் 2012ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டுத் தொடர்கின்றன. இந்தத் திட்டத்தின் கீழ் கட்டம் கட்டமாகவே நிதி விடுவிக்கப்படும். முதற்கட்ட நிதிக்கான வேலைகள் பூர்த்தியாக்கப்பட்டதும் அடுத்த கட்டம் விடுவிக்கப்படும்.
இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க கொழும்பு அதிகாரிகளே நிதி விடுவிப்புக்கான அனுமதியை வழங்குபவர்கள். அவர்களில் இருவரே, நிதியை விடுவிப்பதற்காகப் பாலியல் லஞ்சம் கோரினர் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. இது தொடர்பில் செஞ்சிலுவைச் சங்கத்தின் கிளிநொச்சி மாவட்ட அலுவலகமும் கொழும்பில் இருந்து அனுப்பப்பட்ட விசேட அலுவலகமும் விசாரணைகளை மேற்கொண்டன.
இதன்போது பாலியல் லஞ்சம் தொடர்பான பல சம்பவங்கள் இனங் காணப்பட்டுள்ளன என்று உதயன் பத்திரிகைக்கு அறிய வந்தது. கணவனை இழந்த பெண் ஒருவரே இது குறித்து துணிந்து முறைப்பாடு செய்துள்ளார். எனினும் வேறு பலரிடமும் இவ்வாறே பாலியல் லஞ்சம் கோரப்பட்டுள்ளது என்றும் சிலர் அந்தக் கோரிக்கைக்கு இணங்கிச் சென்றுள்ளனர் என அறியப்படுகிறது என்றும் தெரிவிக்கப்படுகிறது.
"விடுமுறை நாளில் அவர் குறிப்பிடும் இடத்துக்குச் சென்று மேலதிகாரியைச் சந்தித்தீர்களானால் இலகுவில் நிதியை விடுவித்துவிடலாம்" என்று தொழில்நுட்ப அலுவலர் ஒருவர் குறித்த விதவைப் பெண்ணிடம் தெரிவித்திருக்கிறார் என்று உதயன் பத்திரிகை அறிந்தது.
அதேசமயத்தில், வீட்டுத்திட்டப் பயனாளிகளான பெண்களுக்கு பணத்தை உரிய காலத்தில் வழங்காமல் இழுத்தடிக்கிறார்கள் எனவும், பணத்தைக் கேட்டால் மனிதாபிமானமற்ற முறையில் பேசி மிரட்டுகிறார்கள் எனவும் எதிர்த்துக் கதைத்தால் வீட்டுத் திட்டத்தையே இல்லாமல் செய்வோம் என எச்சரிக்கிறார்கள் எனவும் பல பெண்கள் செஞ்சிலுவை சங்க தொழில்நுட்ப அலுவலர்களுக்கு எதிராகவும் முறைப்பாடுகளைக் கூறுகின்றனர்.

**வீட்டுத் திட்டத்தின் கீழ் கட்டம் கட்டமாகவே நிதி விடுவிக்கப்படும். முதற் கட்ட நிதிக்கான வேலைகள் பூர்த்தியாக்கப்பட்டதும் அடுத்த கட்டம் விடுவிக்கப்படும். இலங்கைச் செஞ் சிலுவைச் சங்க கொழும்பு அதிகாரிகளே நிதி விடுவிப்புக்கான அனுமதியை வழங்குபவர்கள்.**

" இவ்வாறான முறைப்பாடுகள் என்னிடமும் வழங்கப்பட்டுள்ளன. ஆரம்பத்தில் பாலியல் இலஞ்சம் கோருவதான முறைப்பாடுகள் எங்களுக்குக் கிடைக்கப்பெறவில்லை. காசு மோசடி செய்கின்றனர், நெருக்கடி கொடுக்கின்றனர், காசை ஒழுங்காக தருகின்றார்கள் இல்லை, அடிப்பதற்கு வருகின்றனர் போன்ற முறைப்பாடுகளே எமக்கு கிடைத்தன. இவை குறித்து நாங்கள் விசாரித்த போது பாலியல் லஞ்சம் குறித்த முறைப்பாடுகளும் எங்களுக்கு கிடைத்தன" என்று உதயன் பத்திரிகையிடம் தெரிவித்தார் செஞ்சிலுவைச் சங்கத்தின் கிளிநொச்சி மாவட்ட செயலாளர் த.சேதுபதி.
"25க்கு மேற்பட்ட முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. அவற்றின் மீது எங்களால் நடவடிக்கை எடுக்க முடியாது. தலைமைக் காரியாலயமே இதற்கான நடவடிக்கை மேற்கொள்ள முடியும். எனவே முறைப்பாடுகள் குறித்து நான் நேரில் சென்று தகவல்களைத் திரட்டி தலைமை காரியாலயத்துக்கு அனுப்பி வைத்தேன். அதன் பின்னர் தலைமை காரியாலயத்தில் இருந்து வந்த அலுவலகர் பாதிக்கப்பட்ட பெண்ணை நேரடியாக சந்தித்து அவரிடம் வாக்கு மூலங்களையும் பெற்றுள்ளார்" என்று அவர் மேலும் தெரிவித்தார்.
"எமக்கும் முறைப்பாடுகள் கிடைத்தன. அதனடிப்படையில் ஆரம்ப கட்ட விசாரணைகள் தொடங்கப்பட்டுள்ளன. விசாரணையின் முடிவின் பின்பே நடவடிக்கைகள் குறித்துத் தெரிவிக்க முடியும்" என்று கூறினார் இலங்கை செஞ்சிலுவை சங்கத்தின் தேசிய செயலாளர் நிமால் குமார்.
(உ-21,426)

**"25க்கு மேற்பட்ட முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. அவற்றின் மீது எங்களால் நடவடிக்கை எடுக்க முடியாது. தலைமைக் காரியாலயமே இதற்கான நடவடிக்கை மேற்கொள்ள முடியும் என்கிறார் செஞ்சிலுவைச் சங்கத்தின் கிளிநொச்சி மாவட்ட செயலாளர்.**

## எள்ளுக்காடு சிறுமி வழக்கு: சந்தேகநபருக்கு மறியல் நீடிப்பு

கிளிநொச்சி, ஒக்.2
கிளிநொச்சி எள்ளுக்காட்டில் 3 வயது சிறுமியை பாலியல் துஷ்பிரயோகம் செய்தார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட சிறுவனை தொடர் விளக்கமறியலில் வைக்குமாறு கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்ற நீதிபதி உத்தரவிட்டார்.
கிளிநொச்சி உருத்திரபுரம் எள்ளுக்காட்டுப் பகுதியில் காணாமல் போன சிறுமி பின்னர் உருக்குலைந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டார். சிறுமியை துஷ்பிரயோகம் செய்தார் என்ற குற்றச்சாட்டில் சிறுமியின் ஒன்றுவிட்ட சகோதரன் கைது செய்யப்பட்டிருந்தார்.
குறித்த வழக்கு நேற்றுமுன்தினம் விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்பட்டது. இருப்பினும் குறித்த வழக்கை எதிர்வரும் 14ஆம் திகதிக்கு தள்ளி வைத்ததுடன் சிறுவனை யாழ்ப்பாணம் அச்சுவேலி சான்று பெற்ற சிறுவர் நன்னடத்தை இல்லத்தில் சேர்க்குமாறும் உத்தரவிட்டார் கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்ற நீதிபதி எம்.ஐ.வகாப்தீன். (ற-ரி3)

## கொட்டதெனியாவ சிறுமி கொலையை கண்டித்து நாளை யாழில் ஆர்ப்பாட்டம்

யாழ்ப்பாணம், ஒக். 2
கொட்டதெனியாவ சிறுமி வன்புணர்வுக்குட்படுத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்டமையைக் கண்டித்து நாளை யாழ்ப்பாணத்தில் கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தப்படவுள்ளது. சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பின் ஏற்பாட்டில் நாளை சனிக்கிழமை மு.ப 10 மணிக்கு யாழ். மத்திய பஸ் நிலையத்துக்கு முன்பாக குறித்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட உள்ளது.
இது தொடர்பில் அமைப்பின் இணைச்செயலாளர் ச.தனுஜன் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளார். அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-
சிறுவர்கள் பெண்களுக்கு எதிரான பாலியல் வன்முறைகளும் துஷ்பிரயோகங்களும் படுகொலைகளும் மிகவும் அதிகரித்துச் செல்லும் அபாயமான சூழல் நாட்டில் தோன்றியுள்ளது. இது ஒட்டுமொத்த மக்களின் வாழ்க்கையையும் பாதிக்கும். இந்தப் படுபாதகச் செயல்கள் சின்னஞ்சிறு குழந்தைகள் மீது கட்டவிழ்த்து விடப்படுவது கண்டிக்கத்தக்கது.
உரிய சட்டங்கள் மூலம் தொடர்ச்சியாக இப்படியான சம்பவங்கள் நடைபெறாது தவிர்ப்பது அரசின் கடமையாகும். இந்த வருடத்தில் இதுவரை சுமார் 6 ஆயிரத்து 500 பெண்கள், சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகள் கட்டவிழத்துவிடப்பட்டுள்ளமை பதிவுசெய்யப்பட்டுள்ளது. இவற்றைக் கண்டித்தும் போதைப் பாவனையை கட்டுப்படுத்தக் கோரியும் பாரபட்சமின்றிய சட்ட நடவடிக்கையை வலியுறுத்தியும் ஆர்ப்பாட்டம் நடத்தப்படவுள்ளது.-என்றுள்ளது. (ற-10)

### காரைநகர் சிறுமி துஷ்பிரயோக வழக்கு:

## சோதனைக்குட்படுத்தப்படவுள்ளது சந்தேக நபர்களின் இரத்தமாதிரி

யாழ்ப்பாணம், ஒக்.2
காரைநகர் சிறுமியின் வன்புணர்வுடன் தொடர்புடையவர்கள் எனச் சந்தேகிக்கப்படும் கடற்படை சிப்பாய்களின் இரத்தமாதிரிகள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளன.
கடந்த வருடம் ஜூலை மாதம் 15 ஆம் திகதி பாடசாலை சிறுமிகள் இருவர் குறித்த பகுதியைச் சேர்ந்த கடற்படைச் சிப்பாய்களால் தொடர்ச்சியாக பதினொரு நாள்கள் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்டனர் என்று சிறுவர் குற்றவியல் நீதிமன்றத்தில் வழக்குப் பதிவு செய்யப்பட்டது.
அதையடுத்து குறித்த கடற்படை முகாமில் பணியிலிருந்த ஏழு கடற்படைச் சிப்பாய்கள் கைதுசெய்யப்பட்டு சிறுவர் குற்றவியல் நீதிமன்றத்தில் அடையாள அணி வகுப்புக்காக நிறுத்தப்பட்டனர். எனினும் குறித்த சிறுமியால் குற்றவாளியை அடையாளம் காட்ட முடியவில்லை. அதனால் அந்தச் சமயம் குறித்த படை முகாமிலிருந்து விடுமுறையில் சென்ற இரு சிப்பாய்களை நீதிமன்றில் முற்படுத்துமாறும், சிறுமியிடம் காணொலி மூலமான வாக்குமூலத்தைப் பெற்றுக் கொள்ளுமாறும், குறித்த சிறுமியை கடற்படைச் சிப்பாய் அழைத்துச் சென்றபோது தடுத்து நிறுத்தியவர் என்று சந்தேகிக்கப்படும், மனநிலை பாதிக்கப்பட்டவர் என்று கூறப்பட்ட நபர் தொடர்பான விடயங்களையும் விசாரணை செய்யுமாறும் ஊர்காவற்றுறை பொலிஸ் பிரிவுக்கு சிறுவர் குற்றவியல் நீதிமன்ற நீதிபதி திருமதி ஜீவராணி கறுப்பையா உத்தரவிட்டிருந்தார்.
கடந்த வருடம் ஜூலை மாதம் 31 ஆம் திகதி வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது, விசாரணைகள் முறையாக மேற்கொள்ளப்படாத காரணத்தால் ஊர்காவற்றுறை பொலிஸ் பிரிவுக்கான பொலிஸ் அத்தியட்சகரை நீதிமன்றத்தில் முன்னிலையாகும்படி நீதிவான் உத்தரவிட்டார்.
செப்ரெம்பர் 4 ஆம் திகதி நீதிமன்றத்தில் முன்னிலையான பொலிஸ் அத்தியட்சகர் விடுமுறையில் சென்ற இரண்டு சிப்பாய்களிடமும் வாக்குமூலம் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது என்றும் விசாரணையின் அடிப்படையில் அவர்கள் குற்றமற்றவர்கள் என்பது புலனாகியது என்றும் தெரிவித்தார்.
பொலிஸார் இன்றுவரை சீராக நீதிமன்றத்தின் உத்தரவுகளைச் சமர்ப்பிக்காத காரணத்தால், தொடர்ச்சியான ஒத்திவைப்புக்களுடன் குறித்த வழக்கு ஒரு வருடத்துக்கு மேலாக நீடிப்புச் செய்யப்பட்டுள்ளது.
இந்நிலையிலே தற்போது சிப்பாய்களின் இரத்த மாதிரிகள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு அதன் அறிக்கை எதிர்வரும் 29 ஆம் திகதி நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது. கடற்படைச் சிப்பாய்கள் சார்பாக கொழும்பைச் சேர்ந்த சட்டத்தரணி ஒருவர் முன்னிலையாகியுள்ளார். சிறுமியின் தரப்பில் யாரும் முன்னிலையாகவில்லை என நீதிமன்றத் தரப்பினர் தெரிவித்துள்ளனர். (ற-ரி5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மயிலிட்டித் துறைமுகம் வளலாயில் வேண்டாம்

## படையினர் கோரிக்கையை மீனவ சங்கங்கள், மீள்குடியேற்ற குழு கூட்டாக நிராகரிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 02
மயிலிட்டித் துறைமுகத்தை வளலாயில் அமைப்பதற்கு பாதுகாப்புத் தரப்பினரால் முன்வைக்கப்பட்ட கோரிக்கையை, மீனவ சங்கங்கள், மீள்குடியேற்ற குழு என்பன கூட்டாக இணைந்து நிராகரித்துள்ளன.

மயிலிட்டித் துறைமுகத்தை வேறு எந்தவொரு இடத்துக்கும் மாற்ற வேண்டாம். வடக்கு மாகாணத்துக்கே பொதுவான துறைமுகம் மயிலிட்டி தான் என்று தெரிவித்து மீனவ சங்கங்கள் எழுத்துமூலமான பதிலை வழங்கியுள்ளன.

நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்னர் பலாலி இராணுவத் தலைமையகத்தில் அப்போதைய பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் பஸ்நாயக்கா தலைமையில் கலந்துரையாடல் இடம்பெற்றிருந்தது. குறித்த கலந்துரையாடலில் மயிலிட்டித் துறைமுகத்தை வளலாயில் அமைப்பதற்கான முன்மொழிவை பாதுகாப்புத் தரப்பினர் முன்வைத்திருந்தனர்.

அதனடிப்படையில் குறித்த முன்மொழிவுக்கான சாத்தியப்பாடுகள் தொடர்பில் பதிலளிக்குமாறு யாழ். மாவட்டச் செயலகத்துக்கு பாதுகாப்புத் தரப்பினரால் கடந்த மாதம் கடிதம் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. குறித்த கடிதத்தின் அடிப்படையில், சம்பந்தப்பட்ட மீனவ சங்கங்களின் கருத்துக்கள் தெல்லிப்பழை பிரதேச செயலகத்தினால் கேட்கப்பட்டிருந்தது.

தெல்லிப்பழைப் பிரதேச செயலகத்தில் கடந்த சில தினங்களுக்கு முன்னர் இது தொடர்பிலான கலந்துரையாடல் இடம்பெற்றது. பலாலி – மயிலிட்டி – ஊறணி – காங்கேசன்துறை ஆகிய 4 மீனவ சங்கங்கள் மற்றும் வலி.வடக்கு மீள்குடியேற்ற புனர்வாழ்வுச் சங்கம் ஆகியன குறித்த கலந்துரையாடலில் பங்கெடுத்திருந்தன.

இதன் போது மயிலிட்டித் துறைமுகத்தை வளலாயில் அமைப்பது தொடர்பிலான அனுமதி கேட்கப்பட்டது. அதற்கு கலந்துரையாடலில் பங்கு கொண்ட தரப்பினர் அனைவரும் இணைந்து மறுப்புத் தெரிவித்துள்ளனர். மயிலிட்டித் துறைமுகம்தான் வேண்டும் என்றும் அதனை வேறு இடத்துக்கு மாற்றுவதற்கு ஒரு போதும் ஆதரவளிக்க முடியாது என்றும் தெரிவித்துள்ளனர்.

தமது மறுப்பை எழுத்து மூலமாகவும், தெல்லிப்பழை பிரதேச செயலருக்கு, கலந்துரையாடலில் பங்கு கொண்ட சங்கங்கள் வழங்கியுள்ளன. (ற–5)

# எதிர்க்கட்சித் தலைவருக்கு யாழில் நேற்று வரவேற்பு



யாழ்ப்பாணம், ஒக்.2
எதிர்கட்சித் தலைவராகப் பதவியேற்றுக் கொண்ட பின்னர், யாழ்ப்பாணத்துக்கு முதற் தடவையாக நேற்று வந்திருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனுக்கு பிரமாண்டமான வரவேற்பு வழங்கப்பட்டது. அத்துடன் தமது பாடசாலையின் பழைய மாணவர் என்ற ரீதியில், புனித பத்திரிசியார் கல்லூரியும் எதிர்கட்சித் தலைவரைக் கௌரவித்தது.

எட்டாவது நாடாளுமன்றத்தின் எதிர்கட்சித் தலைவராக, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் கடந்த மாதம் 3 ஆம் திகதி பதவியேற்றிருந்தார். எதிர்கட்சித் தலைவராகப் பதவியேற்ற பின்னர் வடபகுதிக்கு முதல் தடவையாக இரா.சம்பந்தன் நேற்று வந்திருந்தார்.

காலை யாழ்.பொதுநூலகத்துக்கு அருகில் அமைந்துள்ள தந்தை செல்வாவின் நினைவுத் தூபிக்கு மலரஞ்சலி செலுத்தும் நிகழ்வில் இரா.சம்பந்தன் கலந்து கொண்டார். இதன் போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்ப்பாணம் – கிளிநொச்சி நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் மற்றும் வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் உள்ளிட்ட பலரும் பங்குபற்றினர்.

இதன் பின்னர் புனித பத்திரிசிரியார் கல்லூரியில் இடம்பெற்ற முத்தமிழ் நிகழ்வில், எதிர்கட்சித் தலைவர் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

பாடசாலையின் அதிபர் ம.ஜெரோட் செல்வநாயகம், 'மிகநெருக்கடியான – இக்கட்டான கால கட்டத்தில் முக்கியமான பதவியை இரா. சம்பந்தன் ஏற்றுக் கொண்டிருக்கின்றார்' என்று குறிப்பிட்டார். 'தமிழ் மக்களைப் பாதுகாக்க வாழையடி வாழையாக பல தலைவர்கள் தோன்றினார்கள். அவ்வாறு தோன்றிய தலைவர்களுள் ஒருவர்தான் இரா.சம்பந்தன்' என்று பாடசாலையின் சிரேஷ்ட ஆசிரியர் ஸ்ரென்ஸிலஸ் தெரிவித்தார்.

இதன் போது எதிர்கட்சித் தலைவருக்கு, பொன்னாடை போர்த்தி – வாழ்த்துப்பா வழங்கி பாடசாலை நிர்வாகம் கௌரவித்தது. அதே போன்று பாடசாலையின் யாழ்ப்பாண மற்றும் கொழும்பு பழைய மாணவர் சங்கங்களும் எதிர்கட்சித் தலைவரைக் கௌரவித்தன. (ற–5)

### கொலை வெறி ரசிகர்கள்



தென்னிந்திய நடிகர் விஜயின் புலி திரைப்படம் நேற்று வெளியானது. யாழ்ப்பாணத்தில் இரண்டு திரையரங்குகளில் இந்தத் திரைப்படம் திரையிடப்பட்டது. அதைப் பார்ப்பதற்குத் திரண்டவர்களைக் கட்டுப்படுத்துவதற்கு போக்குவரத்துப் பொலிஸார் களத்துக்கு வரவேண்டியிருந்தது. இவை ஒருபுறமிருக்க புலி படத்தின் கட்டவுட்களைத் தாங்கிய 'படி' ரக வாகனம் நேற்று யாழ்.நகர் வீதிகளில் உலாவியது. இந்த வாகனம் தாவடிப் பகுதியில் உள்ள மதுபான நிலையத்துக்கு முன்பாக சிறிதுநேரம் இளைப்பாறிய போது எடுக்கப்பட்ட படம் இது. (ற–101)

# சிறுவர்கள் விடயங்களில் பொறுப்புடன் செயற்படுக

## சிறுவர் விவகார அமைச்சர் சந்திரானி பண்டார ஊடகங்களுக்கு வேண்டுகோள்

யாழ்ப்பாணம், ஒக்.2
சிறுவர்களுக்கு ஏதேனும் சிரமங்கள், துஷ்பிரயோகங்கள் ஏற்பட்டால் அது குறித்த சம்பவங்களை ஊடகங்கள் வெளிப்படுத்தும்போது பொறுப்புடன் அவற்றை வெளிப்படுத்த வேண்டும். – என்று தெரிவித்தார் மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சர் சந்திரானி பண்டார.



மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சின்ஏற்பாட்டில்யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று இடம்பெற்றசர்வதேச சிறுவர் தின நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:–

இத்தகைய ஒரு தேசிய வைபவத்தில் யாழ்ப்பாணத்தில் கலந்துகொள்ள கிடைத்தமை மிக்க மகிழ்ச்சி. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனா மற்றும் பிரதமர் ரணில் விக்கிரம சிங்க ஆகியோர் தங்களது உத்தியோகபூர்வ கடமைகள் காரணமாக இங்கு வருகை தர முடியவில்லை. இருந்த போதிலும் இந்த தேசிய வைபவத்தை சிறப்புற நடத்துவதற்கு எமக்கு எல்லோரும் உதவிகள் புரிந்துள்ளார்கள். வறுமை ஒழிப்பு, வறுமை கோட்டிற்கு கீழ் வாழும் குடும்பங்களில் உள்ள பிள்ளைகளின் எதிர்காலம் சிறுவர் பாதுகாப்பு. சிறுவர் பராமரிப்பு, சிறுவர் உரிமைகள், என்பவற்றை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளை இந்த அமைச்சு மேற்கொண்டு வருகின்றது.

மதத் தலைவர்கள், சமுதாயத் தலைவர்கள் சிறுவர்கள் உரிமைகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். இலங்கையில் சிறுவர்களுடைய எழுத்தறிவு உயர்ந்த மட்டத்தில் இருக்கின்றது அது சிறப்பம்சம். பெற்றோர்கள், அயலவர், ஆசிரியர்கள் சிறுவர்கள் குறித்து கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். அதற்கான வழி வகைகளையும் நடவடிக்கைகளையும் நாங்கள் மேற்கொள்வோம். சிறுவர்களுக்கு ஏதேனும் சிரமங்கள், துஷ்பிரயோகங்கள் ஏற்பட்டால் அவர்கள் குறித்த சம்பவங்களை ஊடகங்கள் வெளிப்படுத்தும் போது பொறுப்புடன் அவற்றை வெளிப்படுத்த வேண்டும்.

பொலிஸார் மற்றும் நீதிதுறையில் கடமைகளை மேற்கொள்வோர் இது குறித்து கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். சிறுவர் பாதுகாப்பில் பொலிஸாருடைய கடமை அளப்பெரியது. அவர்களும் இந்த சமூகத்திற்கு விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். சிறுவர்களுக்கு சிறந்த எதிர்காலத்தை ஏற்படுத்த எனது அமைச்சு சிறந்த முறையில் செயலாற்றும்.– என்றார். (ற–21)

## ரூ. 4.5 மில்லியன் செலவில் சிறுவர் பெண்கள் விசாரணைப் பிரிவு திறப்பு

யாழ்ப்பாணம், ஒக். 2
யாழ். பொலிஸ் நிலையத்தின் சிறுவர் பெண்கள் பிரிவுக்கென தனியான விசாரணைப் பிரிவு ஒன்று 4.5 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டு நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது.

சிறுவர் பெண்கள் விவகார அமைச்சர் சந்திராணி பண்டார மற்றும் சிறுவர் பெண்கள் ராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் ஆகியோர் அதிதிகளாகக் கலந்துகொண்டு புதிய பிரிவுக்கான கட்டடத்தைத் திறந்து வைத்தனர்.

யாழ்.பண்ணையிலுள்ள விசேட அதிரடிப்படை முகாம் அமைந்துள்ள வளாகத்தில் இந்தக் கட்டடம் அமைக்கப்பட்டு நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் யாழ்.பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் கே.ஜெயலத் உள்ளிட்ட பொலிஸ் அதிகாரிகள், பிரதேச செயலர்கள் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

அங்கு உரையாற்றிய அமைச்சர் சந்திராணி பண்டார, இலங்கையில் சிறுவர், பெண்கள் பிரிவுகளை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்தப் பிரிவுகள் மிக அத்தியாவசியமானவை. நாட்டில் தற்போது பெண்கள் சிறுவர்களுக்கு எதிராக அதிக வன்முறைகள் கட்ட விழ்த்து விடப்படுகின்றன. அதனைக் கட்டுப்படுத்தவும் இத்தகைய பிரிவுகள் உதவும்.– என்று தெரிவித்தார். நிகழ்வின் இறுதியில் மரக்கன்றுகளும் நடப்பட்டன. (ற–4)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பாலியல் கல்வி தொடர்பில் தெளிவுபடுத்துவது அவசியம்

## சிறுவர் தின வாழ்த்துச் செய்தியில் பிரதமர் ரணில் சுட்டிக்காட்டு



கொழும்பு, ஒக்.2
சமூகத்தில் சிறுவர்களுக்கெதிரான பாலியல் துஷ்பிரயோகங்கள் நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்லும் நிலையில், அதனை ஒழிப்பதற்கு பாலியல் கல்வியை விரிவுபடுத்தி பாலியல் சம்பந்தமான தெளிவைப் பெற்றுக் கொடுப்பது அவசியம் – இவ்வாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

சர்வதேச சிறுவர் தினத்தையொட்டி நேற்று அவர் விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியிலேயே இதனைத் தெரிவித்தார்.

அதில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:–

சிறார்களை அனைத்துவிதமாக அசம்பாவிதங்கள் மற்றும் வன்புணர்வுகளிலிருந்து பாதுகாப்பதற்குப் பெற்றோரும், சமூகமும் கடமையுணர்வுடன் செயற்பட வேண்டும். சிறுவர்களின் பாதுகாப்பு தொடர்பில் அதிக கவனம் செலுத்த வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. சிறுவர்களின் மனதை அறிந்துக் கொண்டு அவர்களை அன்பாகக் கவனித்து சமூகம் மற்றும் குடும்பத்தின் ஊடாகச் சிறுவர்கள் மீது மேற்கொள்ளப்படும் துன்புறுத்தல்களிலிருந்து பாதுகாப்பை வழங்க வேண்டும்.

அண்மைக்கால நிகழ்வுகளை நோக்கும் போது சிறுவர்களுக்கு எதிரான பாலியல் துன்புறுத்தல்கள் பெரும் சமூகச் சீரழிவை ஏற்படுத்தியுள்ளது. இதற்கெனப் பாலியல் கல்வியை விரிவுபடுத்தி அதனை தெளிவுபடுத்தும் நோக்கிலும், சமூகத்தைக் கலாசார மற்றும் ஆன்மிக ரீதியாக வளர்ச்சியடையச் செய்வதற்கும் விரிவான வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டியது அவசியம் – என்றார். (ற)

# தமிழ் மக்களின் நம்பிக்கையை நிறைவேற்ற வேண்டும் த.தே.கூ.

## இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், ஒக். 2
அடுத்த ஆண்டு இறுதிக்குள் தீர்வு கிடைக்கும் என்றும், போர்க் குற்றங்களுக்கு சர்வதேச விசாரணை நடத்தப்படவேண்டும் என்றும் கருதியே தமிழ் மக்கள், கூட்டமைப்புக்கு வாக்களித்தார்கள். இதனை நிறைவேற்றத் தவறினால் எமது மக்களை நாமே ஏமாற்றுவதாக அமையும். – இவ்வாறு திருகோணமலை மாவட்டத்தில் கூட்டமைப்பின் சார்பில் வேட்பாளராகப் போட்டியிட்ட இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் சரா.புவனேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:–

தமிழ் மக்கள் நீண்ட காலமாக அனுபவித்து வரும் துன்பத்துக்கு விடிவு ஏற்பட வேண்டும் என்பதற்காகவே இந்த முறையும் மக்கள் மிகுந்த ஆர்வத்துடன் வாக்களித்தனர். அதாவது 2016 ஆம் ஆண்டு முடிவடைவதற்குள் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு கிடைக்கும் என்பதை கட்சியின் தலைவர் உள்ளிட்ட அனைவரும் வலியுறுத்தினர். இதனை மக்கள் மிகுந்த அவாவுடன் எதிர்பார்த்து நிற்கின்றனர்.

இரண்டாவதாக தமிழர் தாயகப் பிரதேசங்களில் நடைபெற்ற அனைத்துக் குற்றங்களும் சர்வதேசத்தால் விசாரிக்கப்பட்டு உரியவர்களுக்கு தண்டனை வழங்கப்பட வேண்டும் என்பதாகும். இதனை மாற்றுக் கருத்துக்கு இடமின்றி அத்தனை வேட்பாளர்களும் சர்வதேச விசாரணை நடைபெற்று குற்றவாளிகளுக்கு உரிய தண்டனை வழங்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தி நின்றனர்.

இந்த இரண்டு விடயங்களும் நடைபெறாமல் போகுமாக இருந்தால் தமிழ் மக்களைப் பேரினவாத அரசுகள் ஏமாற்றியதைவிட தமிழ் தலைமைகள் பாரதூரமாக ஏமாற்றியதாக முடியும். ஆகையால் அனைவரும் ஒன்றிணைந்து கருத்து வேறுபாடுகளின்றி தமிழருக்கான தீர்வு உடனடியாக அவசியம் என்றும், தமிழ் மக்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட குற்றங்களுக்கு சர்வதேச தண்டனை அவசியம் என்பதனையும் வலியுறுத்திநிற்கவேண்டும். நல்லாட்சி அரசுக்கு மக்கள் தாமாக முன்வந்து வாக்களித்ததுபோல சர்வதேச விசாரணையையும் அவர்களே கோரி நிற்கின்றனர். காரணம் பாதிக்கப்பட்டவர்கள் எடுக்கும் பரிகாரத் தீர்மானங்களையே நாமும் ஏற்க வேண்டும் – என்றுள்ளது. (ற–5)

# வளலாய் பகுதியில் மீள்குடியமர்ந்த மக்களுக்கான உதவிகள் தொடரும்

## கோப்பாய் பிரதேச செயலர் பிரதீபன் தெரிவிப்பு

அச்சுவேலி, ஒக்.2
ஒவ்வொரு மனிதரும் தமது சொந்த நிலத்தில் குடியேறுவதையே விரும்புகின்றனர். இது அவர்களின் உரிமையுமாகும். வளலாய் பகுதியில் மீள்குடியமர்ந்த குடும்பங்களுக்கான வசதிகள் உதவிகள் செய்யப்பட்டு வருகின்றன. மேலும் செய்ய வேண்டிய உதவிகள் தொடர்பாக அரச அதிபரின் நேரடிக் கவனத்துக்கு கொண்டுவந்து வலியுறுத்தி வருகின்றேன். இவ்வாறு தெரிவித்தார் வலி.கிழக்கு, கோப்பாய் பிரதேச செயலர் எம்.பிரதீபன்.

வளலாய் கடற்கரையில் நீர்ப்பிட்டி சித்திரவேலாயுதர் சுவாமி கோயிலுக்கு அருகில் 13 லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்டுள்ள அந்தியேட்டி மண்டபத்தைதிறந்து வைத்து உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:–

வளலாய் பகுதியில் மீள்குடியமர்வதற்கு பதிவு செய்வோர் தொகை நாளாந்தம் அதிகரித்து வருகின்றது. ஆரம்பத்தில் 272 குடும்பங்கள் பதிவு செய்திருந்ததாக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் தற்பொழுது அது 320 குடும்பங்களாக அதிகரித்துள்ளது.

மீள்குடியமரும் குடும்பங்களுக்கான வசதிகளைச் செய்து கொடுப்பதில் தாமதங்கள், தடங்கல்கள் நிலவினாலும் சகல குடும்பங்களுக்கும் வசதிகள் செய்யப்படும். குறித்த பிரதேசத்தில் உள்ள வீதிகள் புனரமைக்கப்படும். மீள்குடியேறிய குடும்பங்களுக்குரிய தேவைகள், வசதிகள் தொடர்பாக அரச அதிபரின் நேரடிக் கவனத்துக்குக் கொண்டு வந்து வலியுறுத்தி வருகின்றேன். சகல குடும்பங்களுக்கும் உரிய வசதி வாய்ப்புக்கள் கிடைக்கும்.

ஒவ்வொருவரும் தத்தமது சொந்த நிலத்தில் குடியேறி வாழ்வதையே விரும்புகின்றனர். இது அவர்களின் உரிமையுமாகும். அதுவே மகிழ்ச்சியான வாழ்க்கைக்கு உதவும். இறந்தவர்களின் பிதிர்க்கடன் அத்தியாவசியக் கடமைகளில் ஒன்று. அதுவும் புனிதமான கடற்கரைகளில் செய்யப்படுவது மேலானது. அந்த வகையில் இன்று இந்த மண்டபத்தைத் திறந்து வைப்பதில் மகிழ்ச்சி அடைகின்றேன். இந்த மண்டபத்தை அமைப்பதற்கு முன்னின்று உழைத்தவர்களுக்கு எனது பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன். இந்த விதத்தில் உழைப்பதற்கு சகலரும் முன்வரவேண்டும்.

வளலாய் பகுதியில் மீள்குடியமர்ந்த குடும்பங்களுக்கான வசதிகள் வழங்கப்பட்டு வருகின்றன. தொடர்ந்து உதவிகள் வழங்கப்படும். பாதுகாப்பு அரண் அழிக்கப்பட்டு நிலம் சமதரையாக்கப்பட்டிருப்பதோடு, 31 குடும்பங்களுக்கு தற்காலிக வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன. 14 கிணறுகள் துப்புரவு செய்து வழங்கப்பட்டுள்ளன. வீதிகளை உரிய முறையில் புனரமைப்பதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. மிக விரைவில் வீதிகள் புனரமைக்கப்படும். பல நிறுவனங்கள் இந்தக் குடும்பங்களுக்கு உதவ முன் வந்துள்ளன. இவர்களுக்கான வசதிகள் செய்யப்படும் – என்றார். (ற–11)

# முதியோர் தின நிகழ்வில் மயங்கி விழுந்த ஆளுநர்

கொழும்பு, ஒக்.2
தேசிய முதியோர் தின நிகழ்வொன்றில் உரையாற்றிய வட மத்திய மாகாண ஆளுநர் பீ.பி.திஸாநாயக்க திடீரென்று மயங்கி விழுந்துள்ளார். அநுராதபுரம் சாலியபுர பிரதேசத்தில் அமைந்துள்ள முதியோர் இல்லமொன்றில் நேற்று முற்பகல் இடம்பெற்ற நிகழ்வில் இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது. அதனையடுத்து ஆளுநர் அநுராதபுரம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

உயர் இரத்த அழுத்தம் காரணமாகவே அவர் மயங்கி விழுந்ததாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

உலகளாவிய ரீதியில் நேற்று கொண்டாடப்பட்ட சர்வதேச முதியோர் தின நிகழ்வை முன்னிட்டு, இலங்கையின் பல பிரதேசங்களில் செயற்படும் முதியோர் இல்லங்களில் விஷேட நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. (ற)

# தொழில் வாய்ப்புக்காகவே அழுத்தங்களை ஏற்படுத்துகின்றோம்

## எதிர்ப்புக்காக அல்ல என்று சுட்டிக்காட்டுகிறார் வடக்கு வேலையற்ற பட்டதாரிகள் சங்கத் தலைவர்

யாழ்ப்பாணம், ஒக். 2
அரச துறைசார் வேலைவாய்ப்போ அல்லது தனியார்துறைசார் வேலைவாய்ப்போ என்பது எமது பிரச்சினை அல்ல. நாங்கள் எங்களுடைய நிலைமைகளை எடுத்துக் கூறி தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுக் கொள்வதற்கே முயற்சிக்கின்றோம். அத்றகாகவே இந்தப் போராட்டங்களையும் – அழுத்தங்களையும் பலதரப்பட்டவர்கள் மத்தியில் ஏற்படுத்தி வருகின்றோம். எதிர்ப்பதற்காக அல்ல என்பதை தெரிவித்துக் கொள்கின்றோம். – இவ்வாறு வடக்கு மாகாண வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தின் தலைவர் பிரதாபன் தெரிவித்துள்ளார்.

கடந்த திங்கட் கிழமை கிறீன் கிறாஸ் விடுதியில் இடம்பெற்ற சுற்றுலாத் துறை மாநாட்டில் கலந்து கொண்ட வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன், 'வேலையில்லாப் பட்டதாரிகள் தமக்கு அரச வேலை வேண்டும் என்று எதிர்பார்க்கின்றனர்.அரச சம்பளத்திலும் பார்க்கப் பல மடங்கு கூடிய வருமானம் தரும் தனியார் நிறுவனங்களில் தரப்படும் வேலைகளை உதாசீனம் செய்கின்றார்கள் – என்று தெரிவித்திருந்தார்.

இது தொடர்பில் பட்டதாரிகள் சங்கத்தின் நிலைப்பாடு என்ன என்று கேட்ட போதே பிரதாபன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:–

பட்டதாரிகள் பல்வேறு விடயங்களில் பாதிக்கப்பட்டதன் பின்னணியில்தான் போராட்டங்களையும், ஆர்ப்பாட்டங்களையும் முன்னெடுத்து வந்தனர். அதற்கான ஒரு பதிலாக, வட மாகாண முதலமைச்சர் சுற்றுலாத்துறை சார்ந்து வெளியிட்ட கருத்து வரவேற்கக் கூடிய விடயம். அவர் ஒரு சிறந்த கருத்[illegible]படுத்தியிருக்கிறார். அ[illegible] சார்ந்தவர்களும் அந்தத் துறை மீது ஆர்வமுடையவர்களும் உள்ளீர்க்கப்படக்கூடிய சாத்தியக் கூறுகள் தென்படுவது எங்களுக்கு ஓர் நம்பிக்கையை ஏற்படுத்தியிருக்கின்றது. சுற்றுலாத்துறை போன்று ஏனைய துறைகளிலும் பட்டதாரிகளை உள்வாங்குவதற்கு நடவடிக்கைகளை எடுத்தால் பட்டதாரிகளின் எதிர்காலம் சிறப்பானதாக அமையும். சுற்றுலாத்துறை சார்ந்து அவர் வெளிப்படுத்தியுள்ள கருத்து சிறிய நம்பிக்கையை எங்கள் மத்தியில் ஏற்படுத்தியிருக்கின்றது.

நாங்கள் தொழில் வாய்ப்பைப் பெறுவதை நோக்கமாக கொண்டு மேற்கொண்ட போராட்டங்கள் அவர்களுக்கு நச்சரிப்பை வெளிப்படுத்தும் விதமாக அமைந்திருந்தாலும் பட்டதாரிகள் பாதிக்கப்பட்டதன் விளைவாகத்தான் இந்த போராட்டங்களை முன்னெடுத்து வருகின்ற[illegible] அதே போன்று பட்டதாரிகள் வேலை வாய்ப்பை நாடிச் செல் கின்றபோது அங்கே இருக்கின்ற புறக்கணிப்பும் இந்தப் போராட்டங்களுக்கான மிகப்பிரதானமான அடித் தளமாக அமைந்து விடுவதனையும் எவரும் மறுத்து விட முடியாது.

எங்களுடைய நிலைமைகளை எடுத்துக் கூறி தொழில் வாய்ப்புக்களை பெற்றுக் கொள்வதற்காகவே நாங்கள் இந்தப் போராட்டங்களை, அழுத்தங்களை பல தரப்பட்டவர்கள் மத்தியிலே ஏற்படுத்தி வருகின்றோம். எதிர்ப்பதற்காக அல்ல என்பதனையும் தெரிவிக்க விரும்புகின்றோம்.

அது மட்டுமல்லாமல், வடமாகாண சுற்றுலாத்துறை சார்ந்து கருத்து தெரிவித்துள்ள போதும், சுற்றுலாத் துறை சார்ந்த கட்டுமானப் பணிகளோ, செயற்திட்டங்களோ முன்னெடுக்கப்படுமாக இருந்தால் தொழில் வாய்ப்புக்கள் பட்டதாரிகளுக்கு மட்டுமல்லாமல் பட்டப்படிப்பை மேற்கொள்ளாத இளைஞர் யுவதிகளும் பல்வேறுபட்ட வேலைத்திட்டங்களுக்குள் உள்ளீர்க்கப்படுவதற்கான வாய்ப்புக்கள் ஏற்படும் என்பதனைக் கூறுவதில் மகிழ்வடைகின்றோம்.

வாழ்வாதார நிலையிலே பின்தங்கியுள்ள, போரால் பாதிக்கப்பட்ட பட்டதாரிகள் பலர் இதனை ஏற்றுக் கொள்வதால் சந்தர்ப்பங்கள் வழங்கப்படுவதுடன், தொழில் வாய்ப்புக்கான சந்தர்ப்பங்கள் பல உருவாக்கப்பட வேண்டும் என்பதனை அவர்கள் எதிர்பார்த்திருக்கின்றனர்.

இது தவிர வடமாகாணத்தில் உள்ள வளங்களை வடமாகாணத்தினுள்ளேயே பயன்படுத்தி எங்களுடைய மூலதனங்கள் வெளியிடங்களுக்குச் செல்லாமல் இருப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இந்த விடயங்கள் வெறும் அறிக்கையோடு மாத்திரம் நின்றுவிடாமல் செயற்பாட்டு ரீதியாகவும், கருத்துக்கள் செயல்வடிவம் பெற வேண்டும். அப்போதுதான் பட்டதாரிகளுக்கு மாத்திரமல்லாது ஏனைய வர்களுக்கும் அது பயனுள்ளதாக அமையும் – என்றார். (ற–5,ரி2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** நண்பர்கள் மத்தியில் உங்களைப் பற்றிய நல்ல மதிப்பீடு உருவாகும். தொழில், வியாபாரத்தில் அதிக வேலைப் பளு இருக்கும். சுமாரான பணவரவுடன் மிகுதிப் பணமும் வசூலாகும். விருந்து, விழாக்களில் கலந்து கொள்வீர்கள்.

**இடபம்:** மனதில் இனம்புரியாத சங்கடம் உண்டாகலாம். குடும்ப உறுப்பினர்களின் கனிவான ஆலோசனை மாற்றத்தை உருவாக்கும். தொழில், வியாபாரத்தில் அதிக நேரம் பணி புரிவீர்கள். உறவினர் வகையில், பணம் செலவு செய்யும் நிலை ஏற்படலாம்.

**மிதுனம்:** பணியில் திறமைகளை வளர்த்துக் கொள்வீர்கள். முக்கியமான செயல்களில் அதிக நன்மை கிடைக்கும். தொழிலில் உற்பத்தி, விற்பனை திருப்திகரமாகும். மேலதிக வருமானம் கிடைக்கும்.

**கடகம்:** குடும்ப விடயத்தை ப் பிறரிடம் சொல்ல வேண்டாம். தொழில், வியாபாரத்தில் மிதமான இலாபம் கிடைக்கும். அறிமுகம் இல்லாதவரிடம் அதிக நெருக்கத்தைத் தவிர்க்கவும். பெண்கள் சகோதர வழியில் உதவி கிடைக்கப் பெறுவர்.

**சிங்கம்:** தகுதிக்கு மீறிய செயல் எதிலும் ஈடுபட வேண்டாம். நண்பர்கள், உங்களிடம் உதவியை எதிர்பார்ப் பார்கள். அதிக உழைப்பினால் தொழிலில் உற்பத்தி, விற்பனை சீராகும். சேமிப்புப் பணம் அத்தியாவசியச் செலவுக்குப் பயன்படும்.

**கன்னி:** உங்கள் சொந்த வாழ்க்கை பற்றி பிறரிடம் பேச வேண்டாம். தொழிலில் நிலுவைப் பணிகளை நிறைவேற்றுவதால், உற்பத்தி, விற்பனை சீராகும். அளவான பணவரவு கிடைக் கும். வெளியூர் பயணத் திட்டத்தில் மாற்றம் செய்ய நேரிடலாம்.

**துலாம்:** உறவினர்கள் உங்கள் திட்டங்களுக்கு ஒத்துழைப்புத் தந்து அன்புடன் நடந்து கொள்வார்கள். தொழிலில் வளர்ச்சி பணி திருப்திகரமாக நிறைவேறும். மிகுதிப் பணம் எளிதில் கிடைக்கும்.

**விருச்சிகம்:** குடும்பப் பெரியவர்களின் வழிகாட்டுதலின் படி செயற்படுவீர்கள். தொழில், வியாபாரத்தில் உற்பத்தி, விற்பனையில் அபரிமிதமான வளர்ச்சி ஏற்படும். ஆதாயப் பணவரவால் சேமிப்பை அதிகரிப்பீர்கள்.

**தனுசு:** சுற்றுப்புறச் சூழ்நிலை தொந்தரவு தரும். தொழில், வியாபாரத்தில் இருக்கிற அனுகூலத் தன்மையைப் பாதுகாப்பது நல்லது. பணவரவு குறைந்த அளவில் கிடைக்கும். பெண்கள் நகை இரவல் கொடுக்க வாங்க வேண்டாம்.

**மகரம்:** வேண்டாதவர்களிடம் இருந்து விலகி உங்களைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட இலக்கை அடையச் சிரமப்பட வேண்டியிருக்கும். குடும்பத்துக்கான செலவு அதிகரிக்கும். போக்குவரத்தில் கவனமாக இருக்கவும்.

**கும்பம்:** நண்பர்களிடம் கேட்ட உதவி கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் உற்பத்தி, விற்பனை அதிகரிக்க தேவையான மாற்றம் செய்வீர்கள். பணவரவு திருப்திகரமான அளவில் வந்து சேரும். புத்திரர்களின் நற்செயல் மனதை மகிழ்விக்கும்.

**மீனம்:** எதிர்பாராமல் வருகிற சிரமம் பற்றி மனம் வருந்த வேண்டாம், தொழில், வியாபாரத்துக்கு கூடுதல் மூலதனம் தேவைப்படும். பிறர் பார்வையில் தெரியும்படி பணம் செலவு செய்வதைத் தவிர்க்கவும். சீரான ஓய்வு உடல்நலத்தைப் பாதுகாக்கும்.

## இன்றைய நாயகர்களுடன் நகைச்சுவை வேண்டாம்

கவுண்டமணி என்ற கருத்துக்கு நகைச்சுவை என்ற அடையாளம் தமிழ்ச் சினிமாவில் இருந்தாலும், அவர் பல்வேறுபட்ட குணச்சித்திர வேடங்களில் நடித்துள்ளார். இரசிகர்களைக் கண் கலங்கவைக்கும் வகையில் அவருடைய குணச்சித்திர கதாபாத்திரத்துக்கான நடிப்பு அமைந்தந்திருந்தது. இந்தநிலையில் கவுண்டமணி தற்போது தன்னுடைய 75 ஆவது வயதில் கதாநாயகனாக நடித்துச் சாதனை படைத்துள்ளார். சமீபத்தில் அவர் கதாநாயகனாக நடித்த 49ஆவது படம் வெளியான நிலையில் அடுத்தபடியாக எங்களுக்கு வேறு எங்கும் கிளைகள் கிடையாது என்ற படம் வெளியாகுவதற்குத் தயார் நிலையில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

மேலும் இவரைப் பல்வேறு திரைப்படங்களில் நடிக்க வைப்பதற்காக கதைகளுடன் பலர் சுற்றி வருகின்றனர். ஆனால் கவுண்டமணி எனக்கு நிறையப்படங்களில் நடிப்பதற்கு விருப்பம் இல்லை. இனிமேலும் உழைத்து என்ன செய்யப் போகின்றேன். ஆனால் இரசிகர்களின் மகிழ்ச்சிக்காக இரண்டு வருடத்துக்கு ஒருபடத்தில் நடித்தால் அதுவே போதுமென்று கருதுவதாகக் கூறியுள்ளார். மேலும் அவர் கதாநாயகனாக நடிப்பதற்கு மறுப்பதைக் கண்டு, அப்படியென்றால் நகைச்சுவைப் பாத்திரத்தில் நடிக்கவேண்டும் என்று கேட்டவர்களிடம், இனிமேல் மற்றக் கதாநாயகர்களுடன் நகைச்சுவை செய்யும் நிலையில் நான் இல்லை. அந்தக் காலமெல்லாம் முடிந்துவிட்டது. எனக்கு நகைச்சுவைக் கதாபாத்திரத்தில் நடிப்பதற்கு ஆசை வந்தால் நான் கதாநாயகனாக நடிக்கும் படத்திலேயே செய்வேன் என்று தெரிவித்துள்ளாராம் கவுண்டமணி.












## கொஞ்சம் சிரிங்க பாஸ்...

**சந்தோசம் நிறைந்த உரையாடல்**
**என்னமா புழுகிறாடா இவள்**

பையன் – வணக்கம்
பெண் – சொல்லடா

பையன் – எங்க நிக்கிறீங்கள் ?
பெண் – நான் என் அப்பாவோட கார்ல வெளியில போயிற்று இருகிறன்டா. பிறகு மால் போயிற்று உடுப்பு எடுத்திட்டு கார வீட்டில விட்டுட்டு உன்கூட கதைகிறன்ரா ஓகேயா..

பையன் – ஓகே...

பெண் – ஆமா நீங்கள் எங்க இருக்கிறிங்கள் ?

பையன் – பேருந்தில உங்க பின்னால தான் இருக்கிறன்.. உங்களை டிக்கெட் எடுக்க வேண்டாம் என்று சொல்லத்தான் போன் எடுத்தனான்...


பெண் – ??????

எப்படித்தான் இப்படியெல்லாம் யோசிக்கிறாங்களோ.. துவிச்சக்கர வண்டியாடா இது..?





## பேஸ் புக்கில்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# விருப்பு வாக்கா? தொகுதிவாரியா?

## உள்ளூராட்சித் தேர்தல் குறித்து அரசுக்குள் பெரும் கருத்து மோதல்

கொழும்பு, ஒக்.02

எதிர்காலத்தில் இடம்பெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தலை பழைய விருப்புவாக்கு முறையின் கீழ் நடத்துவதா? அல்லது புதிதாக நிறைவேற்றப்பட்டுள்ள தொகுதி வாரி முறைமையின் கீழ் நடத்துவதா? என்பது சம்பந்தமாக அரசினுள் கருத்து மோதலொன்று உருவாகியிருப்பதாகத் தெரிய வருகிறது.

உள்ளூராட்சித் தேர்தல் பழைய விருப்புவாக்கு முறையின் கீழ் நடத்தப்படவேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சி யோசனை முன்வைத்துள்ள அதேவேளை, அதை தொகுதிவாரி முறைமையின் கீழ் நடத்துமாறு சிறிலங்கா சுதந்திரக் கட்சி யோசனையொன்றை முன்வைத்துள்ளது.

இந்த இருவிதமான நிலைப்பாடுகளே அரசினுள் கருத்து மோதலொன்று உருவாகுவதற்குக் காரணமாகியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அடுத்த ஆண்டு மார்ச் மாதம் உள்ளூராட்சித் தேர்தலை நடத்த அரசு ஏற்கனவே தீர்மானித்துள்ளது. அண்மையில் இடம்பெற்றிருந்த சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் செயற்குழுக் கூட்டத்தில் வைத்து, உள்ளூராட்சித் தேர்தல் தொகுதி வாரி முறையின் கீழ் நடத்தப்பட விருப்பதால் அதற்குத் தயாராக வேண்டியுள்ளதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்திருந்தார்.

அதேவேளை, தற்போது நிறைவேற்றப்பட்டிருக்கும் உள்ளூராட்சித் தேர்தல் சட்டத்துக்கு அமைய, உள்ளூராட்சித் தேர்தலை தொகுதி வாரி முறையிலேயே நடத்த வேண்டியுள்ளதாக உள்ளூராட்சி அமைச்சர் பைஸர் முஸ்தபாவும் தெரிவித்துள்ளார்.

இதனிடையே, அண்மையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் கூடிய ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழுவில் , உள்ளூராட்சித் தேர்தலை விருப்பு வாக்கு முறையின் கீழ் நடத்தத் தீர்மானிக்கப் பட்டது.

இது இவ்வாறிருக்கையில், உள்ளூராட்சித் தொகுதிகளுக்கான எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டிருக்கும் விதத்தை எவ்வகையிலும் ஏற்றுக் கொள்ள முடியாது என்பதால் எதிர்வரும் பெப்ரவரி மாதத்துக்கு முன்னதாக மீளவும் தொகுதிகளின் எல்லைகளை நிர்ணயித்துவிட இயலாது போகுமானால் தற்போதுள்ள முறையின் கீழ் தேர்தலை நடத்துமாறு ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் கோரிக்கையொன்றை விடுத்துள்ளனர்.

இது தொடர்பில்கருத்து வெளியிட்ட பொது சன ஊடகங்கள் மற்றும் நாடாளுமன்ற மறு சீரமைப்புக்கள் அமைச்சர் கயந்த கருணாதிலக்க, தொகுதிவாரி முறையில் உள்ளூராட்சித் தேர்தல் நடத்தப்பட வேண்டுமானால் மிகச் சரியான விதத்தில் தொகுதிகளின் எல்லைகள் மீள் நிர்ணயிக்கப்பட வேண்டியிருப்பதை ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சுட்டிக்காட்டியிருந்ததாகவும், அவர்களது அந்தக் கோரிக்கை குறித்துப் பிரதமரால் கட்சியின் அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களினதும் கருத்துக்கள் கோரப்பட்டிருப்பதாகவும் தெரிவித்திருந்தார்.

இது குறித்துக் கருத்து வெளியிட்ட சுதந்திரக் கட்சியின் ஊடகப் பேச்சாளரும் பெருந்தெருக்கள் இராஜாங்க அமைச்சருமான டிலான் பெரேரா,

உள்ளூராட்சித் தேர்தல் தொகுதி வாரி முறைமையில் நடத்தப்பட வேண்டியுள்ளது - என்ற சட்டம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு, 2012 ஆம் ஆண்டின் டிசம்பர் 28 ஆம் திகதி வர்த்தமானி அறிவித்தலொன்றாக வெளியிடப்பட்டுள்ளதால் இன்று அதை மாற்றத்துக்கு உள்ளாக்க இயலாது எனத் தெரிவித்துள்ளார். (த-22)


**பணியாளர்கள் தேவை**

யாழ் நகரிலுள்ள அலங்கார கடை ஒன்றிற்கு பணியாளர்கள் தேவை.
தொடர்பு: 077 775 0318

**தேவை**

திருநெல்வேலியில் உள்ள ரெஸ்டோரன்ட் ஒன்றுக்கு குடிப் பழக்கம் அற்ற வேலையாள்கள் தேவை. (காசாளர், வெயிடர்ஸ்)
தொடர்பு : 077 653 4411

**வேலையாள் தேவை**

பார்சல் சேவையில் ஈடுபடும் நிறுவனத்திற்கு பார்சல் வேலையில் ஈடுபட ஆண் வேலையாள் தேவை. யாழ் நகரில் இருப்பவர்கள் விரும்பத்தக்கது. ஆர்வம் உள்ளவர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும்.
தொடர்பு:077 766 7715

**காணி வீடு விற்பனைக்கு**

யாழ்ப்பாணம், சுண்டுக்குளிக்கு அருகில் நில.பர. 2 குளி 0.25 விஸ்தீரணம் 6 அறைகள் கொண்ட வீட்டுடன் கிணறும் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு : 077 0229 762, 076 535 6714

**பணியாளர்கள் தேவை**

* சிட்டை எழுதுநர்
* விற்பனையாளர்

தகுதிக் கேற்ப சம்பளம் வழங்கப்படும்
T.P: 077 8473 222

**துன்பம் நீக்கும் கலியுக தெய்வம் நாகபூசணி அம்மன்**

வெள்ளவத்தையில் பெர்னாந்து வீதியில் அமைந்துள்ள நாகபூசணி அம்மன் ஆலயத்தில் அருள்வாக்கு கூறும் ஞான கணேஸ்வரி அம்மன் அவர்கள் ஒக்டோபர் மாதம் 03,04,05,06 ஆம் திகதிகளில் ஞான வைரவர் ஆலயம் கலாசாலை வீதி, 2ஆவது ஒழுங்கை, திருநெல்வேலி வடக்கு, யாழ்ப்பாணத்தில் அருள்வாக்குக் கூறுவார். (65065) (13.15)

பூசை நேரம்:
முற்பகல் 10.30 - 12.30 மணிவரை
மாலை 5.30 - 6.30 மணிவரை
குறிப்பு: கலாசார உடையுடன் வருகை தரவும்
தொடர்பு: 021 221 9127, 077 801 2226


## தூய சதாசகாய அன்னை திருவிழா

பாலையூற்று தூய லூர்த் திருத் தலத்தின் துணைப் பங்காகிய அன்புவழிபுரம் தூய சதா சகாய அன்னை திருத் தலத்தின் முதலாவது வருடாந்த திருவிழா எதிர்வரும் 9ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது. மாலை 5. மணிக்கு ஆலயத்தின் பங்குத் தந்தை அருட்பணி. எஸ். மதுராங்கன் குருஸ், மறை மாவட்ட புதிய ஆயர் நோயல் இம்மானுவேல் தலைமையில் கொடியேற்றம் இடம்பெற்று கூட்டுத்திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும் என ஆலயத்தினர் தெரிவித்துள்ளனர். (ஐ-40.10)


**விசேட கட்டணச்சலுகையில் கணினிக்கற்கை நெறிகள்**
அனைவருக்கும் 75% கட்டணக்கழிவு

After A\L

- Dip.in Information Technology — DITEC
- Diploma in Office Automation — DOA
- Dip. in Pre-Press Desktop Publicating — DTP
- Diploma in Pc Applications — DPCA
- Adv. Dip. in Hardware & Networking — ADHN
- Dip. in Video Production & Multimedia — DVPM
- Dip.in Web Designing & Development — DWD
- Dip. in Computerized Accounting — DCA

DMI COMPUTER EDUCATION



Spoken English
புதிய பிரிவுகள் ஆரம்பம் (Sat,Sun) 2.00pm

புதிய பிரிவுகள் ஆரம்பம்
3/10/2015 (Sat) - 9.30 am.
5/10/2015 (Mon) - 9.30 am.

☑அரசாங்கத்தாலும் சர்வதேசத்தாலும் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம்.
☑சர்வதேச அங்கீகாரம் பெற்ற நிறுவன (ISO-9001:2008) CERTIFIED சான்றிதழ்கள்
☑இலகு தவணைக்கட்டண வசதிகள். ☑ இங்கிலாந்து, இந்திய பாடநூல்கள்.

அங்கீகரிக்கப்பட்ட முழுமையானதும் தரமானதுமான கல்விக்கு
DMI COMPUTER EDUCATION

| No.113, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் | M.M.V. வீதி, நெல்லியடி | No. 174 கண்டி வீதி, HNB வங்கி அருகில் சாவகச்சேரி | No. 130 K. K. S வீதி NSB வங்கி அருகில் சுன்னாகம் | No.111,A9 வீதி, கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| Tel.: 021-222 4403 | Tel.: 021-226 2470 | Tel.: 021-227 0775 | Tel.: 021-224 1970 | Tel.: 021-228 5655 |

**G.C.E (O/L) ENGLISH LANGUAGE- 2015**

**ஜீனியஸ் கல்வி நிலையம்**

184, A நாவலர்வீதி, யாழ்ப்பாணம் (நாவலர் வீதி, பிறவுண் வீதிச்சந்தி அருகில்)
ஆங்கிலமொழி கடந்த கால வினாப்பத்திரம் 2005-2014 (10 வருடம்)
01.10.2015 ஆரம்பிக்கப்பட்டு நடைபெறுகின்றது.
ஆசிரியர்-N.SIVANANTHAN (H.N.D.A, CIMA (P/Q) U.K)
விரிவுரையாளர் யாழ் தொழில் நுட்பக்கல்லூரி
ICT - ஆசிரியர் MS.S. Dharsika Bsc (Hons) Softwear Development
விரிவுரையாளர் யாழ் தொழில் நுட்பக்கல்லூரி.
தொடர்பு: 071 310 6279, 021 320 6656 Genius Institute

**BUTTERFLY INTERNATIONAL SCHOOL**
Re.No.NP/PS/J/VA/CH/054

வண்ணத்துப்பூச்சி சர்வதேசப் பாடசாலையின் 5ஆவது ஆண்டு விழாவினை முன்னிட்டு புதிதாக இணைந்துகொள்ளும் சிறுவர்களிற்கு அனுமதிக் கட்டணம் 50% இனால் குறைக்கப்பட்டடுள்ளது. வருடாந்தக் கட்டணங்கள் இல்லை.

* Maria Montessori பாடத்திட்டம்
* ஒவ்வொரு வகுப்பிலும் சிறுவர்களிற்கு தனியான கவனிப்புகள்
* ஆங்கில மொழி மூலமான பாடங்கள்
* அனுபவமிக்க ஆசிரியர் குழு


பெற்றோர்களே தங்களது சிறுவர்களின் கல்விச் செயற்பாட்டை ஆரம்பிப்பதற்கு இது ஓர் அரிய சந்தர்ப்பம் விரைந்து வாருங்கள். அனுமதிகள் வரையறுக்கப் பட்டுள்ளது. இச்சலுகை இட் மாதம் 31 ஆம் திகதி வரை மட்டுமே. விஜயதசமி அன்று எமது பாடசாலையில் ஏடு தொடக்கும் நிகழ்வும் இடம் பெறும்.

வயதெல்லை:

3 வயது Play Group | 4 வயது Montessori | 5 வயது Preschool

மேலதிக விவரங்களிற்கு : 077 519 0005
Shiyamini 076 679 0837
வேறு கிளைநிறுவனங்கள் இல்லை

**Majestic** Cineplex Jaffna
கார்கில்ஸ் ஸ்குவெயர்
(யாழ் போதனா வைத்தியசாலை எதிரில்)
இப்பொழுது திரையில்



மஜெஸ்டிக் ப்ளாட்டினம் 10.30 / 2.30 / 6.30
சில்வர் 10.15 / 2.15 / 6.15
ப்ரொன்ஸ் 10.30 / 2.30 / 6.30
முன்பதிவுகளுக்கு 021 2227712
CeylonTheatres
www.ceylontheatres.lk


**UNIVERSITY OF JAFFNA**
**INVITATION FOR BIDS (IFB)**
**STILL PHOTOGRAPHY AND VIDEO FOR GENERAL CONVOCATION- 2015**

1. **The Chairperson, Procurement Committee of University of Jaffna** invites sealed bids from eligible and qualified bidders for **the Still Photography and Video to cover the Annual General Convocation- 2015 of the University of Jaffna** which is scheduled to be held in November, 2015.
2. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have the valid business registration with a minimum of five year experience in relevant field.
3. Interested bidders may obtain further information from the **Assistant Registrar/ Academic Branch, University of Jaffna, Thirunelvely, Jaffna** and view the Bidding Documents at the same address on any working day from **9:00hrs to 16:00 hrs.**
   Contact number: **021 2226500**
4. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the **Assistant Registrar/ Academic Branch, University of Jaffna, Thirunelvely, Jaffna** until **16th October, 2014 from 9:00 hrs to 15:00 hrs and** upon payment of a non-refundable fee of Rupees **one thousand (Rs.1,000/-).**
5. Sealed Bids shall be delivered or sent by registered post to the **Chairperson, Procurement Committee of University of Jaffna, P.O Box 57, Thirunelvely, Jaffna or** be deposited in the tender box kept in the **Registrar's office** to reach **on or before 14.00 hrs on 19th October 2015.** Bids will be opened soon after closing at **14.00 hrs on 19th October, 2015** at the board room of the Vice Chancellor in the presence of the bidders' representatives who choose to attend.
6. Bids shall be valid at least for a period of **60 Days** from the date fixed for receiving of Bids or any extended date.
7. All Bids shall be accompanied by a Bid Security which shall be;
   - In the form included in the Bidding document.
   - In favour of "*Vice Chancellor, University of Jaffna.*"
   - For a amount of **Rs. 10,000/=**
   - Issued by one of the agencies acceptable to the client.

**Vice Chancellor,**
**University of Jaffna,**
**Thirunelvely, Jaffna.**
**02.10.2015**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் லலிதாதேவி கந்தையா

மண்ணில் 08.05.1948 — விண்ணில் 12.10.2014

திதி: 02.10.2015

எம் குடும்ப பாச விளக்காய்
ஒரு கூட்டுக்கிளியாக
எம்மோடு வாழ்ந்து
எம்மையெல்லாம் தவிக்கவிட்டு
விண்ணுலகு புகுந்த உங்களை
நாம் எண்ணாத நாளில்லையம்மா

குடும்பத்தினர்.
"லலிதவாசம்"
வடலியடைப்பு, பண்டத்தரிப்பு.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் பாலபாஸ்கரன் கிருஷாந்த்



(யாழ்/இந்துக் கல்லூரி பழைய மாணவன் A/L 2012)

திதி : பஞ்சமி 02.10.2015

பத்துமாதம் சுமந்து பெற்ற என் மகனே அம்மாவை நித்திரையாக்கி விட்டு காலன் உமது உயிரைப் பறித்தானோ? இனி எங்கு ஷாந் உன்னைக் காண்பேன்.
உமது ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மண்ணில் 24.01.1994 — விண்ணில் 13.10.2014

உங்கள் பிரிவால் வாடும் அம்மா, அப்பா, தம்பி, மாமா.
இல.37/27, இராமநாதன் வீதி, யாழ்ப்பாணம்.

## கண்ணீர் அஞ்சலி



சி. நடராசா



ச. பொன்னம்பலம்

எமது கோயிலின் சிவகாமசுந்தரி சமேத நடராசப் பெருமானது தாபித பரம்பரையைச் சேர்ந்த சி.நடராசா அவர்களும் ச. பொன்னம்பலம் அவர்களும் அடுத்தடுத்து இறைபதம் அடைந்த செய்தி அறிந்து துயரடைவதோடு, அவர்களது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவர்களது ஆன்மாக்கள் இறைவன் பாதமலரடைய நீர்வைக்கந்தனைப் பிரார்த்திக்கின்றோம்.

பரிபாலன சபை
நீர்வேலி கந்தசுவாமி கோயில்

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

திருமதி
செல்வராணி
துரையையா
(இளைப்பாறிய ஆசிரியை)



அன்பின் உறைவிடமாய்
பண்பின் பிறப்பிடமாய்
சாந்தமான மனமும்
கருணை மிக்க மென்முகமும் கொண்டு
38 வருட ஆசிரிய சேவையை
இனிதே நிறைவேற்றி
சேவைகள் பல புரிந்தீர்
ஓராண்டு மறைந்தாலும்
இன்றும் என்றும் உங்கள் நினைவலைகள்
எம்முடன் கலந்திருக்கும்

தோற்றம் 04.12.1928 — மறைவு 02.10.2014

கண்டுக்குளி,
யாழ்ப்பாணம்.
குடும்பத்தினர்.

# போக்குவரத்துச் சபையால் அரசுக்குப் பெரும் தலையிடி

## 1,500 கோடி ரூபா வரை கடன்

கொழும்பு, ஒக் 02

1,500 கோடி ரூபாவரை கடனாளியாகியுள்ள இலங்கைப் போக்குவரத்துச் சபையைத் தொடர்ந்து செயற்படுத்த திறைசேரியினால் மாதாந்தம் வழங்கப்பட்டு வரும் 100 கோடி ரூபா இடைநிறுத்தப்படுமானால் தொடர்ந்தும் அதைனைச் செயற்படுத்துவது சிக்கலானது எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதனால் இ.போ.சவில் மேலதிகமாக உள்ள ஊழியர்களைக் குறைக்க சுயவிருப்பின் பேரில் ஓய்வுபெறவுள்ள 700 பேர் வரையான ஊழியர்களுக்குப் பணிக்கொடைக் கொடுப்பனவுகளை வழங்குவதற்கு மட்டும் 250 கோடி ரூபா தேவைப்படுவதாகவும், ஆனாலும் ஓய்வு பெற்றுச் சென்றுள்ள பெருமளவானோருக்கு சில ஆண்டுகளாகப் பணிக்கொடைத் தொகைகளோ, ஊழியர் சேமலாப நிதித் தொகைகளோ செலுத்தப்பட்டிருக்கவில்லை என்பதால், இலங்கைப் போக்குவரத்துச் சபை பாரதூரமான பிரச்சினையொன்றுக்கு முகம் கொடுத்துள்ளதாகக் கூறப்படுகின்றது.

சுயவிருப்பின் பேரில் ஓய்வு பெற்றுச் செல்லும் இலங்கைப் போக்குவரத்துச் சபை ஊழியர்கள் தமது சேவைக் காலத்துக்கு அமைய, 20 லட்சம் ரூபா, 25 லட்சம் ரூபா என்ற விதத்தில் நட்டஈடுகளைப் பெற்றுக் கொள்ள முடியும். அவர்களது அனுபவம் மற்றும் ஆற்றலுக்கு அமைய, வேறு நிறுவனங்களில் தொழில் வாய்ப்புக்களில் ஈடுபடுவதற்கும் வாய்ப்புக் கிட்டும்.

வருடாந்தம் இலங்கைப் போக்குவரத்துச்சபை அடையும் நட்டத்தைக் குறைத்து போக்குவரத்துச் சபையைக் கட்டியெழுப்பும் முறையான திட்டமொன்றை நடைமுறைப்படுத்துவதே அரசின் நோக்கமெனவும் கூறப்படுகின்றது. (த–22)

## தூர் வாரப்படாத நிலையில் கல்லுண்டாய்க் கேணி

வலி.வடக்கு ஒக்.02

கல்லுண்டாய் வைரவர் ஆலய தெற்கு வீதியில் அமைந்துள்ள கேணி உரிய முறையில் தூர் வாரப்பட்டு துப்புரவு செய்யப்படாமையால், தற்போது யாழ்.மாவட்டத்தில் நிலவும் கடும் வறட்சியைத் தொடர்ந்து முழுமையாக நீர் வற்றிக் காணப்படுகின்றது.

கடந்த 50 வருடங்களுக்கு மேலாக பராமரிப்பின்றி இந்தக் கேணி காணப்பட்ட நிலையில் கேணியின் வெளிக் கட்டுக்களும் இடிந்து அழிந்து போயுள்ளன.

அந்தப் பகுதயில் உள்ள கால் நடைகள் மேய்ச்சல் முடிந்ததும் மற்றும் நேரங்களிலும் இந்தக் கேணியில் நீரருந்தித் தாகத்தைத் தீர்த்து வந்த நிலையில், தற்போது நீர் வற்றிக் காணப்படுவதினால் கால் நடைகள் பெரும் சிரமத்துக்குஉள்ளாகிஅலைந்து திரிவதைக் காணக் கூடியதாகவுள்ளது.

வலி.தென்மேற்கு பிரதேச சபை மற்றும் பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் அமைந்துள்ள இந்தக் கேணியை உரிய முறையில் பராமரித்து கால் நடைகளின் பயன்பாட்டுக்கு நீர் பெற உரிய அதிகாரிகள் வழி செய்ய வேண்டும் எனப் பொது மக்கள் மற்றும் சுற்றுச் சூழல் ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஐ–86)

## வடமாகாண கணித நாடகப் போட்டியில் வெள்ளாங்குளம் பாடசாலை முதலாமிடம்

மன்னார்,ஒக்.02

வடமாகாண பாடசாலைகளுக்கிடையிலான 2015 ஆம் ஆண்டுக்கான கணித நாடகப் போட்டியின் சிரேஷ்ட பிரிவில் மன்னார் வெள்ளாங்குளம் அ.த.க. பாடசாலை முதலாம் இடம் பெற்றுள்ளது. இதில் வடமாகாணத்தைச் சேர்ந்த 11 வலயங்களிலும் முதலாமிடத்தைப் பெற்ற பாடசாலைகள் போட்டியிட்டன. குறித்த போட்டியில் மன்னார் மடு வலயத்தைச் சேர்ந்த வெள்ளாங்குளம் அ.த.க பாடசாலை முதலாம் இடத்தையும், யாழ். தென்மராட்சி வலயத்தைச் சேர்ந்தசாவகச்சேரி டிறிபேக்கல்லூரி இரண்டாம் இடத்தையும், வவுனியா வடக்கு வலயத்தைச் சேர்ந்த சுந்தரபுரம் சரஸ்வதி வித்தியாலயம் மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளன. (ஐ–402)

## சர்வதேச முதியோர் வாரம் சாவகச்சேரியில் அனுஷ்டிப்பு

சாவகச்சேரி,ஒக்.02

சர்வதேச முதியோர் வாரத்தையொட்டி தென்மராட்சி பிரதேச முதியோர் சங்கங்களால் தேசிய முதியோர் கொடி வாரம் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது.

"சந்ததி ஒன்று புதிய சந்ததிக்காக" என்னும் தொனிப் பொருளில் சமூக வலுவூட்டல் மற்றும் நலனோம்பு அமைச்சின் முதியோர்களுக்கான தேசிய செயலகத்தினால் வெளியிடப்பட்டுள்ள கொடிகள் நேற்றுத் தொடக்கம் முதியோர் சங்கங்களால் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. முதியோர் கொடிவார நிகழ்வும், கொடி விற்பனையும் நேற்று தென்மராட்சி பிரதேச செயலகத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. பத்து ரூபா பெறுமதியான கொடிகள் பிரதேசத்தில் உள்ள 37 முதியோர் சங்கங்களால் தத்தமது பிரிவுகளில் விற்பனை செய்யப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ–9)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

திருமதி சிந்தாமணி தம்பையா

மலர்வு 21.12.1937 — உதிர்வு 02.09.2015

அன்னாரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

குடும்பத்தினர்.
122/13, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி,யாழ்ப்பாணம்.



## விருது வழங்கும் நிகழ்வு

சாவகச்சேரி,ஒக்.02

மத்திய கல்வி அமைச்சின் ஏற்பாட்டில் நூலகத்தைப் பயன்படுத்தும் மாணவர்களுக்கு பண்பட்ட வாசகர் விருது –2014 வழங்கும் நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

வடமாகாணத்தின் யாழ்ப்பாணம் முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு இந்த விருதுகளும், பதக்கங்களும் வழங்கப்படவுள்ளன. பாடசாலைகளில் நூலகத்தை சிறப்பாகப் பயன்படுத்தி வாசிப்பதில் ஆர்வம் காட்டும் மாணவர்களாக விளங்குவோர் தொடர்பில் பரிந்துரை செய்யப்பட்டவர்களுக்கு பண்பட்ட வாசகர்களுக்கான பதக்கங்களும் விருதுகளும் வழங்கப்படவுள்ளன.

நிகழ்வில் நூல்கள் காட்சிப்படுத்தலும், பாடசாலைகளுக்கு "மார்ட்டீன் விக்கிரமசிங்க பவுண்டேசன்" நிறுவனத்தினரால் நூல்கள் கையளிப்பும் இடம்பெறும். தென்மராட்சி வலயக்கல்விப்பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண கல்வித் திணைக்கள மேலதிக கல்விப் பணிப்பாளர் திருமதி பீ.எஸ்.இரேனியஸ்ஸும், சிறப்பு விருந்தினர்களாக "மார்ட்டீன் விக்கிரமசிங்க" பவுண்டேசன் நிறுவன செயலாளர் தயாபால ஜெயநந்தி, கல்வி அமைச்சின் கல்வி நூல் வெளியீட்டு ஆலோசனைச் சபையின் செயலாளர் விஜித வெலகெதர, சபையின் தமிழ்ப்பிரிவுப் பணிப்பாளர் எஸ்.முரளிதரன் ஆகியோரும் கலந்து கொள்வர். (ஐ–9)

## விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம்,ஒக்.2

தொழில்நுட்பக் கல்விப் பயிற்சித் திணைக்களத்தின் கீழ் இயங்கி வரும், யாழ்ப்பாணம் தொழில்நுட்பக் கல்லூரியில் காணப்படுகின்ற சகல பாடங்களுக்குமான பகுதிநேர விரிவுரையாளர்கள் வெற்றிடங்கள் நிரப்பப்படவுள்ளன. அதற்கான அரச வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளதாகவும், அது தொடர்பான ஏனைய விவரங்களையும் விண்ணப்பப்படிவங்களையும் இல. 04, பிறவுண் வீதியில் அமைந்துள்ள மேற்புடி கல்லூரியின் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் கல்லூரியின் மேலதிகப் பணிப்பாளர் கே.சாந்தகுமார் தெரிவித்துள்ளார். (ஐ–ரி2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளம் புத்தாக்குநர் போட்டியில் விவேகானந்தா மாணவன் தெரிவு



மட்டக்களப்பு,ஒக்.2

இலங்கை பொறியியலாளர் நிறுவகத்தினால் வருடந்தோறும் நடத்தப்படும் இளம் புத்தாக்குநர் போட்டியில் தானியங்கி நீரூற்றும் இயந்திரம் என்ற புத்தாக்கத்தைச் உருவாக்கிய கல்குடா வலயத்தின் செங்கலடி விவேகானந்தா வித்தியாலய மாணவன் தேசிய மட்டத்துக்குத் தெரிவாகியுள்ளார்.

இந்த இளம் புத்தாக்குநர் போட்டியின் ஆரம்பப் போட்டிகள் பதுளை பொது நூலகத்தில் நடைபெற்று, இறுதிச் சுற்றுப் போட்டி கொழும்பு விஜேயராம மாவத்தையில் கடந்த 27ஆம் திகதி நடைபெற்றது.

இளம் புத்தாக்குநர் போட்டியில் மட்டக்களப்பு மாவட்டத்தின் கல்குடா வலயத்திலிருந்து தெரிவான ஒரேயொரு மாணவன் என்ற பெருமையை ஜீவரெத்தினம் பிரதீபன் என்ற தரம் 8 இல் பயிலும் இந்த மாணவன் பெறுவதாக செங்கலடி விவேகானந்தா வித்தியாலய அதிபர் க.சிவலிங்கம் தெரிவித்துள்ளார். (ஐ–10)

## மரண அறிவித்தல்

### திருமதி இராசமணி கந்தையா



சண்டிலிப்பாய் வடக்கு, சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசமணி கந்தையா 28.09.2015 திங்கட்கிழமை இறைபதம் எய்திவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - சிவக்கொழுந்து தம்பதியினரின் பாசமிகு மகளும் காலஞ்சென்றவர்களான சின்னையா-வள்ளிப்பிள்ளை தம்பதியினரின் பாசமிகு மருமகளும் கந்தையாவின்(ஓய்வுபெற்ற புகையிரத உத்தியோகத்தர்) பாசமிகு மனைவியும் முத்தையா, நாகம்மா, காலஞ்சென்ற சின்னம்மா மற்றும் வேலாயுதபிள்ளை, பொன்னம்மா,செல்லம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும் பாஸ்கரன், கருணாகரன், மனோகரன்,கமலாகரன்,ஜெயந்திமாலா,வசீகரன்,ஜெயசுதா ஆகியோரின் பாசமிகு தாயாரும் மகிழ்ராணி, உத்தமி,சுலோசனா, தயாபதி, ஜெயகுமார், கோமலேஸ்வரி, வரதராஜன் ஆகியோரின் பாசமிகு மாமியாரும் தர்சன்,தனுசா, வினோத், விதுசன்,நிலோஜன், சோபிகா, வைஷ்ணவி, சர்மினி, சதுசன், யனுசன், கிருஷ்சிகா, ஹிரினேஷ், அபிஷா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் (04.10.2015) ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மு.ப.11.00 மணியளவில் மாகியப்பிட்டி கொட்டுப்பனை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மாகியப்பிட்டி, சண்டிலிப்பாய். (65063) (12.15.16)

தகவல்: குடும்பத்தினர். T.P: 021 205 2833

## மரண அறிவித்தல்

### திருமதி புஸ்பராணி அம்பலவாணர்



நுணாவில், சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், பாலையடி வவுனிக்குளத்தில் வசித்தவரும் தற்போது வேப்பங்குளம், வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி புஸ்பராணி அம்பலவாணர் 30.09.2015 புதன்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - அன்னலட்சுமி தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான பொன்னையா - சரஸ்வதி தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற அம்பலவாணரின் அன்பு மனைவியும், குமுதினி, அருளினி (கனடா), மகிந்தன் (சுவிஸ்), முகுந்தன் (நீர்ப்பாசனத் திணைக்களம் - வவுனியா), அமுதினி (கனடா), மயூரன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும், பாக்கியராணி, தேவராணி, இந்திராணி (ஆசிரியை - யாழ் சாவகச்சேரி மகளிர் கல்லூரி), கமலராணி (ஆசிரியை - கனகாம்பிகைக் குளம்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், விமலநாதன், சிவராகுலன் (கனடா), ஜெயந்தினி (சுவிஸ்), பத்மஜோதி, குலநாதன் (கனடா) ஆகியோரின் மாமியாரும், விஜேந்தன், கோபிகா, விநோதன், சயாணி, பிரவீன், திசாந்தன், பிரதிகா, யாகீசன், சஜேனா, வஜேனா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 04.10.2015 ஞாயிற்றுக்கிழமை மு.ப 10.00 மணியளவில் வேப்பங்குளத்தில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக தட்சனாங்குளம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.


இல.58, 6ஆம் ஒழுங்கை, வேப்பங்குளம், வவுனியா. (63893.11.16.17)

தகவல் :- குடும்பத்தினர். 0244588532, 0776402001

## மரண அறிவித்தல்

### பொன்னையா இராசையா

(Retired Assistant TransportationSuperintendent,SriLankan Railway)



தோற்றம் 15.07.1925 மறைவு 26.09.2015

யாழ்ப்பாணம் - மல்லாகம், கொழும்பு, கனடா ஆகிய இடங்களை வசிப்பிடமாகக் கொண்ட பொன்னையா இராசையா (ஓய்வு பெற்ற உதவி மேற்பார்வையாளர் இலங்கை புகையிரத போக்குவரத்துத்திணைக்களம்) 26.09.2015 சனிக்கிழமை இறைவனடிசேர்ந்தார்.

அன்னார் யாழ். பருத்தித்துறையைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான பொன்னையா - லஷ்சுமி தம்பதியரின் அன்புப் புதல்வனும், யாழ். மல்லாகத்தைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான நிக்கொலஸ்-ஞானம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், பரிபூரணத்தின் பாசமிகு கணவரும், சேரிலின் (Canada), Dr.நரேந்திரகுமார் (USA), ராஜ்குமார் (Australia), சந்திரகுமார் (Australia), Dr.சுரேஸ்குமார் (Australia), தக்ஷ குமார் (Canada), ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற பூவிலிங்கம் மற்றும் பாக்கியம் (SriLanka), இராசரத்தினம் (SriLanka), சிவஞானம் (SriLanka), பரமேஸ்வரி (SriLanka), பரமானந்தம் (France), பாலச்சந்திரன் (SriLanka) ஆகியோரின் அன்புச் சகோதரரும், லீனஸ் (SriLanka), பிலிப்னெறி (USA), காலஞ்சென்ற ஜஸ்ரின், காலஞ்சென்ற மணி என்றழைக்கப்படும் மரியமுத்து மற்றும் சங்கரப்பிள்ளை(SriLanka), சுசிலா (SriLanka), பரமேஸ்வரி (SriLanka), அன்ரனி (SriLanka), பேபி என்றழைக்கப்படும் புவனேஸ்வரி (France) பவானி (SriLanka) ஆகியோரின் அன்பு மைத்துனரும், சந்திரவதனா, வனஜா,வனிதா, வளர்மதி, ஜெயவதனி (விஜி), சுதாகரன், பிரபாகரன், சிறிகரன், ராசகரன், ராஜராணி, சர்மிலா, கவிதா, நிலோஜன் ஆகியோரின் அன்புப் பெரியப்பாவும், கேமலதா, காலஞ்சென்றவர்களான சுவர்ணலதா, கீதாஞ்சலி மற்றும் மீரா, பாலமுரளி, கலைவாணி, வசந்தி, வரதராஜன், வாசுகி, வசந்தகுமாரி, மஞ்சுளா ஆகியோரின் அன்பு பெரிய மாமாவும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 8911WoodbineAvenue, Markham இல் அமைந்துள்ள ChapelRidge Funeral Home இல் நாளை (03.10.2015) சனிக்கிழமை மாலை 5.00 மணிமுதல் 9.00 மணிவரையும் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு மீண்டும் ஞாயிற்றுக்கிழமை 04.10.2015 காலை 8.00 மணிமுதல் 9.00 மணிவரை அஞ்சலிக்காக வைக்கப்பட்டு 9.45 மணிமுதல் 11.45 மணிவரை இறுதிக்கிரியைகள் நடைபெற்று 12.30 மணியளவில் 12492WoodbineAvenue, Gormley, ON இல் அமைந் துள்ள Highland Hills, Crematorium இல் தகனக்கிரிகைகள் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.


மேலதிக தொடர்புகளுக்கு:

+001 - 905 - 471 - 3761 (கனடா)

| | |
|---|---|
| வனிதா பூவிலிங்கம் | - 021 222 7859 |
| பாக்கியம் சங்கரப்பிள்ளை | - 021 222 0096 |
| P. இராசரத்தினம் | - 021 222 0285 |
| P. சிவஞானம் | - 021 321 5803 |
| பரமேஸ்வரி அன்ரனி | - 021 222 8079 |
| P.பரமானந்தம் | - + 333 8933 0801 |
| P.பாலச்சந்திரன் | - 026 222 5970 |

(65071) (12.15.16)

## மரண அறிவித்தல்



### கந்தையா இராமச்சந்திரன்

(இளைப்பாறிய உதவி அதிபர்-இடைக்காடு மகாவித்தியாலயம்)

பிறப்பு : 24.09.1949 மறைவு : 01.10.2015

பாடசாலை வீதி, இடைக்காட்டைச் சேர்ந்த கந்தையா இராமச்சந்திரன் நேற்று (01.10.2015) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகம் கந்தையா-பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற வீரசிங்கம்-குழதையார் தம்பதியரின் அன்பு மரு மகனும், குணானந்தலட்சுமியின் அன்புக் கணவரும் முகுந்தாவின் (ஆஸ்தி ரேலியா) பாசமிகு தந்தையும், வேல்முருகன் முருகவேலின் (ஆஸ்திரேலியா) அன்பு மாமனும், மதுரசனின் பாசமிகு பேரனும் காலஞ்சென்ற மனோன்மணி, செல்வபாக்கியம் மற்றும் இராசமணி, பாலகிருஸ்ணன் (ஆஸ்திரேலியா) பரமேஸ்வரி, செல்வமணி, தங்கவேல் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு சகோதர னும், கதிரித்தம்பி, இராசரத்தினம், சாரதா (ஆஸ்திரேலியா), சிறீகுகன் (இளைப் பாறிய ஆசிரியர்), குணேந்திரதாசன், நாகேஸ்வரி (லண்டன்), குணரத்தினம் (நோர்வே), குணபூசணம் (லண்டன்), குணேஸ்வரி, குணரஞ்சிதன் (ஆஸ்தி ரேலியா), குணசேகரன், குணேந்திரா (ஆஸ்திரேலியா), குணராகினி ஆகி யோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.10.2015) சனிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக இடைக்காடு சாமித்திடல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பாடசாலை வீதி, இடைக்காடு. (C/19145)(10.15)

தகவல்: குடும்பத்தினர். 0772719957, 0777563596

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெகுவிரைவில் பொலிஸ் ஆணைக்குழு செயற்படும்



பொலிஸ் ஆணைக்குழு வெகு விரைவில் அமைக்கப்படவுள்ளதாகப் பொலிஸ் மா அதிபர் என்.ஜே. இலங்ககோன் தெரிவித்துள் ளார்.

ஏழு உறுப்பினர்கள் அடங்கிய இந்த ஆணைக் குழு அமைக்கப்பட்ட பின் பொலிஸ் துறையின் நியமனங்கள், இட மாற் றங்கள், பதவியுயர்வுகள் போன்றசகலநிர்வாகவிடயங்களும் ஆணைக்குழுவின் மூலமாகவே நடைபெறுமென அவர் மேலும் தெரிவித்தார்.

பொலிஸ் ஆணைக்குழு நியமிக்கப்பட்ட பின்பும் பொலிஸ் மா அதிபரின் அதிகாரங்களில் மாற்றங்கள் ஏற்படாது எனவும் இதற்கு முன்னர் இயங்கிய பொலிஸ் ஆணைக் குழுவின் கூட் டங்களுக் குப் பொலிஸ் மாஅதிபர் சமுகமளிக்காமல் இருந்த போதிலும், புதிய ஆணைக்குழுவின் கூட் டங்களுக்கு அவர் அழைக்கப்படுவார் எனவும் பொலிஸ் தலைமையக உயரதிகாரியொருவர் தெரிவித்தார்.

பொலிஸ் ஆணைக் குழு நியமிக்கப் பட்டபின்னர் அதன் அதிகாரங்கள் பிரதி பொலிஸ்மா அதி பர்கள் மற்றும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்கள் ஆகியோர் மூலம் பரவலாக் கப்படு மெனவும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார். (த)



தேர்தல்கள் செயலகத்தின் 60ஆவது ஆண்டு நிறைவு விழா, பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன் தினம் நடைபெற்றது. இதில் தேர்தல்கள் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, முன்னாள் ஜனாதிபதிகளான சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, மஹிந்த ராஜபக்ச, முன்னாள் பிரதமர் டி.எம்.ஜயரத்ன மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (த)

# தகவல் அறியும் சட்டம் இலங்கையில் தேவை

## அரசை வலியுறுத்துகிறார் 'இந்து' பத்திரிகையின் முன்னாள் ஆசிரியர் ராம்

கொழும்பு, ஒக்.2

தகவலறியும் உரிமைச் சட்டத்தை நிறைவேற்றும் நடவடிக்கைகளை இலங்கை அரசு துரிதப்படுத்த வேண்டும் என்று 'இந்து' பத்திரிகையின்முன்னாள்ஆசிரியர்எம்.ராம் தெரிவித்தார்.


கொழும்பு, பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற 2015 ஆம் ஆண்டின் ஊடக சுதந்திரத்துக்கான எஸ்மன்ட் விக்கிரமசிங்க விருது வழங்கல் வைபவத்தில் பிரதான உரை நிகழ்த்தும்போதே ராம் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்;

'1973 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க இலங்கை பத்திரிகைப் பேரவை சட்டத்தின் பிரகாரம், பத்திரிகைப் பேரவையானது, செயல்நோக்கம் கொண்ட பல்வேறு குற்றங்களின் பேரில் ஊடகவியலாளர்களையும் பத்திரிகைகளையும் தண்டிப்பதற்கான அதிகாரங்களை கொண்டிருப்பதுடன், இது ஊடக சுதந்திரம் பற்றிய எந்தவொரு கருத்தோட்டதுடனும் ஒன்றிப் போவதாக அமையவில்லை.

இதேநேரம், பத்திரிகை ஆசிரியர்களும் வெளியீட்டாளர்களும் இணைந்து அமைத்த சுய ஒழுங்குப்படுத்தல் பொறிமுறையான இலங்கை பத்திரிகை முறைபாட்டு ஆணைக்குழுவானது நன்குமுறைப் படுத்தப்பட்ட ஆசிரியர் விதிமுறை கோட்பாடுகளை கொண்டுள்ளதுடன், கொள்கையளவில் முன்னேற்றகரமான மாற்று ஏற்பாடுகளை வழங்குவதாகவும் இருக்கிறது. எனினும், குற்றமிழைக்கும் பத்திரிகைகளுக்கு எதிராக அபராதங்களை விதிப்பதற்கான அதிகாரங்கள் உள்ளிட்ட ஏற்பாடுகளில் அது பற்றாக்குறைகளை கொண்டிருப்பதாகவே தோன்றுகின்றது.

நம்பகரமானதும் சுயாதீனமானதும் சுய ஒழுங்குப்படுத்தல் அங்கம் என்ற வகையில் இலங்கை பத்திரிகை முறைப்பாட்டுஆணைக் குழுவை சட்ட ரீதியான பின்புலங்கள், நாடாளுமன்றத்தின் ஊடான போதியளவான நிதி ஒதுக்கீடுகள் மற்றும் சட்டத்தேவைகளைப்பூர்த்தி செய்யும் மேல் முறையீட்டுக்கான தீர்ப்பாயம் ஆகியவற்றின் மூலம் பலப்படுத்த முடியும் என்று நான் கருதுகிறேன்.



அத்துடன், தகவலறியும் உரிமைச் சட்டத்தை நிறைவேற்றும் நடவடிக்கைகளை துரிதப்படுத்துவதும் இலங்கை அரசுக்கும் நாடாளுமன்றத்துக்கும் சிறந்த யோசனையாக இருக்கும்.

உண்மையில், இந்தியாவுக்கு முன்னதாகவே இலங்கை இதற்கான முன்னெடுப்புக்களை ஆரம்பித்திருந் தது. எனினும், பல்வேறு காரணங்களால் அது இன்னமும் சட்டமாக்கப்படாமல் இருக்கின்றது.

2005 ஆம் ஆண்டு நடைமுறைக்கு வந்த தகவலறியும் உரிமைச் சட்டத்தைப் பொறுத்த வரையில் இந்தியாவின் அனுபவமானது மிகவும் சாதகமாகவும் பெறுமதி மிக்கதாகவும் இருக்கின்றது – என்றார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் இரா. சம்பந்தன் மற்றும் ஆளும்தரப்பு மற்றும் எதிரணி நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலரும் கலந்துகொண்ட இந்த நிகழ்வில், 2015 ஆம் ஆண்டின் ஊடக சுதந்திரத்துக்கான எஸ்மன்ட் விக்கிரமசிங்க விருது 'உதயன்' பத்திரிகைக்கு வழங்கப்பட்டது.

'உதயன்' – 'சுடர் ஒளி' குழுமத் தலைவர் ஈ. சரவணபவன் அந்த விருதை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் இருந்து பெற்றுக்கொண்டார். (த–சி)

# பாணந்துறை வங்கியில் ரூ.5 லட்சம் கொள்ளையிட்ட மாணவன் கைது

கொழும்பு, ஒக்.2

பாணந்துறை நகரிலுள்ள தனியார் வங்கி ஒன்றில் கடந்த திங்கட்கிழமை பெண் காசாளரை மிரட்டி அவரிடமிருந்து ஐந்து லட்சம் ரூபா பணத்தைப் பறித்துக்கொண்டு தப்பியோடிய வெளிநாடொன்றில் வைத்தியக்கல்விபயிலும்மாணவன் ஒருவரைக் கொள்ளை நடந்த சில நிமிடங்களில் பாணந்துறைப் போக்குவரத்துப் பொலிஸ் கான்ஸ் டபிள் ஒருவர் மடக்கிப் பிடித்திருக்கிறார்.

குறிப்பிட்ட வங்கியில் பணத்தை வைப்பிலிடுவதற்கு வந்தவர்போல நடித்த இவர் – பண வைப்புக்கான படிவத்தை நிரப்பிக் காசாளரிடம் கொடுத்திருக்கிறார். அந்தப் படிவத்தில் என்னிடம் துப்பாக்கி இருக்கிறது உன்னிடம் இருக்கும் பணம் முழுவதையும் தந்துவிடு. அபாய மணியை ஒலிக்க முயற்சித்தால் சுட்டுவிடுவேன்" என எழுதி வைத்திருக்கிறார். இந்த மிரட்டலுக்குப் பயந்துபோன பெண் காசாளர் அவரிடமிருந்த் 5 லட்ச ரூபா பணத்தாள் கட்டொன்றை குறித்த மாணவனிடம் கொடுத்திருக்கிறார். பணத்தைப் பறித்துக்கொண்டவர் உடனடியாகவங்கியைவிட்டுவெளியேறி வீதிக்கு வந்திருக்கிறார். இந்த அசம்பாவிதத்தை உணர்ந்துகொண்ட வங்கிப் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் வீதிக்கு வந்து கூச்சலிட்டிருக்கின்றனர். அச்சமயம் வங்கிக்கு முன்னால் போக்குவரத்துக் கடமையில் ஈடுபட்டிருந்த பாணந்துறை போக்கு வரத்துப் பொலிஸ் கான்ஸ்டபிள் நாலக குணசேகர சந்தேகநபரை விரட்டிச் சென்றிருக்கிறார். இந்தக் களேபரத்தைப் பார்த்த பாதசாரிகளும்ஓட்டோச்சாரதிகளும் கான்ஸ் டபிளுடன் சேர்ந்து சந்தேகநபரை விரட்டி மடக்கிப் பிடித்திருக்கின்ற னர்.

சந்தேகநபர் 24 வயதானவர் எனவும் – வெளிநாடொன்றில் நான்கு வருடங்கள் வைத்தியக் கல்வியைக் கற்றபின்னர் 2011 இல் நாடு திரும்பியவர் எனவும் அவர் மாளிகாவத்தைப் பிரதேசத்தைச் சேர்ந்தவர் எனவும் விசாரணைகளின்போது தெரியவந்துள்ளது.

இவர் மேற்கொண்ட கொள்ளை முயற்சி வங்கியின் கண்காணிப்புக் கமராவில் தெளிவாகப் பதிவாகியுள்ளது எனவும் அவரை 7 நாள்களுக்குத் தடுத்துவைத்து விசாரிக்க நீதிமன்று உத்தரவு பிறப்பித்துள்ளதாகவும் பாணந்துறை தலைமையகப் பொலிஸ் பொறுப்பதிகாரி ஜகத் சமரசிங்க தெரிவித்தார். (த)

# முன்னாள் முதலமைச்சரின் பாவனைக்கு 15 வாகனங்கள்

## மாதாந்த எரிபொருள் செலவு 60 லட்சம் ரூபா

வடமத்திய மாகாண முன்னாள் முதலமைச்சர் எஸ்.எம். ரஞ்சித்துக்கும்அவரது பாதுகாப்புப் பரிவாரங்களுக்கும் சட்டப்படி மூன்று உத்தியோகபூர்வ வாகனங்களே உரித்துடையனவாக இருந்தபோதிலும் அவர்கள் மொத்தமாக 15 வாகனங்களைப் பயன்படுத்தி வந்துள்ளதாக அரச கணக்காய்வுத் திணைக்களம் நடத்திய விசாரணைகளின்போது தெரியவந்துள்ளது.

இந்த வாகனங்களுக்கான சராசரி மாதாந்த எரிபொருள் செலவு 59 லட்சத்து 89ஆயிரத்து 771 (59,89,771) ரூபா எனவும் அதற்கு, மேலதிகமாக இதர செலவுகளுக்கென 18 லட்சத்து 983 ரூபா (18,00,983) செலவுசெய்யப்பட்டுள்ளதாகவும் கணக்காய்வாளரின் அறிக்கை தெரிவிக்கிறது.

அத்துடன், அவரது பாதுகாப்பு அதிகாரிகளுக்கு அரசின் விதிமுறைகளை மீறி மாதாந்தம் தலா 4 ஆயிரம் ரூபா தொலைபேசிக் கட்டணமாக வழங்கப்பட்டுள்ளதா கவும் வடமத்திய மாகாண சபைக் குள் கணக்காய்வுப் பிரிவொன்று இயங்கி வந்தபோதும் – இவ்வாறான முறைகேடுகள் மூடிமறைக்கப்பட்டுள்ளனஎனவும்–அரசகணக்காய்வாளரின் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (த)

# சேயா கொலை வழக்கு; சந்தேக நபர்களுக்கு மறியல் நீடிப்பு

கொழும்பு, ஒக் 02

கொட்டதெனியாவ, படல்கம பிரதேசத்தில் சேயா சந்தவெமி எனும் சிறுமி கொலை செய்யப்பட்ட சம்பவத்தில் கைதாகி விளக்கமறியலில் வைக்கப்பட்டிருக்கும் 17 வயதுப் பாடசாலை மாணவனையும் ஒரு பிள்ளையின்தந்தையானநபரையும் ஒக்டோபர் 2ஆம் திகதிவரை தொடர்ந்து விளக்கமறியலில் வைக்குமாறு மினுவாங்கொடை நீதிவான் டீ.ஏ.ருவன்பத்திரண நேற்று முன்தினம் உத்தரவிட்டுள்ளார்.


இவர்கள் தொடர்பான மரபணுப் பரிசோதனை அறிக்கை இதுவரை கிடைக்கவில்லையென கொட்டதெனியாவ பொலிஸார் நீதிமன்றத்தில் அறிவித்ததைத் தொடர்ந்தே சந்தேக நபர்களின் விளக்கமறியல் நீடிக்கப்பட்டது.

அதேசமயம், சந்தேக நபர்கள் இருவரும் கொட்டதெனியாவ பொலிஸாரால் கடுமையாகத் தாக்கப்பட்டனர் என்ற முறைப்பாட்டைக் கவனத்தில் கொண்ட நீதிவான், அவர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதா என்பதைப் பரிசோதித்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு நீர்கொழும்பு விசேட சட்ட வைத்திய அதிகாரிக்கு உத்தரவிட்டார். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துவிச்சக்கர வண்டிகளுக்கான நவீன மின்விளக்கு





இரவு நேரங்களில் பயணம் செய்யும்போது தெளிவான பார்வையை ஏற்படுத்துவதற்கு பயன்படும் மின்விளக்குகள் முன்னோக்கியோ அல்லது பின்னோக்கிதான் வெளிச்சத்தை பாய்ச்சும். ஆனால்இருபக்கங்களுக்கும்போதியவெளிச்சத்தை பாய்ச்சுவதில்லை. இதனால் ஏற்படும் அசௌகரியங்களைதடுப்பதற்காகநவீனவடிவமைப்புடன் கூடிய ஸிசிம் மின்விளக்கு உருவாக்கப்பட்டுள்ளது.

USB இணைப்பான் ஊடாக கணினிகளுடனும் இணைத்து சார்ஜ் செய்யக்கூடிய இந்த மின் விளக்கானது 3 மணித்தியாலங்கள் வரை சார்ஜ் செய்த பின்னர் தொடர்ச்சியாக 50 மணித்தியாலங்கள் வரை பயன்படுத்தக்கூடியதாக இருக்கின்றது. இதன் விலை 45 அமெரிக்க டொலர்களாகும்.

## கடலில் மிதக்கும் அதிநவீன ஆய்வுகூட நகரம்



சுமார் 7,000 வரையானவர்களைக் கொள்ளக்கூடியதும், கடலின் மேற்பரப்பில் நிலையாக இருக்கக்கூடியதுமான மிதக்கும் நகரம் ஒன்று உருவாக்கப்படவுள்ளது. பிரான்ஸ் நாட்டு கட்டடக் கலை நிபுணரான ஜாக்குறூ கெறியிஸ் Jacques Rougerie என்பவரின் எண்ணத்தில் உதித்த இந்த நகரம் 900 மீற்றர் நீளமும் 500 மீற்றர்கள் அகலமும் உடையதாக வடிவமைக்கப்படவுள்ளது. இந்த நகரம் உலகெங்கிலும் உள்ள 7,000 வரையான விஞ்ஞானிகள் மற்றும் மாணவர்களை உள்ளடக்கிய ஆராய்ச்சிக் கூடமாக பயன்படுத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளதுடன், இதில் வகுப்பறைகள், ஆய்வுகூடங்கள், தங்கு மிடங்கள், விரிவுரை மண்டபங்கள் என்பனவும் உள்ளடக்கப்பட்டுள்ளன. இதன் உயரமானது நீர்ப் பரப்புக்குமேல் 60 மீற்றர் உயரமாகவும், நீர்ப்பரப்புக்கு கீழ் 120 மீற்றர்கள் உடையதாகவும் வடிவமைக்கப்படவுள்ளது. மேலும் இங்கு நீண்ட கால ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்படவிருப்பதனால் அங்கு எந்தவிதமான கழிவுப் பொருள்களும் வெளியேற்றப்படமாட்டாது என குறிப்பிடப்பட்டுள்ளது. அவையும் மீள்சுழற்சிக்கு உட்படுத்தி பரிசோதனைக்கு உட்படுத்தப்பட விருப்பதே அதற்கான காரணமாகும்.

## ஸ்மார்ட் கைபேசி தயாரிப்பில் பிளாக்பெரி



மொபைல் சாதனங்களுக்கான இயங்குதளங்களில் கூகுள் நிறுவனத்தினால் அறிமுகம் செய்யப்பட்ட அன்ரோயிட் இயங்குதளம் குறுகிய காலத்தில் அமோக வரவேற்பைப் பெற்றுள்ளது.

இதன் காரணமாக பல்வேறு கைபேசி உற்பத்தி நிறுவனங்களும் அன்ரோயிட் இயங்குதளத்தில் செயல்படக்கூடிய கைபேசிகளையே வடிவமைத்து அறிமுகம் செய்கின்றன. இவற்றின் வரிசையில் தற்போது பிளாக்பெரி நிறுவனமும் இணைந்துள்ளது. இது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்துள்ள அந்த நிறுவனத்தின் தலைமை அதிகாரி ஜோன்சேன் (John Chen) இவ்வருட இறுதிக்குள் அன்ரோயிட் இயங்குதளத்தைக் கொண்ட பிளாக்பெரி கைபேசி அறிமுகம் செய்யப்படும் எனக் குறிப்பிட்டுள்ளார். இதேவேளை– 2016 ஆம் ஆண்டு மார்ச் மாதம் Blackberry 10 OS இன் புதிய பதிப்பான 10.3.3 பதிப்பும் வெளியிட தீர்மானிக்கப்பட்டுள்ளது.

# முத்தான வியர்வை- 2015 விற்பனைச் சந்தை மன்னாரில்



மன்னார், ஒக்.2

வாழ்வின் எழுச்சி திணைக்களத்தின் ஏற்பாட்டில் மன்னார் பிரதேசச் செயலகத்தின் அனுசரணையுடன் முத்தானவியர்வை 2015ஆம் ஆண்டுக்கான விற்பனைச் சந்தை கடந்தசெவ்வாய்க்கிழமைமன்னார் நகரசபை வளாகத்தில் ஆரம்பமானது.

குறித்த விற்பனைச் சந்தையை வாழ்வெழுச்சித்திட்டத்தின்மாவட்டப் பணிப்பாளர் சசிதரன், மன்னார் பிரதேசச் செயலாளர் கே.[illegible]குமார் மற்றும் வாழ் வெழுச்சித்திட்ட அலுவலகர்கள் இணைந்து வைபவ ரீதியாக ஆரம்பித்து வைத்தனர்.

அதைத்தொடர்ந்து குறித்த சந்தையில் உள்ள பொருள்கள் வருகை தந்த விருந்தினர்களால் பார்வையிடப்பட்டது. மலிவு விற்பனையும் இடம்பெற்றது. குறித்த சந்தையில் உள்ளூர் உற்பத்திகள் கைப்பணிப் பொருள்கள் என்பன மலிவுவிலைக்கு விற்பனை செய்யப்பட்டன.(ற-56)

# சிறுவர் தினத்தை முன்னிட்டு குடிதண்ணீர், மலசலகூட வசதிகள்

## கல்வி அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, ஒக்.2

சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு முதல் கட்டமாக நாடு முழுவதிலும் உள்ள ஆயிரத்து 200 பாடசாலைகளுக்கு சுத்தமான குடிதண்ணீர் வசதி ஏற்படுத்தல் மற்றும் நவீன ஆண், பெண் மலசலகூடங்கள் நிர்மாணித்தல் என்பவற்றுக்கு ஒவ்வொரு பாடசாலைக்கும் 2 மில்லியன் ரூபா நிதி வழங்கப்பட உள்ளது என கல்வியமைச்சர் அகிலவிராஜ் காரியவாசம் தெரிவித்தார்.

கல்வியமைச்சில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்குஅவர்மேலும்தெரிவித்துள்ளதாவது:–

நாட்டில் உள்ள 10 ஆயிரத்து 119 பாடசாலைகளில் 525 பாடசாலைகள் மட்டுமே ஒழுங்கான குடிதண்ணீர்மற்றும் மலசலகூடங்கள் உள்ளன. ஏனையபாடசாலைகளில் மலசல கூடம் பாராமரிப்பு உரிய முறையில் இல்லை. அத்துடன் சுத்தப்படுத்தும் தொழிலாளர்கள் இல்லை.

இதற்காக ஆண்களுக்கான மற்றும் பெண்களுக்கான மலசலகூடம் என இரண்டு பிரிவுகளாக நவீன முறையில் கல்வியமைச்சின் கட்டடப் பிரிவால் வடிவமைத்து நிர்மாணிக்கப்படவுள்ளன. இதில் முதற்கட்டமாக ஆயிரத்து 200 பாடசாலைகள் 2015 ஆம் ஆண்டில் தெரிவு செய்யப்பட்டுள் ளன. மிக அண்மையிலான சிறந்த பாடசாலை என்ற திட்டத்தின் கீழ் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

2017ஆம் ஆண்டில் சகல பாடசாலைகளுக்கும் மலசலகூட வசதிகள் வழங்கப்பட்டு முற்றுப் பெறும். இந்தக் கட்டுமானப் பணிக்கான பொறுப்பு பாடசாலை அபிவிருத்திச் சங்கத்திடமும் அதிபரிடமும் கையளிக்கப்படும். வலயக்கல்விப் பணிப்பாளர் கல்வியியல் பிரிவின் பொறியியலாளர் மற்றும் மாகாணதேசிய பாடசாலைகளினது கல்வியமைச்சின் அதிகாரிகள் இத்திட்டத்தை அவதானிக்கும் குழுவாக நியமிக்கப்படுவார்கள். இந்தத் திட்டத் துக்கான நிதி 2015, 2016ஆம் ஆண்டின் வரவு–செலவுத்திட்டத்திலிருந்து ஒதுக்கப்படும்– என்றார். (ற–10)

## ஆதாரம் காட்டிப் பெற்றுக் கொள்ளவும்

யாழ்ப்பாணம், ஒக்.02

வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தின் பெருந்திருவிழாவின்போது கண்டெடுக்கப்பட்டு பிரதேச செயலக உற்சவகாலப் பணிமனையில் ஒப்படைக்கப்பட்ட சில பொருள்கள் உரிமைகோரப்படாமல் உள்ளதாக வடமராட்சி வடக்கு பிரதேச செயலாளர் ஆர்.ரி. ஜெயசீலன் தெரிவித்துள்ளார்.

தம்மால்தவறவிடப்பட்டபொருள்களை எதிர் வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் பிரதேச செயலகத்தில் தகுந்த ஆதாரங்களை காட்டிப் பெற்றுக்கொள்ளுமாறும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (10)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

cmyk




# சீனாவில் குண்டு வெடிப்பு: 7 பேர் சாவு; 51 பேர் காயம்

பீஜிங், ஒக்.2
சீனாவின் தென்பகுதியில் குஆன் சிசுஆங் பகுதியில் நடந்த தொடர் குண்டுவெடிப்புச்சம்பவத்தில் 7 பேர் உயிரிழந்துள்ளனர். 51 பேர் காயங்களுக்கு உள்ளாகினர்.
ஆரம்ப விசாரணைகளில் 17 குண்டுகள் வெடித்துள்ளமை கண்டறியப் பட்டுள்ளது. இந்தக் குண்டுவெடிப்புத் தொடர்பில் 33 வயதான ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸ் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.
கைது செய்யப்பட்ட நபரிடம் இருந்து 60 குண்டுகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன என்று சீன ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.
குண்டு வெடிப்புக்கான காரணம் குறித்து எதுவும் தெரிவிக்கப்படவில்லை. விசாரணை மேற்கொள்ளப்படுகின்றது என்று பொலிஸார் தெரிவித்தனர். (ற–ரி4)



தாகத்தால் தவித்த சிறுத்தை ஒன்று தண்ணீருக்காக பானைக்குள் தலையை விட்டு மாட்டிக் கொண்டது. இந் நிலவும் கடும் வறட்சியான காலநிலை நிலவுகின்றது. அங்குள்ள ராஜ்சமான்ட் மாவட்டத்தின் சார்துல்கேடா கிரா சிறுத்தை ஒன்று வீடொன்றில் இருந்த பானைக்குள் தலையை விட்டு தண்ணீர் குடித்துள்ளது. ஆனால் பாவம் அ முடியவில்லை. இதனால் தடுமாறிய சிறுத்தை நகரமுடியாது திணறியது. கிராமத்தவர்களால் இதுகுறித்து வனத்து தெரிவிக்கப்பட்டு அவர்கள் சிறுத்தையைப் பிடித்து பானையில் இருந்து தலையை வெளியே எடுத்தனர்.

# 108 கிலோ எடையுடன் யோகா: மிரளவைக்கும் குண்டுப் பெண்





நியூயோர்க், ஒக்.2
அமெரிக்காவின் கலிபோர்னியாவைச் சேர்ந்தவர் வாலரி சகுன. 27 வயதான இந்தப் பெண்ணின் நிறையோ 108 கிலோ. சிறுவயது முதலே குண்டாகவே இருக்கும் வாலரி, கல்லூரிக்காலம் வரையில் தனது காலை நின்றபடி தொட்டது கூட இல்லைஎன்றால்பாருங்களேன். ஆனால் அவர் செய்யும் செயல் அவரது உருவத்துக்குச் சற்றும் தொடர்பே இல்லாதது.
கல்லூரித் தோழி ஒருவரின் தூண்டுதலால் யோகா பயிற்சி வகுப்புக்குச் சென்ற வாலரி தற்போது தனது குண்டு உடலை அநாயாசமாக வளைத்து நெளித்து அபராமாக யோகா செய்கின்றார். தான் செய்யும் கடினமாக யோகா ஆசனங்களை அவர் இன்ஸ்டாகிராம் பக்கத்தில்பகிர்ந்து வருகின்றார். அவருக்கு இப்போது ௬௩ ஆயிரம் பேர் ரசிகர்கள்.
பள்ளிப் பருவம் முதல் தனது குண்டான உடலுக்காகவும், நிறத்துக்காகவும் பெரும்பாலானோரின் கிண்டலுக்கு உள்ளான தனக்கு யோகா ஒவ்வொரு நாளையும் எளிமையாகவும், இனிமையானதாகவும் மாற்றுகின்றது என்று வாலரி கூறுகின்றார். (ற–ரி4)

# நிதிப்பற்றாக்குறை காரணமாக ஐ.எஸ்ஸில் சம்பளக் குறைப்பு!

லண்டன், ஒக்.2
உலகையையே மிரட்டி வரும் ஐ.எஸ் தீவிரவாத அமைப்பில் ஏற்பட்டுள்ள நிதி நெருக்கடியால் தீவிரவாதிகளுக்கான ஊதியத்தை அமைப்பின் தலைவர் அபூபக்கர் அல் பாக்தாதி குறைத்துள்ளார்.
ஈராக் மற்றும் சிரியாவில் பல அட்டூழியங்களை அரங்கேற்றி வரும் ஐ.எஸ் தீவிரவாத அமைப்பு, எண்ணெய்க் கிணறுகளை சூறையாடுவது, வங்கிகளை கொள்ளையடிப்பது, பெண்களைக் கடத்தி பாலியல் சந்தையில் விற்பனை செய்வது போன்றவை மூலம் பணம் திரட்டி வருகின்றனர்.
அண்மைக் காலமாக அமெரிக்கா தலைமையிலான கூட்டுப்படைகள் ஐ.எஸ் தீவிரவாதிகள் மீது வான்வழித் தாக்குதல் நடத்தி வருகின்றன. அதனால் தீவிரவாதிகள் வெளியில் நடமாட முடியாமல் பெரும் அசௌகரியத்தை எதிர் நோக்குகின்றனர்.
இத்தனை நாள்கள் ஊதியம், மேலதிக கொடுப்பனவு இன்னும் பிற சலுகைகள் என்று சொகுசாக வாழ்ந்த தீவிரவாதிகளுக்கு தற்போது சம்பளம் வெகுவாக குறைக்கப்பட்டுள்ளமை பெரும் சங்கடத்தை ஏற்படுத்தியுள்ளது. (ற)

# ஐ.எஸுக்கு எதிராக ரஷ்யாவின் விமானத் தாக்குதல் ஆரம்பம்



மொஸ்கோ, ஒக்.2
சிரியாவில் உள்ள ஐ.எஸ். தீவிரவாதிகளுக்கு எதிராக ரஷ்யா தனது முதலாவது வான் தாக்குதலை நடத்தியுள்ளது. நேற்று முன்தினம் ரஷ்ய நாடாளுமன்றில் விமானத் தாக்குதல் நடத்துவதற்குக் கிடைத்த அனுமதியை அடுத்து ரஷ்ய விமானப்படை தாக்குதல்களை ஆரம்பித்துள்ளது.
அதேவேளை, ரஷ்ய விமானப் படைத் தாக்குதலில் பெண்கள், குழந்தைகள் உட்பட 36 பேர் உயிரிழந்துள்ளனர் என்று சிரியத் தகவல்கள் தெரிவிக்கின்றன.
ரஷ்ய பாதுகாப்பு அமைச்சு விடுத்துள்ள அறிக்கையின் படி, ஐ.எஸ் அமைப்பின் கட்டுப்பாட்டு நிலையங்கள், தொடர்பாடல் பரிவர்த்தனை நிலையங்கள், ஆயுதக்களஞ்சியங்கள் என்பன மீது தாக்குதல் நடத்தப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
சிரிய இராணுவத்தினருக்கு ஆதரவு வழங்கும் முகமாகவே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
சவூதி அரேபியா, ஐக்கிய அரபு எமிரேட்ஸ், ஜோர்டான், பஹ்ரைன், கத்தார், துருக்கி, ஆஸ்திரேலியா, பிரான்ஸ், கனடா மற்றும் பிரிட்டன் ஆகிய நாடுகள் ஐ.எஸ். அமைப்புக்கு எதிராகக் கைகோர்த்துள்ள நிலையில், தற்போது ரஷ்யாவும் தாக்குதல்களை ஆரம்பித்துள்ளது.
அதேவேளை, விமானத் தாக்குதல்கள், எறிகணைத் தாக்குதல்களால் பொதுமக்களே அதிகளவில் பாதிக்கப்பட்டு வருகின்றனர் என்று சிரியாவில் உள்ள மனித உரிமை அமைப்புகள் குற்றஞ்சாட்டி வருகின்றன. (ற–ரி4)

# சீனாவில் உளவு: ஜப்பானியர்கள் இருவர் கைது

பீஜிங், ஒக்.2
சீனாவில் உளவு பார்த்த குற்றச்சாட்டில் இரு ஜப்பானியர்கள் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர் என்று சீன வெளியுறவுத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது. ஆயினும் அவர்கள் குறித்த மேலதிக தகவல்களை வெளியிட சீன அரசு மறுத்துள்ளது.
குறித்த இருவரும் கடந்த மே மாதம் முதல் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர் என்று ஜப்பான் ஊடகத் தகவல்கள் தெரிவித்துள்ளன. அத்துடன் அவர்களுள் ஒருவர், வட லியோனிங் மாகாணத்தை சேர்ந்தவர் எனவும், மற்றையவர் கடலோர ஸிஜியாங் மாகாணத்தை சேர்ந்தவர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
டோக்கியோ அந்நிய நாடுகளில் உளவு நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றது என்று தெரிவித்த குற்றச்சாட்டை ஜப்பானின் உயர்மட்ட அரசபேச்சாளர் மறுத்துள்ளதுடன், தமது நாடு இது போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடுவது இல்லை எனவும் குறிப்பிட்டுள்ளார். (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





...து. இந்தியாவின் ராஜஸ்தான் மாநிலத்தில் ...டா கிராமத்துக்குள் தண்ணீர் தேடி நுழைந்த ...ாவம் அதனால் தலையை வெளியே எடுக்க ...வனத்துறையினருக்கும், பொலிஸாருக்கும் (ற)

# சிரிய, ஈரான் அகதிகளுக்காக 1.5 பில். டொலர் நிதியுதவி

## ஜப்பான் பிரதமர் அறிவிப்பு

டோக்கியோ, ஒக்.2

சிரிய மற்றும் ஈராக் அகதிகளுக்கு உதவும் வகையிலும், மத்திய கிழக்கு மற்றும் ஆபிரிக்காவில் சமா தானத்தைக் கட்டியெழுப்பும் முயற்சிகளை ஆதரிக்கவும் ஜப்பான்1.5பில்லியன்அமெரிக்கடொலர் நிதி உதவியை வழங்க முன் வந்துள்ளது என்று ஜப்பான் பிரதமர் ஷின்சோ அபே தெரி வித்துள்ளார்.

மோதல்கள் காரணமாக இடம் பெயர்ந்துள்ள சிரியர்கள் மற்றும் ஈராக்கியர்களுக்கு உதவும் வகையில், 810 மில்லியன் அமெரிக்க டொலர் ஒதுக்கப்பட்டுள்ளது என்றும் பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

இது கடந்த ஆண்டு ஜப்பான் வழங்கிய தொகையின் மும்மடங்கா கும்.

அதேவேளை, மத்திய கிழக்கிலும், ஆபிரிக்காவிலும் அமைதியையும் நல்லிணக்கத்தையும் கட்டியெழுப்பும் வகையில் 750 மில்லியன் அமெரிக்க டொலர் நிதிப் பங்களிப்பு வழங்கப்படவுள்ளது என்று பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் மோதல் காரணமாக ஈராக், சிரியா பகுதிகளிலிருந்து அகதிகளாக தஞ்சம் கோரி வருபவர்களை மேலும் ஏற்பதற்குத் தயாராக இல்லை என்பதில் தாம் உறுதியாகஉள்ளோம்என்றும்அவர் தெரிவித்துள்ளார். (ற)

## பேஸ்புக்கில் சுயவிவரப் படத்தை வீடியோவாக இணைக்கும் வசதி

நியூயோர்க், ஓக்.2

ஹாரிபொட்டர் திரைப்படத்தில், பாடசாலையின் செய்தித்தாளில் அசையும் கதாபாத்திரங்கள் வருவதைப்போல, எமது பேஸ்புக் பக்கத்திலும் அசையும் 7 வினாடி வீடியோக்களை புரொபைல் பிக்சராக (சுயவிவரப் படம்) பதிவேற்றும் வசதி தற்போது அறிமுகமாகியுள்ளது.

10 ஆண்டுகளாக இயங்கிவரும் பேஸ்புக் ஸ்மார்ட்போனில் இதனைப் பயன்படுத்துவோருக்கும் சேர்த்து எளிமையான, இனிமையான அனுபவத்தை ஏற்படுத்தும் விதமாக குறிப்புப் பகுதியில் சில மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது. நம்மைப் பற்றிய சுய விவரக் குறிப்பில் 100 எழுத்துக்களைச் சேர்க்கவும், மொபைல் போனுக்கு ஏற்றவாறு, சுயவிவரப் படத்தை பக்கத்தின் நடுவில் வைக்கும் வசதியும் அறிமுகமாக உள்ளது. அத்துடன், புகைப்படங்களை வைக்கும் பகுதியையும் அதிகரித்துள்ளனர்.(த–வ)

## ‘செல்பி’ ஆசையால் பறிபோனது உயிர்

மொஸ்கோ, ஒக்.2

'செல்பி' எடுக்க ஆசைப்பட்டு 17 வயது மாணவன் ஒருவன் பரிதாபமாக உயிரிழந்துள்ளான்.

ரஷ்யாவின் வோலக்டா நகரில் 17 வயது மாணவனொருவன் தனது நண்பர்கள் உதவியுடன் ஒரு கட்டத்தின் 9 ஆவது மாடியில் இருந்து தொங்குவதை செல்பி படம் எடுக்கத் தீர்மானித் துள்ளார்.


தன் உடலில் கயிற்றைக் கட்டிக் கொண்டு, ஒரு கையில் மொபைலுடன் 9 மாடிக் கட்டடத்தில் ஏறியுள்ளான்.வெளிச்சம் போதிய அளவில் இல்லாத கர்ரணத்தால் கயிறு ஓரிடத்தில் நைந்து இருந்தததை அவனால் கவனிக்க முடியவில்லை.

திடீரென கயிறு அறுந்து விழுந்ததில் 9 ஆவது மாடியில் இருந்து விழுந்த அந்த மாணவனுக்கு பலத்த காயம் ஏற்பட்டது. உடனடியாக மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டான்.

அங்கே அவனுக்குத் தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டது. எனினும் சிகிச்சை பயனின்றி அவன் உயிர் பிரிந்தது.

இது போன்று பல தடவைகள் ஆபத்தான செல்பி புகைப்படங்களை அவன் எடுத்திருக்கின்றான். நாம் பலமுறை எடுத்துக் கூறியபோதும் அவன் அவற்றைச் சட்டைசெய்ததில்லை என்றுஉயிரிழந்தமாணவனின் நண்பர்கள் கூறுகின்றனர்.

அண்மைக்காலமாக ரஷ்யாவில் இது போன்ற ஆபத் தான செல்பி புகைப்படங்களுக்காக தங்கள் உயிர்களை பறிகொடுப்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது என்று புள்ளி விவரங்கள் கூறுகின்றன. அண்மையில் அங்கு ரயில் முன்பாக நின்று செல்பிஎடுக்கமுயன்றமாணவி ஒருவர் ரயிலில் மோதுண்டு இறந்திருந்தார். (ற)



# அமெரிக்காவில் பெண்ணுக்கு சாவுத் தண்டனை நிறைவேற்றம்

## 70 ஆண்டுகளின் பின்னர்

அட்லாண்டா, ஒக்.2.

தென் அமெரிக்காவில், கடந்த 70 ஆண்டுகளின் பின்னர் பெண்ணொருவருக்கு முதன்முறையாகசாவுத் தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது.

ஐக்கியஅமெரிக்காவில்ஜோர்ஜியா மாநிலத்தைச் சேர்ந்த 47 வயதுடைய கெலி கிஸ்ஸென்டெய்னா என்ற பெண்ணுக்கே விச ஊசி ஏற்றப்பட்டுசாவுத் தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது.

கெலி கிஸ்ஸென்டெய்னாவின் கணவரான டக்ளஸ் 1997 ஆம் ஆண்டு கொலை செய்யப்பட்டார். இது தொடர்பில் கெலி மற்றும் அவரது முன்னாள் காதலரான கிரெகரி ஓவன்ஆகியோர் கைது செய்யப்பட்டிருந்தனர்.

விசாரணைகளில் கெலி தனது கணவரை திட்டமிட்டுக் கொலை செய்தமை உறுதியானதை அடுத்து அவருக்கு சாவுத் தண்டனை விதிக்கப்பட்டது. முன்னாள் காதலனான கிரெகரி ஓவனுக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது.

தண்டனையைக் குறைக்குமாறு கெலி செய்த மேன்முறையீடு உயர் நீதிமன்றத்தால் நிராகரிக்கப்பட்டிருந்தது. தனக்கு விதிக்கப்பட்டிருக்கும் சாவுத் தண்டனையை நிறைவேற்றுவதற்கு இடைக்காலத் தடை விதிக்க வேண்டும் என்று அமெரிக்க உயர் நீதிமன்றில் கெலி கடந்த செவ்வாய்க்கிழமை மனுத் தாக்கல் செய்தார். ஆயினும் அதுவும் தள்ளுபடி செய்யப்பட்டது.

அதையடுத்து நேற்றுமுன்தினம் அதிகாலை கெலிக்கு விச ஊசி ஏற்றப்பட்டு சாவுத் தண்டனை நிறைவேற்றப்பட்டது.

ஜோர்ஜியாவில் 1945 ஆம் ஆண்டு பெண்ணொருவருக்கு சாவுத் தண்டனை நிறைவேற்றப்பட்டது. அதன்பின்னர் நேற்றுமுன்தினம் கெலிக்கு சாவுத் தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது.

அண்மையில் அமெரிக்காவுக்குப் பயணம் மேற்கொண்டிருந்த பாப்பரசர் குறித்த வழக்குத் தொடர்பில் மறுபரிசீலனை செய்யுமாறு ஆய்வுக் குழுவைக் கேட்டுக் கொண்டார். எனினும் இந்தசம்பவம் தொடர்பில் கருணை காட்டப்படமாட்டாது என ஆய்வுக்குழு தெரிவித்திருந்தது. (ற–ரி4)



# குண்டுஸ் நகரம் மீண்டும் ஆப்கன் படை வசமானது



காபூல், ஓக்.2


தலிபான்களால் கைப்பற்றப்பட்ட ஆப்கனின் முக்கிய நகரான குண்டுஸ் மீண்டும் தம்மால் கைப்பற்றப்பட்டுள்ளது என்று ஆப்கன் உள்துறை அமைச்சின் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

ஆப்கன் இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட கடும் தாக்குதலை அடுத்து ஒரே இரவில் குண்டுஸ் நகர் இராணுவத்தின் வசம் வீழ்ந்தது என்று தெரிவிக்கப்பட்டது. இந்தத் தாக்குதலில் 13 ஆயிரம் இராணுவத்தினர் பங்குகொண்டனர்.

அதேவேளை, தலிபான் அமைப்பின் ஊடகப் பேச்சாளர் இதுகுறித்துத் தெரிவிக்கையில், நகரின் பல பகுதிகள் தற்போது தமது வசமே உள்ளன என்று தெரிவித் தார். (ற–ரி4)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மனித நேயத்துக்கு உருவம் தந்த அண்ணல் மகாத்மா காந்தி



**இன்று அவரது 146 ஆவது ஜெயந்தி தினம்**

எம். ஷாந்தன் சத்தியகீர்த்தி எம்.ஏ.,
பொதுச் செயலாளர்,
அகில இலங்கை காந்திசேவா சங்கம்.

மகாத்மா காந்தியடிகளின் 146 ஆவது ஜெயந்திதினம் இன்று வெள்ளிக்கிழமை கொண்டாடப்படு கிறது. இந்தத் தினம் சர்வதேச அகிம்சை தினமாகவும் ஐக்கிய நாடுகள் சபையால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. இதனை முன்னிட்டு இந்த ஆக்கம் பிரசுரமாகிறது.

கங்கை நீரிலும் புனிதமானவர். இமயத்தைக் காட்டிலும் உயர்ந்து நிற்பவர் என உயிர் வாழ்ந்த காலத்திலேயே கோடான கோடி மக்களால் போற்றப்பட்டவர் காந்தியடிகள். எந்தப் பிரச்சினையையும் அகிம்சை மூலமாகத் தீர்த்துவிடலாம் என்பதைத் தமது அனுபவத்தில் நிரூபித்துக் காட்டியவர் அவர். உண்மை எல்லாவற்றையும் விட உயர்ந்தது என்று கூறி தெய்வ அவதாரம் எடுத்தவர் காந்திஜி. உலகுக்கு ஒரு புதிய அரசியல் அத்தியாயத்துக்கு வழி வகுத்துத் தந்தவர் அவர். மனித நேயத்துக்கு உருவம் தந்த அவர் அகிம்சையின் பிதா ஆவார்.

அன்பு அன்பை வளர்க்கும். துவேசம் துவேசத்தை வளர்க்கும் என்பது காந்தி மகானுடைய கொள்கை. துவேசத்தை துவேசத்தால் வெல்ல முடியாது. துவேசத்தை அன்பினால்தான் வெல்லமுடியும் என்பது அவரது சித்தாந்தம். அவர் கைக்கொண்ட அகிம்சாதர்மம், சத்தியாக்கிரக போராட்ட வழிமுறைகள் இன்றும்கூட ஒடுக்கப்பட்ட மக்களால் மிக உயர்ந்த தத்துவங்களாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. இன்றும் கூட சுதந்திர இந்தியாவிலும் இலங்கையிலும் ஒடுக்கப்பட்ட மக்கள் அதிகாரபீடத்துக்கு எதிராகப் போராடும்போது தமது கோரிக்கைகளை வலியுறுத்த மகாத்மா காந்தி வழிவகுத்த போராட்ட முறைகளையே கையாளுகின்றனர்.

இப்படியும் ஒரு மனிதர் உண்மையிலேயே வாழ்ந்தாரா? என்று எதிர்கால உலகம் சந்தேகப்படும் என்று கூறியிருந்தார். விஞ்ஞானி ஐன்ஸ்டின்.

காந்தியடிகளின் வாழ்க்கையின் ஒரு பகுதியை முதன்முதலில் எழுதிய கே.கே. டோக் என்ற கிறிஸ்தவப்பாதிரியார் தனது நூலில் பின்வருமாறு குறிப்பிடுகின்றார். "ரோமன் ரோலந்தை நினைக்கும்போது டால்ஸ்டாயின் ஞாபகம் வருகிறது. லெனினைப் பற்றி நினைக்கும்போது நெப்போலியன் ஞாபகம் வருகிறது. ஆனால் காந்தியைப் பற்றி நினைக்கும்போது இயேசுநாதர் நினைவுதான் வருகிறது. இயேசுநாதரைப்போல வாழ்கிறார். அவர் தேசியத்தைப் போலவே பேசுகிறார். அதற்காக அவர் என்றாவது ஒரு நாள் தம்முடைய உயிரையே கொடுத்தாலும் கொடுப்பார் என்று குறிப்பிட்டிருந்தார். பாதிரியார் சொன்னதும் பின்னர் உண்மையானது. இந்து – முஸ்லிம் ஒற்றுமைக்காகப் பாடுபட்ட அவர் இந்துத்துவ தீவிரவாதி ஒருவனால் சுட்டுக்கொல்லப்பட்டார். பிறப்பால் இந்துவான அவர் இஸ்லாமியர் நலனிலும் அதிக அக்கறை கொண்டிருந்தார். நான் ஒரு கிறிஸ்தவர், இந்து, முஸ்லிம், யூதர் என்று சொல்லிக் கொண்ட சமரச ஞானியாகக் காந்தி திகழ்ந்தார்.

தேசத்தின் தந்தை என்று போற்றப்படும் மோகன்தாஸ் சந்திராத் காந்தி, காபா காந்தி – புத்லிபாய் தம்பதியினருக்கு மகனாக 1869 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் இரண்டாம் திகதி இந்தியாவின் குஜராத் மாநிலத்தில் உள்ள போர்ப்பந்தரில் பிறந்தார். அரிச்சந்திரன் நாடகம் அவர் மனதில் உண்மையின் உயர்வை ஆழமாகப் பதித்தது. வயது முதிர்ந்து , பார்வையற்றிருந்த பெற்றோரை தன்தோளில் சுமந்துசென்ற சிரவணனின் கதை அவர் மனதில் பெற்றோரிடம் பெருமதிப்பை விதைத்தது. இளமையில் படித்த இந்த இரு கதைகளும் அவரது பிற்கால வாழ்வின் ஒவ்வொரு அங்கங்களிலும் செல்வாக்கைச் செலுத்தியிருந்தன.

லண்டனுக்கு சட்டம் படிப்பதற்காகச்சென்ற காந்தி தனது தாயாருக்கு மது அருந்த மாட்டேன், மாமிசம் சாப்பிட மாட்டேன், பிற மங்கையரை நாடமாட்டேன் என்ற மூன்று சத்தியங்களைச் செய்து கொடுத்தார். இறுதிவரை அவற்றை சிறிதும் பிசகாமலும் கடைப்பிடித்தமை அவரது மனதின் வலிமையைக் காட்டுகின்றது.

காந்தி வக்கீல் தொழிலுக்காகத்தான் தென்னாபிரிக்காவுக்குப் புறப்பட்டார். அப்போது தென்னாபிரிக்காவை ஆங்கிலஅரசின் நிறவெறி, இனவெறி, ஆதிக்கவெறி என்பன ஆட்டிப்படைத்தன. தென்னாபிரிக்காவில் காந்தி இருந்தவேளை டர்பன் நகரிலிருந்து பிரிட்டோரியா நகரம் செல்லும் ரயிலில் காந்தி இந்தக் கொடுமையை அனுபவித்தார். அங்கு தலை விரித்தாடிய நிறவெறியையும் இனவெறியையும் சகித்துக்கொண்டு அங்கு வெளிநாட்டவர் குறிப்பாக இந்தியர் வாழ்ந்து கொண்டிருப்பது காந்திக்கு மனவேதனையை அளித்தது. இந்தக் கொடுமைகளை எதிர்த்து நிற்க, அவர்களைப் பழக்க வேண்டியதன் அவசியத்தை காந்தி புரிந்து கொண்டார். தொழில் நேர்மை, சாதிசமய ஒற்றுமை உணர்வு, சுகாதாரமான வாழ்க்கை, ஆங்கிலம் பயில வேண்டியதன் அவசியம் ஆகிவற்றை எடுத்துக்கூறி இந்தியர்களை ஒன்றுதிரட்டிப் போராடினார். தென்னாபிரிக்காவில் இந்தியர்களுக்காக, ஆசிரியர்களுக்காகப் போராடும் போது பெரிதும் துணிவுடன் நின்றவர்கள் தமிழர்கள் என்று காந்தி பெரிதும் பாராட்டியிருக்கிறார். தில்லையாடி வள்ளியம்மையின் முன்னோர் தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்கள் ஆவர். அவரது தீரமும் தியாகமும் காந்தியின் நெஞ்சில் நீங்கா இடம்பெற்றிருந்தன. மிதவாதியும் சாத்வீக மனிதருமான காந்தியின் போராட்ட வடிவங்கள் எக்காலத்துக்கும் பொருந்தும் தன்மைமிக்கவையாக விளங்குகின்றன. அடிகளாரின் சத்தியாக்கிரகம், உண்ணாவிரதம் போன்ற அகிம்சைப் போராட்ட முறைகள் இந்தியாவைச் சுதந்திரமடைய வைத்தன.

காந்தியின் விரதம் சமூகநீதியான விடுதலைக்கும் வழிவகுத்தது. பல ஆலயங்களில் ஹரிஜன ஆலயப் பிரவேசத்துக்கும் அது வழி செய்தது. ஹரிஜன மக்களைக் கடவுளின் பிள்ளைகள் என்று அழைத்த காந்தி 1933 இல் ஹரிஜன் என்ற பத்திரிகை ஒன்றையும் ஆரம்பித்தார். சபர்மதி ஆசிரமத்தை ஹரிஜனத் தொண்டர்களின் நிர்வாகத்திலேயே காந்திஜி விட்டிருந்தார். எல்லா மக்களையும் சமமாக நோக்கிய தலைவராக அவர் விளங்கினார்.

காந்தி ராட்டையை அறிமுகம் செய்ததன் பின்னணி சுவையானது. கதே என்ற அறிஞரின் நாவலில் இளம் விதவை ஒருத்தி இசை, ஓவியம், தோட்டக்கலை என எதிலும் பெற முடியாத மன அமைதியை ராட்டையில் கண்டமை காந்தியின் மனதில் ஆழமாகப் பதிந்தது. அதையே இந்திய ஏழை மக்களுக்கு ஏற்ற ஓர் ஆறுதலாக அறிமுகம் செய்தார். காந்தி அறிமுகம் செய்த அடுத்த திட்டங்கள் அந்நியத் துணிகள் புறக்கணிப்பும் மதுவிலக்கும் ஆகும். ஈரோட்டில் காந்தி, ஈ. வே.ரா. வீட்டில் தங்கிய போதுதான் கள்ளுக்கடை மறியல் முடிவு செய்யப்பட்டது. இதை முதலில் ஆரம்பித்தவர்கள் நாகம்மை, ஈ.வே.ரா, சகோதரி கண்ணம்மா ஆகியோராவர். இதனால் மதுவிலக்குப் திட்டத்தில் தமிழ் நாட்டுக்குத் தனிப் பெருமை உண்டு என்று கூறப்படுகின்றது.

> **மகாத்மா காந்தியின் வாழ்வு, பணிகள், சிந்தனை, தத்துவம் ஆகியவற்றின் திரட்சியே சர்வோதயமாகும். உண்மையும், அகிம்சையுமே சர்வோதயத்தின் அடிப்படைக் கோட்பாடுகள். சர்வோதயம் என்பது அனைவரின் நலன் என்ற பொருளில் காந்தியடிகளால் பயன்படுத்தப் பட்டது. புத்தர், இயேசு வழியில் அனைவர் நலனுக்கும் துணையாக நிற்கும். காந்தியின் தத்துவமான காந்தியம் என்றும் வாழ்ந்த கொண்டேயிருக்கும்.**

காந்தியடிகளுக்கு மகாத்மா என்ற பட்டம் வழங்கிக் கௌரவித்தவர் மகாகவி தாகூர் ஆவார். ஆங்கில ஏகாதிபத்தியத்துக்கு எதிராகப் போராடிய காந்தியடிகளுக்கு முத்திரை வெளியிட்டு பெருமை சேர்த்த நாடாக இங்கிலாந்து விளங்குகின்றது. அமெரிக்காவின் ரைம் சஞ்சிகை சிறந்த மனிதராக தெரிவு செய்த முதலாவது இந்தியராக காந்தியடிகள் விளங்கினார். அவரது சுயசரிதையான சத்தியசோதனை அரிய வாழ்க்கைப் பாடத்தை வழங்குகின்றது.

மகாத்மா காந்தியின் வாழ்வு, பணிகள், சிந்தனை, தத்துவம் ஆகியவற்றின் திரட்சியே சர்வோதயமாகும். உண்மையும், அகிம்சையுமே சர்வோதயத்தின் அடிப்படைக் கோட்பாடுகள். சர்வோதயம் என்பது அனைவரின் நலன் என்ற பொருளில் காந்தியடிகளால் பயன்படுத்தப்பட்டது. புத்தர், இயேசு வழியில் அனைவர் நலனுக்கும் துணையாக நிற்கும் காந்தியின் தத்துவமான காந்தியம் என்றும் வாழ்ந்து கொண்டேயிருக்கும்.

# ஈழத்து முதற் பெண் சித்தரான நல்லூர் சடையம்மா

எஸ்.பத்மராஜா
விரிவுரையாளர்
(தேசிய கல்வியியற் கல்லூரி)

சிவபூமி என திருமூலரால் சிறப்பிக்கப்பட்ட ஈழத்தில் ஆன்மிக நெறியை வளர்ப்பதில் நல்லூர் தனித்துவம் பெற்ற இடமாகும். இந்த நல்லூரில் வாழ்ந்து நகுலேச்சரத்தில் சமாதியாகிய சடையம்மா திருநெல்வேலி கிழக்கில் முருகனை முழுமுதற் கடவுளாக போற்றும் உபசுப்பிரமணிய மரபு என வேதாகமங்களில் போற்றப்பட்ட செங்குந்த குலமரபில் வீரகத்திப்பிள்ளை– சின்னாச்சிப்பிள்ளை தம்பதியினருக்கு மகளாக 1865 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 19ஆம் திகதி ரோகினி நட்சத்திரத்தில் முத்துப்பிள்ளை என்ற திருநாமத்துடன் அவதரித்தார். கதிரேசு என்பவரை வாழ்க்கைத் துணைவராக ஏற்ற இவர், இரு பெண்பிள்ளைகளின் தாயாவார். குறிப்பிட்ட காலத்தில் இல்லற வாழ்வை நீக்கி தலைப்பட்டாள் நங்கை தலைவ[illegible] என்பதற்கமைய நல்லூர[illegible] தஞ்சம் என நம்பி நல்லூர் தேரடியில் மடம் அமைத்து முழுமைத் துறவு பூண்டு பணி புரிந்தார். நல்லூரில் இருந்து முருகனது அருளைப் பெற்ற இவர் நகுலேச்சரம், கதிர்காமம், நல்லூர், திருச்செந்தூர் ஆகிய இடங்களில் மடமமைத்துப் பணி புரிந்தார். நல்லூர் மடம் குருநாதரால் பராமரிக்கப்பட்ட பின், போர் இடரின் பின் அறுபத்துமூவர் குருபூசை மடம் என பெயர் மாற்றப்பட்டு விட்டது. நகுலேச்சரமடம், [illegible] விடு விக்காத பகுதியில் உள்ளன. திருநெல்வேலி கிழக்கு வெள்ளைப் பிள்ளையார் ஆலயத்துடனான மடம் மட்டும் எஞ்சி உள்ளதுடன் அனைத்து மடங்களுக்குமான தலைமையகமாக செயற்பட்டு வருகின்றது. ஈழத்துச் சித்தர் சடையம்மாவின் வாழ்க்கை வரலாற்றை சரவணை ஸ்ரீமான் ஆ.தில்லைநாத பிள்ளை என்பவர் அறுபது பாக்களில் அமைத்துள்ளார். இந்தப் பாக்கள் 1957 இல் சோ.சபாபதிப் பிள்ளை என்பவரது முகவுரையுடன் திருச்செந்தூர் ஆர்.நெல்லை வடிவேற்பிள்ளையின் அணிந்துரையுடன் சிறுநூலாக வெளிவந்தது.

கடையிற்சுவாமி, பால் குடிபாபா என்பவர்களை குருவாக ஏற்று ஞான உபதேசம் பெற்ற, இந்தப் பெண் சித்தரது ஆன்மிகப்பணி ஆராயப்பட வேண்டியது. போற்றப்பட வேண்டியது. 1936 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 5ஆம் திகதி சுக்கிர வார அனுசநட்சத்திரத்திலே குறிப்பிட்ட படி உச்சி வீங்கி வெடித்துச் சமாதி அடைந்தார். இவரது குரு பூசை திருநெல்வேலி கிழக்கு அருள்மிகு வெள்ளைப் பிள்ளையார் ஆலய சடையம்மா மடத்திலே சிறப்பாக கொண்டாடப்பட்டுவரு [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குற்றச் செயல்களுக்குத் துணைபோகும் மோட்டார் சைக்கிள்கள்

யாழ்.குடாநாட்டில் இடம்பெறுகின்ற குற்றச்செயல்களின் பின்னணியில் மோட்டார் சைக்கிள்கள் முக்கிய இடம் பிடிப்பதை அவதானிக்க முடிகின்றது. குற்றவாளிகளில் அநேகர் குற்றச் செயல்களைப் புரிந்துவிட்டு தப்பித்துச் செல்வதற்கு மோட்டார் சைக்கிள்களையே அதிகளவில் பயன்படுத்துகின்றனர்.

அண்மையில் இடம்பெற்ற பொலிஸாருடனான கலந்துரையாடலின்போது யாழ்.மேல்நீதிமன்ற நீதிபதி அவர்களும் மோட்டார் சைக்கிள்களைக் கட்டுப்படுத்துவது தொடர்பாக எடுத்துக் கூறியுள்ளார்.

இன்றைய இளைஞர்கள் மோட்டார் சைக்கிள்களில் சுற்றித் திரிவதையே தமக்குப் பெருமையாகக் கருதுகின்றனர். வேலை இருக்குதோ இல்லையோ மோட்டார் சைக்கிள்களில் ஆரோகணித்து வலம் வருவதே தமது இலட்சியம் எனவும் கொண்டிருக்கின்றனர்.

மோட்டார் சைக்கிள்களை ஏதாவது ஓர் இடத்தில் நிறுத்தி வைத்துவிட்டு கூடியிருந்து வீண்பொழுதைக் கழிக்கும் இளைஞர் கூட்டத்தை நாம் தினமும் காண்கிறோம். இவ்வாறான இளைஞர்களே குற்றச் செயல்களில் ஈடுபடுவதற்கான வாய்ப்பு அதிகமுள்ளது.

சில தினங்களுக்கு முன்னர் சுன்னாகம் பகுதியில் மோட்டார் சைக்கிள்களில் வந்த இளைஞர்கள் தாலிக் கொடிகளை அறுத்து எடுத்துச் சென்றுள்ளனர். பெண்ணொருவரின் சாதுரியமான நடவடிக்கையால் அவர் அணிந்திருந்த தாலிக்கொடி காப்பாற்றப்பட்டது. இவ்வாறு ஏராளமான நகைத்திருட்டுச் சம்பவங்களுக்கு மோட்டார் சைக்கிள்களே பயன்படுத்தப்பட்டுள்ளன.

சுன்னாகம் பகுதியில் இடம்பெற்ற இன்னுமொரு சம்பவத்தில் மூன்று மோட்டார் சைக்கிள்களில் வாள்களுடன் வந்த ஒன்பதுபேர் கடைகளில் வேலை செய்து கொண்டிருந்த இரண்டு இளைஞர்களை வாள்களால் வெட்டிக் காயப்படுத்தி விட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

இவ்வாறு இங்கு இடம்பெறுகின்ற குற்றச்செயல்களுக்கு மோட்டார் சைக்கிள்களே அதிகளவில் பயன்படுத்தப்படுகின்றமை தெளிவாகத் தெரிகின்றது.

போக்குவரத்துத் தேவைகளுக்குப் பயன்படுத்தப்படுகின்ற மோட்டார் சைக்கிள்களை இன்று தவறான காரியங்களுக்குப் பயன்படுத்தப்படுகின்றமை ஏற்றுக் கொள்ளத்தக்கதொரு விடயமாகத் தெரியவில்லை.

குடாநாட்டு வீதிகளை அதிகளவில் ஆக்கிரமித்து நிற்கும் மோட்டார் சைக்கிள்கள் அநேகமான வீதி விபத்துக்களுக்கும் காரணமாக அமைகின்றன. முறையான சாரதி அனுமதிப்பத்திரம் பெறாதவர்களும் மோட்டார் சைக்கிள்களை ஓட்டிச்செல்வதால் இந்த அவலநிலை தோன்றியுள்ளது. குற்றச் செயல்கள் புரிந்த பின்னர் தப்பித்துச் செல்வதற்கு அநேகமான சந்தர்ப்பங்களில் மோட்டார் சைக்கிள்களே குற்றவாளிகளுக்கு உதவுகின்றன.

ஆகவே மேல்நீதிமன்ற நீதிபதி அவர்கள் கூறிய அறிவுரையின் பிரகாரம் பொலிஸார் குற்றச் செயல்களுக்குப் பயன்படுத்தப்படும் மோட்டார் சைக்கிள்கள் தொடர்பாகக் கவனம் செலுத்துதல் வேண்டும். தவறான வழிகளில் பயன்படுத்தப்படும் மோட்டார் சைக்கிள்களைத் தடுத்து வைப்பதன் மூலமாக குற்றச் செயல்களை நிச்சயமாகக் கட்டுப்படுத்த முடியும்.

– **பொ.தங்கராசா**, அளவெட்டி.

# இனியாவது பொறுப்புடன் செயற்படுவார்களா?

ஒரு சில மோட்டார் சைக்கிள் ஓட்டிகளின் பொறுப்பற்ற செயல்களால் சாதாரண பொதுமக்கள் வீதியைக்கடந்து செல்வதில் அதிக சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. தற்போது அநேகமான பிரதான வீதிகள் அகலப்படுத்தப்பட்டு காப்பெற் வீதிகளாகவும் மாற்றியமைக்கப்பட்டுள்ளன. இதனால் வீதியின் ஒரு பக்கத்திலிருந்து மறுபக்கத்துக்குச் செல்லும் போது அதிக நேரம் தேவைப்படுகின்றது. ஆனால் வாகனங்களின் பெருக்கம் அதிகரித்துள்ளதால் எந்த நேரத்திலும் அதிகளவு வாகனங்கள் வீதிகளில் காணப்படுகின்றன. குறிப்பாக மோட்டார்சைக்கிள்களின் எண்ணிக்கை பல மடங்கு அதிகரித்துக் காணப்படுகின்றன.


சில மோட்டார் சைக்கிள் ஓட்டிகள் பொறுப்பற்ற விதத்தில் அதிவேகமாகச் செல்வதால் வீதியைக் கடப்பதில் அதிக சிரமம் காணப்படுகிறது. மஞ்சள் கோடுகளைக் கூட இவர்கள் கவனிப்பதாகத் தெரியவில்லை. அந்தக் கோடுகளையும் ஜெற் வேகத்தில் கடந்து செல்கின்றனர். அதைவிட மோட்டார் சைக்கிளின் முன்பக்கத்து வெளிச் சத்தை சந்தர்ப்பத்துக்கு ஏற்றவாறு குறைக் காது செல்வதையும் அவதானிக்க முடிகின்றது. பாதசாரி ஒருவர் வீதியைக் கடந்து செல்வதை அவ தானித்த பின்னரும் மோட்டார் சைக்கிளின் வேகத்தைக் குறைக்காது மோதவருவது போன்று வந்து பயமுறுத்துகின்றனர்.




இவர்கள் மனித உயிர்களைத் துச்சமாக மதிப்பதாகவே தெரிகின்றது. இனியாவது இவர்கள் பொறுப்புடன் செயற்படுவார்களா?

– *பரமபரன்.*

## கேலிச் சித்திரம்




நன்றி: லங்காதீப

# நம்பகத்தன்மை கொண்ட விசாரணை அவசியமானது

இலங்கை மனித உரிமைகள் விவகாரம் மற்றும் போர்க் குற்றச்சாட்டுகள் தொடர்பில் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தினால் நடத்தப்பட்ட விசாரணை தொடர்பான அறிக்கை மற்றும் இலங்கை விவகாரம் தொடர்பில் அமெரிக்காவால் முன்னெடுக்கப்பட்டுள்ள இலங்கையின் மனித உரிமைகள், நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறல் செயற்பாடுகளை ஊக்குவித்தல்' என்ற தலைப்பிலான பிரேரணைக்கு இலங்கையும் அனுசரணை வழங்கியுள்ளதால் பிரேரணை வாக்கெடுப்பின்றி நிறைவேறியுள்ளது.

இலங்கை தொடர்பாக ஐ.நா. மனித உரிமைகள் சபையில் சமர்ப்பிக்கப்பட்ட நான்காவது பிரேரணை இது. முதல் மூன்று பிரேரணைகளும் இலங்கைக்கு எதிராகக் கொண்டுவரப்பட்டவை. நான்காவது பிரேரணை முற்றிலும் எதிர்பாராதது. முதல் தடவையாக இலங்கை அரசும் தமிழ் மக்களின் ஏக பிரதிநிதியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மட்டுமல்ல புலம் பெயர் தமிழர் அமைப்பான உலகத் தமிழர் பேரவையும் பிரேரணைக்கு ஆதரவாக எச்சரிக்கையுடன் கூடிய கருத்துகளை வெளியிட்டுள்ளன.

எனவே பிரேரணையின் பரிந்துரைகளை நிறைவேற்றும் பொறுப்பு இலங்கை அரசுக்கு உண்டு. அமெரிக்கப் பிரேரணையில் உள்ளவாறு போர்க்குற்றம் குறித்த உள்ளக விசாரணைப் பொறிமுறை முறையாக உருவாக்கப்பட வேண்டும். பாதிக்கப்பட்டவர்கள் தொடர்பில் பொறுப்புக்கூறவேண்டியவர்கள் பொறுப்புக் கூறுவதற்கும், உண்மை வெளிக்கொண்டு வரப்படுவதற்கும், பாதிக்கப்பட்டோருக்கு இழப்பீடு பெற்றுக் கொடுக்கப்படுவதற்கும் உள்ளக விசாரணைப் பொறி முறை தவறுமானால் அது நம்பகத் தன்மையை இழந்துவிடலாம். கூட்டமைப்பும் ஒத்துழைப்பு வழங்க மறுக்கலாம்.

உள்ளகப் பொறிமுறை குறித்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவிக்கும் கருத்துகள் மற்றும் அமைச்சர் ராஜித சேனாநாயக்க தெரிவித்த கருத்துகளைக் கவனத்தில் கொள்ளும்போது இந்த விடயத்தில் சிங்கள மக்களுடன் அனுசரித்துச் செல்லவே ரணில் - மைத்திரி அரசு விரும்புவது தெளிவாகத் தெரிகிறது. அதனால் அரசாங்கம் உள்ளகப் பொறிமுறை விசாரணையை இழுத்தடிக்க முயற்சிக்கலாம். அல்லது பிரேரணையின் உள்ளடக்கங்களை முழுமையாக நிறைவேற்றத் தவறலாம். அதனால்தான் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கனடாக் கிளையில் உரையாற்றுகையில் நம்பகத் தன்மை வாய்ந்த விசாரணைக்கு மட்டுமே கூட்டமைப்பு ஒத்துழைப்பு வழங் கும் என்ற எச்சரிக்கையை விடுத்துள்ளார். கூட்ட மைப்பின் ஒத்துழைப்பின்றி எந்த ஒரு தீர்வையும் செயற்படுத்த முடியாது. நீண்ட காலத்துக்குப் பின்னர், பல தசாப்த காலத்துக்குப் பின்னர் தற்பொழுது இலங்கையில் சுமுகமான சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இதனைப் பயன்படுத்த கூட்டமைப்புத் தலைவர் இரா.சம்பந்தன் திட சங்கற்பம் பூண்டுள்ளார். ஆனால் அதற்காக நாம் மீண்டும் நம்பி ஏமாந்துவிட முடியாது. எச்சரிக்கையுடன் கூடிய ஒத்துழைப்பு முக்கியமானது.

கடந்த ஞாயிறன்று அலரிமாளிகையில் இடம் பெற்ற ஊடகங்களின் பிரதானிகளுடனான கலந்துரையாடலில் அமைச்சர் ராஜித சேனாரத்ன வெளி யிட்ட கருத்துகள் கூட்டமைப்பு எச்சரிக்கையுடன் செயற்பட வேண்டிய அவசியத்தை வலியுறுத்துகின்றன. வெளிநாட்டு சட்ட ஆலோசனை பெறப்பட வேண்டும் என்றோ வெளிநாட்டு ஆலோசகர்கள், நீதிபதிகள், சட்டத்தரணிகள் அவசியமென்றோ ஐ.நா. அறிக்கையில் வலியுறுத்தப்படவில்லை. தேவை ஏற்பட்டால் ஒத்துழைப்பை நாடலாம் என்று அமைச்சர் ராஜித கூறியுள்ளார்.

அமைக்கப்படும் நீதிப்பொறிமுறை மற்றும் விசேட கவுன்சில்களில் பொதுநலவாய மற்றும் வெளிநாட்டு நீதிபதிகள், பாதுகாப்பு சட்டத்தரணிகள் மற்றும் அதிகாரமளிக்கப்பட்ட சட்டத்தரணிகள், விசாரணையாளர்களின் பங்களிப்பு அவசியம் என்றே திருத்தப்பட்ட அமெரிக்கப் பிரேரணை கூறுகிறது.

மனித உரிமைகள் பேரவையின் 32ஆவது கூட்டத் தொடரில் இலங்கையின் செயற்பாடுகள் தொடர்பான வாய்மூல வினாக்களும் 34ஆவது கூட்டத் தொடரில் செயற்பாடுகள் தொடர்பான அறிக்கையும் கோரப்படுவதால் உள்ளக விசாரணைப் பொறி முறையை நீதியாகச் செயற்படுத்துவதற்கு அரசு உடனடியாக நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும்.

**பத்தி எழுத்து!**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021-492 7474, 021-492 7475, 021-567 9933, 021-567 9944
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## இலங்கை அரசே! இனி நீ என்ன செய்யப் போகிறாய்..!

இலங்கையில், பாதிப்புற்றவர்களையும், சாட்சிகளையும் பாதுகாக்கவல்ல நம்பகமான அமைப்பு ஒன்றேனும் இல்லை!

-ஆனாலும் நீண்டகாலம் நிலுவையில் உள்ள வழக்குகளை விசாரணை செய்வதற்கு சமீபத்திலேயே சட்டம் இயற்றப்பட்டுள்ளது. எனினும் அது இன்னமும் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட இல்லை!

★ போர்க்குற்றங்களை விசாரணை செய்வதற்கு உள்நாட்டின் சட்டக் கட்டமைப்பு போதுமானதாக இல்லை.

-மோதல்கள் தொடர்பான வழக்குகள் முன்னெடுக்கப்பட்டபோது, குற்றவியல் சட்டத்தின் ஊடாகக் குற்றங்கள் நிரூபிக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் அவ்வாறு செய்யப்படவில்லை.

★ இலங்கையில், பாதுகாப்புத்துறை மற்றும் நீதித்துறை அமைப்புக்கள் பல தசாப்தங்களாக சிதைக்கப்பட்டு விட்டன.

-மனித உரிமைகள் ஆணைக்குழு போன்ற முக்கிய நிறுவனங்கள், சுயாதீனம் மற்றும் நேர்மைத்திறன் கொண்டிருக்கவில்லை.

★ சட்டமா அதிபர் அலுவலகம் போன்ற முக்கிய நிறுவனங்கள் சுயாதீனம் மற்றும் நேர்மைத் தன்மையைக் கொண்டிருக்கவில்லை.

★ பாதுகாப்புப் படையினர், பொலிஸ், புலனாய்வுச் சேவையினர் தண்டனை விலக்குப் பெறும் அனுகூலம், போர் முடிவுற்ற பின்னரும் கூட, அகற்றப்படவில்லை!

அதனால், மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள், மிகக் குறிப்பாகப் போர்க்குற்றங்கள் குறித்து விசாரணைகளை மேற்கொள்வதற்கு தற்காலிகமாகவேனும் சிறப்பு நீதிமன்றத்தை நிறுவவேண்டும் என்பது எனது பரிந்துரையாகும்.

அனைத்து இலங்கையர்களுக்கும், மிகக் குறிப்பாக பாதிப்புற்றவர்களுக்கு, எவ்வகைப் பாகுபாடும் இன்றி சுதந்திரத்தையும், பாகுபாடின்மையையும் வழங்க வேண்டும்.

மேற்போந்தவற்றை விரிவாகவும், உரிய காரண காரியங்கள் மற்றும் புறநிலைகளையும் அழுத்திக் கூறியுள்ளார், மனித உரிமைகள் பேரவையின் செயலாளர் சயிட் அல் ஹுசைன்-

கலப்பு நீதிமன்றத்தின் ஊடாகவே, போர்க் குற்ற விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என்று அடித்து அழுத்திக் கூறியுள்ளார் அவர்.

இலங்கை அரசே! நீ என்ன செய்யப் போகிறாய்?-என்று அனைத்துலக அரசுகள் தட்டிக்கேட்கும் சூழமைவை ஆணையாளர் சயிட் அல் ஹுசைன் ஏற்படுத்தியுள்ளார்.

அவர் தமது உரையை-அவதானிப்புக்களை-ஆழமாக அர்த்தபுஷ்டியுடன் ஆற்றி உள்ளார் என்று, கொழும்பு அரசதரப்பு சப்பைக்கட்டை போட்டுச் சமாளிக்க இய லாது, முடியாது. தனது ஒவ்வொரு கருத்துக்களையும் கனதியாகவும், வித்தியாசமாகவும் முன்வைத்திருக்கிறார் அவர்.

போர்க்குற்றம் சார்ந்த விசாரணைகளை நடத்தவல்ல நீதித்துறை இலங்கையிடம் இல்லை என்ற, பொட்டுகேட்டையும் அவர் அனைத்துலகத்துக்கும் உடைத்துக் காட்டிவிட்டார்; சபாஷ்.

இலங்கை அரசும் அதன் பிரதானிகளும், வழமைபோன்று இனியும் மழுப்பல், சளப்பல் காரணங்களையும், இட்டுக் கட்டும் எடுகோள்களையும் மேலெழுப்ப இயலாது!

மொத்தத்தில்-

எது எப்படியோ, அரசு தன்னைச் சூழ்ந்துள்ள வினையைப் போக்குவதற்கு, அருட் சுனைகளில் நீராடி, அரசியல் பாவங்களைக் கழுவி, மனித நேயத்தை ஆரத்தழுவி, சிறுபான்மையினர் தொடர்பில் ஜனநாயகத்துக்கு சிறிதும் ஊறு செய்யாமல் சுவாழ்வுக்குவழிவகுக்கட்டும்.

அதனை எதிர்பார்க்கலாமா...?

இலங்கை அரசு மட்டுமன்றி, சாய்ந்தால் சாயிற பக்கமே சாயும் அனைத்துலக அரசுகள் பலவற்றுக்கும் இது சமர்ப்பணம்.

# சிறுவர்களையும், முதியவர்களையும் மதிக்கப் பழகிக் கொள்வோம்



● மு.ஈழத்தமிழ்மணி

உலகம் முழுவதிலும் ஒவ்வொருஆண்டும் வருகின்ற ஒக்ரோபர் முதலாம் நாள் உலக சிறுவர் தினம் மற்றும் முதியோர் தினமாக அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது. இன்றைய சிறுவர்களே நாளைய எதிர்காலச் சிற்பிகளாவர். அவர்களின் கைகளிலேயே உலகத்தின் எழுச்சியும், வீழ்ச்சியும் தங்கியுள்ளது. இன்றைய சிறுவர்களே நாளைய உலகின் தலைவர்களாக மாறி இந்த உலகத்தின் இயக்கத்தை நிலைநிறுத்த வேண்டும்.

சிறுவர்களின் உரிமைகள் மதிக்கப்பட வேண்டும். அவர்களுக்கான கௌரவம் வழங்கப்பட வேண்டும். முதியோர்களும் கௌரவிக்கப்பட வேண்டும். முதியவர்களும் நன்மதிப்போடு பேணப்படல் வேண்டும். ஆனால் இன்றைய மனித சமுதாயமானது நாகரிகத்தின் விளிம்பை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கும் அதேவேளை, சிறுவர்களுக்கெதிராக மேற்கொள்ளுகின்ற வன்முறைகளும், துஷ்பிரயோகங்களும், முதியோர்களை மதிக்காத சம்பவங்களும் உலகம் முழுவதிலும் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டு செல்கின்றன.

மூன்றாம் உலக நாடுகளில் விபச்சாரம், சுரண்டல், உழைப்பு என்பன தனித்துவமான பிரச்சினைகளாக மாறிவிட்டன. இன்றைய நிலையில் வறுமை, பஞ்சம், பசி, பட்டினி போன்றவற்றுக்கு எதிராகப் பல மில்லியன் சிறுவர்கள் உலகடங்கலாகப் போராடிக் கொண்டிருக்கின்றனர்.

இலங்கையில் சிறுவர் துஷ்பிர யோகமானது நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்கின்றது. போர் முடிந்த பின்னர் சிறுவர்கள் மீதான அடக்கு முறைகள் தீவிரமாகியுள்ளன. இலங்கையில் சிறுவர் துஷ்பிரயோகம் அதிகளவில் வடக்கு – கிழக்கு மற்றும் மலையகப் பகுதிகளில் இடம் பெறுவது மட்டுமன்றி, நாடளாவிய ரீதியில் கட்டுப்படுத்த முடியாத நிலைக்குச் சென்றுள்ளது.

இலங்கையில் நடந்து முடிந்த போர்க் காலப்பகுதியில் மூவினத்தைச் சேர்ந்த சிறுவர்களும் பல்லாயிரக் கணக்கில் உயிரிழந்துள்ளனர். அவயவங்களை இழந்துள்ளனர். பெற்றோர்களை, உறவுகளை இழந்[illegible] [illegible] ஆதரவற்ற நிலையில் இன்றும் உள்ளனர். வடக்கு – கிழக்கு மாகாணங்

**இலங்கையில் சிறுவர் துஷ்பிரயோகம் அதிகளவில் வடக்கு-கிழக்கு மற்றும் மலையகப் பகுதிகளில் இடம் பெறுவது மட்டுமன்றி நாடளாவிய ரீதியில் கட்டுப்படுத்த முடியாத நிலைக்குச் சென்றுள்ளது.**

களில் சமூகத்தைச் சிந்திக்கவிடாமல் சிந்தனைத் திறன்கள், எண்ணங்கள் என்பனவற்றை மழுங்கடித்து சிறுவர்களைச் சீரழிக்கின்ற சமூக விரோதக் கும்பல்கள் தோன்றியிருப்பதால் சிறுவர்களின் சுதந்திர நடமாட்டம் பாதிக்கப்பட்டு வருகின்றது.


1990ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் முதலாம் திகதி சர்வதேச முதி யோர் தினம் பிரகடனப்படுத்தப்பட்டு அவ்வாண்டு முதல் தொடர்ந்து அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது. 2002 ஆம் ஆண்டிலிருந்து சர்வதேச ரீதியில் முதியோர்களுக்கான செயற்பாட்டுத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. 21ஆம் நூற்றாண்டில் வயது முதிர்ந் தோர் எதிர்கொள்ளக்கூடிய சவால்கள் மற்றும் வாய்ப்புக்களைக் கருத்தில் கொண்டும், அனைத்து வயதினரையும் முன்னிலைப்படுத்துகின்ற நோக்கிலும் இந்தத் திட்டம் கொண்டு வரப்பட்டதொன்றாகும்.

முதியவர் என்பவர் யார்? முதி யோர் என்பவர்கள் தாமாகப் பூமியில் தோன்றியவர்கள் இல்லை. ஒரு தாயின் வயிற்றின் கருவிலே உருவாகி பச்சிளம் குழந்தையாகத் தவழ்ந்து, வளர்ந்து, பெரியவர்களாகி திருமணம் புரிந்து குழந்தைகளைப் பெற்று அவர்களை ஆளாக்கி உயர்ந்த நிலைக்கு கொண்டு வந்து முதுமையிலும் இன்ப, துன்பங்களை எண்ணி மகிழ்ச்சியும் கவலையும் அடைபவர்களே முதியவர்கள் ஆவர். சுக துக்கங்களை எல்லாம் புறம் தள்ளிவிட்டு தமது பிள்ளைகளுக் காகவே வாழ்பவர்கள் இவர்கள். இப்படிப்பட்ட முதியவர்களுக்கு கௌரவமும் மரியாதையும் வழங்குவது நமது கடமையாகும்.


முதியோர் சுதந்திரம், பங்களிப்பு, வயதானவர்களை மதித்தல் என் பன உலக முதியோர் தினத்தின் முக்கிய கொள்கைகளாகும்.

சிறுகுழந்தைப் பராயம் முதல் முதியோர் என்ற பெயர் கிடைக்கும் வரை மனிதனின் வாழ்வு நீண்டு அமைகின்றது. இன்றைய காலப்பகுதியில் முதியோர்களை மதிப்பது குறைந்து செல்கின்றது. முதியோர்கள் என்றால் வேண்டா வெறுப்பாகவே கணிக் கப்படுகின்றனர். இவர்களைப் பராமரிப்பதே பெரும் சுமை எனப் பிள்ளைகள் கருதுகின்றனர். தங்களது சுதந்திரமான வாழ்வுக்கு இவர்கள் ஏதோ ஒரு விதத்தில் தடைபோடுவதாக எண்ணுகின்ற னர். இதனால் அவர்களைப் புறக் கணித்து நடத்துகின்றனர். இறக்கும் தறுவாயில்கூட பிள்ளைகள் அவர்களின் மனதைக் காயப்படுத்துகின்றனர்.

இதன் காரணமாகவோ என்னவோ முதியோர் இல்லங்கள் நாட்டில் அதிகரித்து வருகின்றன. சில குடும்பங்களில் முதியோர்கள் தனித்து விடப்பட்டு, அநாதையாக்கப்படுகின்றனர். இந்த நிலை மாறவேண்டும். முதியோர்களின் உணர்வுகள் மதிக்கப்பட வேண்டும். அவர்களை ஒதுக்கி வைக்கின்ற மனப்பாங்கு மாறவேண்டும். நாமும் சில ஆண்டுகள் செல்ல முதியவராக மாறுவோம் என்ற உணர்வு எம் எல்லோருக்கும் இருக்க வேண்டும். நாட்டில், சில கிராமங்களில் தொண்ணூறு வயதில் இருந்து நூறு வயதைத் தாண்டிய முதியோர்கள் இன்றும் தேகாரோக்கியத்தோடு வாழ்கின்றனர். உறவினர்களால் மதிக்கப்படுகின்றனர். இது ஒரு சில குடும்பங்களிலேதான் காணப்படு கின்றது. சமூகத்தில் முதியவர்களை மதித்து நடக்க வேண்டும் . அவர்களைப் போற்றி நடப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வந்தியத்தேவர்

# சாவுத் தண்டனைதான் தீர்வாக முடியுமா?

பெண்கள், சிறுமிகள் மீதான பாலியல் துன்புறுத்தல்கள், வன்புணர்வுப் படுகொலைகள் என்பன இப்போதெல்லாம் அதிகரித்த வண்ணமாகவே உள்ளன. கம்பகா கொட்டதெனியவைச் சேர்ந்த சிறுமி சேயா மற்றும் ஜெருசா, புங்குடுதீவு மாணவி வித்தியா ஆகியோர் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டுக் கொலை செய்யப்பட்ட சம்பவங்கள் குறித்து பரவலான கண்டனப் போராட்டங்களும் நீதி வேண்டிய கோரிக்கைகளும் இனவேறுபாடுகளின்றி அனைத்து மக்களாலும் மேற்கொள்ளப்பட்ட நிலையிலும் கூட பெண்கள், சிறுமிகள் மீதான இது போன்ற கொடுமைகள் தொடர்ந்து கொண்டிருப்பது, பொதுமக்கள் அரசின் மீதான நம்பிக்கையை இழக்கச் செய்கின்றது. தூக்கத்தில் இருந்த சிறுமியைத் தூக்கமுயற்சி, பொலநறுவை மன்னம்பிட்டிப் பகுதியில் ஒன்பது வயதுச் சிறுமி வன்புணர்வு, கண்டி அங்கும்புர பகுதியில் சிறுமிக்கு ஆபாசப் படங்களைக் காட்டிய இளைஞன், வேலணையில் ஆயுதங்களுடன் வீடு புகுந்து கணவனைத் தாக்கிவிட்டு மனைவியை வன்புணர்வுக்கு உட்படுத்திய கும்பல் என தினசரி நாட்டின் ஏதாவது ஒரு பகுதியில் இடம்பெறும் வன்முறைச் சம்பவங்கள் குறித்த செய்திகள் வெளிவந்த வண்ணமாகவே உள்ளன. சிறுமிகள், பாடசாலை மாணவிகள், மூதாட்டிகள் என வேறுபாடுகளின்றி இடம்பெறும் இந்த பலாத்கார நடவடிக்கைகளில் இளசுகள் மட்டுமன்றி 64, 74 என்று வயது முதிர்ந்தவர்கள் கூட ஈடுபடுவது அதிர்ச்சிக்குரியதாகும். பெற்ற பிள்ளை, பேரப்பிள்ளை என்ற உணர்வுகள் கூட இவர்களிடமிருந்து விலகிவிட, மனிதப் பண்புகளையும் தொலைத்தவர்களாக மிருகங்களைவிடக் கேவலமாக நடந்து கொள்கின்றனர். மாணவி வித்தியாவின் படுகொலைக்குப் பின்னால் மக்களிடையே இது குறித்து ஏற்பட்ட விழிப்புணர்வு எதிர்காலத்தில் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறாத நிலையை உருவாக்கும் என எதிர்பார்க்கப்பட்ட போதிலும் இந்த ஆர்ப்பாட்டங்கள் எதிர்ப்புக் கண்டனப் போராட்டங்களின் பின்னரும் கூட வன்புணர்வுப் படுகொலைகள் அதிகரித்த வண்ணம் உள்ளதுதான் மனிதர்கள் எங்கு சென்று கொண்டிருக்கிறார்கள் என்ற கேள்வியை எழுப்புகின்றது.




நாடளாவிய ரீதியில் 9 மாதங்களில் 795 பேர் மீது பாலியல் வல்லுறவுச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. 2014 இல் சிறுவர் பெண்கள் என 1680 பேர் இவ்வாறான துன்புறுத்தல்களுக்கு உள்ளாகி இருப்பதாக பொலிஸ் பிரதி ஊடகப் பேச்சாளர் பிரியந்த ஜெயக்கொடி தெரிவிக்கின்றார். நாட்டில் வன்புணர்வுப் படுகொலைகள் அதிகரிப்பதற்கு சம்பந்தப்பட்டவர்கள் மீது மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளும் மந்தகதியில் உள்ளதே காரணமாகும். மாணவி வித்தியாவின் படுகொலையைத் [illegible] கள் மீதான வி[illegible]களும் துரிதமாக்கப்படலாம் என பொதுவாக அனைத்து மக்களுமே எதிர்பார்த்த போதும் அவ்வாறான நிலை தோற்றுவிக்கப்படவில்லை. வித்தியாவின் படுகொலை தொடர்பாக விசேட நீதிமன்றம் அமைத்து குற்றவாளிகள் துரிதமாகத் தண்டனைக்கு உட்படுத்தப்படுவார்கள் என வித்தியாவின் குடும்பத்தவர்களைச் சந்தித்துக் கவலை தெரிவித்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் வாக்குறுதியும் இப்போது மறக்கப்பட்ட தொன்றாகிவிட்டது. குற்றவாளிகளைத் தூக்குத் தண்டனைக்கு உட்படுத்த வேண்டும் என வலியுறுத்திப் போராட்டங்களை முன்னெடுத்தவர்கள், குற்றவாளிகளை எங்களிடம் ஒப்படையுங்[illegible]புறுத்தியவர்கள் எல்லோ[illegible]றை மறந்துவிட அவரது குடும்பத்தினர் மட்டுமே மகளின் கொலைக்கு உரிய நீதி கிடைக்காதா என ஏங்கிக் கொண்டிருக்கிறார்கள். பெரிய வன்கொடுமைகள் தொடர்ந்த வண்ணம் உள்ளன.

சிறுமிகள், பாடசாலை மாணவிகள், பெண்கள் எனச் சங்கிலித் தொடராக வன்புணர்வுப் படுகொலைகள் இடம்பெற்றுவரும் நிலையிலும், அவை குறித்து சரியான நீதி விசாரணைகள் இடம்பெறுவதில்லை எனவும் மக்கள் கருதுவதால் அவர்களும் மௌனமாகி விட்டதாகக் கொள்ளவும் வாய்ப்புக்கள் இல்லை. வித்தியா, ஜெருசா, சேயா ஆகியோரின் வன்புணர்வுப் படுகொலைக்கு நீதி கேட்டும் சிறுமிகள், பாடசாலை மாணவிகள், பெண்களுக்கான பாதுகாப்பு வழங்கக்கோரியும், பெண்களுக்கான அமைப்புக்கள் கண்டனப் பேரணியை முல்லைத்தீவில் நடத்தியுள் ளன.

சிறுவர்கள், பெண்களைப் பாதுகாப்பதற்கான சட்டம் வெறுமனே சட்டப்புத்தகங்ளில் வரையப்பட்ட ஒன்றாகவே அமையக்கூடாது. இது போன்ற சம்பவங்களைத் தடுக்க சட்டரீதியாக எடுக்கக்கூடிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என பெண்கள் மற்றும் சிறுவர்கள் விவகார அமைச்சர் சந்திராணி பண்டார கூறியுள்ளார். மோசமான பாலியல் படுகொலைகளுக்குத் தூக்குத் தண்டனை வழங்கப்பட வேண்டும் என்பதுடன் இது தொடர்பான விசாரணைகள் ரயல் அட்பார் நீதி மன்றங்கள் ஊடாக துரிதப்படுத்தப்பட வேண் டும் என்பதும் மக்களின் கருத்தாக உள்ளது. நாடாளுமன்றம் அங்கீகரித்தால் சாவுத் தண்டனையை நடைமுறைப்படுத்தத் தாம் தயார் என்பதும் ஜனாதிபதியின் கருத்து. தற்சமயம் பாலியல் துஷ்பிரயோகங்கள் அதிகரித்துள்ள நிலையில் சம்பந்தப்பட்ட வழக்கு விசாரணைகளைத் துரிதமாக முடித்துத் தாமதமின்றித் தண்டனைகளை வழங்குவதும் எதிர்காலத்தில் இவ்வாறான குற்றங்கள் படிப்படியாகக் குறைவடைய வழியமைக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உணவு உண்டவுடன் பழங்களை உண்ணலாமா?



உணவு உண்ணும் முறைகளும், உண்ட பின்னர் என்ன செய்யக் கூடாது என்பது பற்றியும் தெரிந்து கொள்ளுங்கள்.

**உணவு உண்டவுடன் தூங்கக் கூடாது:**
உணவு வகைகள் ஜீரணமாவதற்குச் சீரான குருதி ஓட்டம் இருக்க வேண்டும். தூங்கும்போது ஜீரணத்துக்குத் தேவையான குருதி கிடைக்காது. இதனால் ஜீரணக் கோளாறுகள் ஏற்படும்.

**உணவு உண்ட பின்னர் உடற்பயிற்சி செய்யக் கூடாது:**
உடற்பயிற்சி செய்யும்போது தசைகளுக்கு அதிக குருதி செல்லும். இதனால் ஜீரண உறுப்புகள் முறையாகச் செயல்பட, போதிய குருதி கிடைக்காது. சாப்பிட்டு, 3 அல்லது 4 மணி நேரத்துக்குப் பின்னர் உடற்பயிற்சியில் ஈடுபட லாம். பொதுவாக் வெறும் வயிற்றில் உடற்பயிற்சி செய்வதே நல்லது.
காலைஉணவைத்தவிர்க்கக்கூடாது. உணவு உண்டவுடன் நடைப்பயிற்சி மேற்கொண்டால், ஜீரண உறுப்புக்களால் செரிமானம் செய்யப்பட்ட உணவுகளைக் கிரகித்துக் கொள்ள முடியாது.

**உணவு உண்டவுடன் குளிக்கக் கூடாது:**
இதனால், கை, கால், உடல்பகுதிகளுக்குகுருதி ஓட்டம் சென்று, ஜீரண உறுப்புகளுக்கு போதிய குருதி ஓட்டம் இருக்காது. நாளைடைவில் ஜீரண உறுப்புக்கள் வலுவிழந்து விடும். குளித்தால் முக்கால் மணி நேரத்துக்குப் பின்னர் தான் உணவை உண்ண வேண்டும். உணவு உண்டால் இரண்டரை மணி நேரத்துக்குப் பின்னர் தான் குளிக்க வேண்டும்.
உருளைக்கிழங்குசிப்ஸ், அப்பளம், ஊறுகாய் ஆகியவற்றை அதிகம் உண்பதைத் தவிர்க்கவும். காலையில் அதிகமாகவும், இரவில் குறைவாகவும் உண்ண வேண்டும்.

**உணவு உண்டவுடன்பழங்கள் சாப்பிடலாமா?**
சாப்பாட்டுக்கு முன் பச்சைக் காய்கறிகளை உண்ண வேண்டும். காலையில் வெறும் வயிற்றில் பழங்கள் உண்டால், உடலில் சேர்ந்திருக்கும் நச்சுப்பொருள்களை மலமாக வெளியேற்றும்.
இதனால், உடலுக்குப் புத்துணர்ச்சி கிடைக்கும். உணவு உண்டவுடன் பழம் சாப்பிட்டால் முதலில் பழம் தான் ஜீரணமாகும். உணவுகள் செரிக்க கூடுதல் நேரமாகும். உண்ட உணவு செரிக்காத நிலையில், பழங்களை உண்பதால் வயிற்றுக்குள்ளே செரிமானமாகிக் கொண்டிருக்கும் உணவு கெட்டுப் போகும்.
உணவு உண்டவுடன் பழங்களை உண்பதால்வயிறு காற்று அடைத்து வீங்கிவிடும். உணவுண்டு 1–2 மணி நேரம் கழித்து தான் பழங்களை உண்ண வேண்டும் அல்லது உணவு உண்பதற்கு 1 மணி நேரத்துக்கு முன் பழங்களை உண்ணவேண்டும்.

## இலட்சியத்துடன் வாழ்

உண்மைக்காக எதையும் துறக்கலாம். ஆனால் எதற்காகவும் உண்மையைத் துறக்காதே. வலிமையே மகிழ்ச்சிகரமான, நிரந்தரமான, வளமான, அமரத்துவமான வாழ்க்கை ஆகும். தன்னலம் சிறிதும் இல்லாமல், நிறைந்த அன்புடன் பழகுபவர்களே இப்போது உலகத்துக்குத் தேவைப்படுகிறார்கள். இரக்கம் உள்ள இதயம், சிந்தனை ஆற்றல் படைத்த மூளை, வேலை செய்யக் கூடிய கைகள் ஆகிய இந்த மூன்றும் எமக்குத் தேவை. வீரர்களே, கனவுகளிலிருந்து விழித்தெழுங்கள்! தளைகளிலிருந்து விடுபடுங்கள்! இளைஞனே, வலிமை, அளவற்ற வலிமை – இதுவே இப்போது தேவை. சிறந்த லட்சியத்துடன் முறையான வழியைப் பின்பற்றித் தைரியத்துடன் வீரனாக விளங்கு!

**விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....**



## கடலுணவுகளின் நேற்றைய விலை நிலவரம்

| | யாழ்ப்பாணம் | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித்துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|
| இறால் | 650 | 750 | 700 | 800 | 500 | 500 |
| நண்டு | 250 | 400 | 300 | 400 | 200 | 400 |
| கணவாய் | 550 | 600 | 300 | 600 | 700 | – |
| பாரை | 500 | 550 | 500 | 600 | 700 | 420 |
| சுறா | 500 | 600 | – | 700 | 600 | – |
| சீலா | 200 | 400 | 300 | 400 | 400 | 350 |
| விளை | 600 | 500 | – | 400 | – | 350 |
| முரல் | 250 | 400 | – | 300 | 400 | 300 |
| கும்பிளா | 350 | 400 | 300 | 400 | 400 | 250 |
| கிழாக்கன் | 500 | 800 | 300 | 500 | 400 | – |
| ஓரா | 300 | 400 | 300 | 400 | – | – |
| திரளி | 200 | 300 | 100 | 300 | 200 | 300 |
| நகரை | 150 | 300 | 200 | 300 | 200 | 300 |
| சூடை | 150 | 200 | 80 | 120 | 100 | – |
| ஒட்டி | 200 | 300 | 100 | 300 | – | – |
| திருக்கை | 150 | 300 | 250 | 300 | 300 | 240 |
| பாலை | 300 | 300 | – | 500 | – | – |
| வாழை | 100 | 150 | – | 300 | 300 | 200 |
| கொய் | 100 | 150 | 100 | 100 | 50 | – |
| மதனம் | 100 | 300 | – | 250 | – | 250 |

## மரக்கறிகளின் நேற்றைய விலை நிலவரம்

| | மருதனார் மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல் வேலி | கிளிநொச்சி | மன்னார் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 40 | 40 | 40 | 60 | 40 | 60 | 60 | 25 |
| கத்தரி | 60 | 80 | 60 | 60 | 40–60 | 50 | 80 | 35–40 |
| கரட் | 70 | 80 | 80–120 | 60 | 60–100 | 120 | 100 | 100 |
| மரவள்ளி | 50 | 50 | 50 | 50 | 25–40 | 60 | 50 | 35–40 |
| பயிற்றை | 60 | 60 | 60 | 60 | 50–80 | 120 | 100 | 50–40 |
| பாகல் | 100 | 80 | 100 | 100 | 100–120 | 120 | 110 | 80 |
| கருணைக்கிழங்கு | 60 | 100 | 80 | 80 | 60 | 80 | 120 | 70 |
| பெ.வெங்காயம் | 120 | 100 | 100 | 100 | 100 | 120 | 120 | 80–90 |
| சி.வெங்காயம் | 90 | 100 | 50–100 | 120 | 70–80 | 100 | 100 | 80–90 |
| பூசணி | 30 | 30 | 40 | 40 | 30–40 | 60 | 50 | 40 |
| தக்காளி | 80 | 80 | 100 | 100 | 100–120 | 100 | 80 | 70 |
| வாழைக்காய் | 100 | 50 | 50 | 50 | 60–80 | 40 | 60 | 35–40 |
| கீரை | 20 | 20 | 30 | 15 | 20 | 30 | 30 | 20 |
| பொன்னாங்காணி | 20 | 40 | 30 | 20 | 20 | 40 | 15 | 10 |
| பச்சை மிளகாய் | 120 | 150 | 160 | 120 | 140–160 | 100 | 200 | 100–120 |
| புடோல் | 40 | 70 | 40 | 60 | 40–60 | 60 | 60 | 40 |
| கோவா | 70 | 80 | 70 | 70 | 40–50 | 80 | 100 | 50 |
| வெண்டி | 70 | 40 | 60 | 60 | 60–70 | 60 | 50 | 35–40 |
| போஞ்சி | 160 | 140 | 160 | 160 | 140–160 | 180 | 160 | 140 |
| லீக்ஸ் | 80 | 70 | 100 | 80 | 50–60 | 80 | 80 | 60–70 |
| தேங்காய் | 50 | 50 | 50 | 60 | 40–60 | 40–50 | 35–40 | 35 |
| உருளைக்கிழங்கு | 120 | 110 | 100 | 100 | 100–120 | 120 | 100 | 100–120 |
| தேசிக்காய் | 200 | 150 | 160 | 120 | 160–180 | 300 | 160 | 250 |
| வல்லாரை | 20 | 20 | 10 | 10 | 20 | 20 | 15 | 08–10 |
| கறிமிளகாய் | 100 | 100 | 120 | 80 | 70–100 | 80 | 120 | 70–80 |
| இராசவள்ளி | – | – | – | 160 | 120 | 120 | 180 | 80–9[illegible] |
| முருங்கைக்காய் | 120 | 80 | 120 | 80 | 100–140 | 80 | 120 | 70 |

## நாளை

புரட்டாதி–16
சனிக்கிழமை
03.10.2015

திதி: ஷஷ்டி
மு.இ.09.29 வரை
நட்சத்திரம்:ரோகிணி
பி.ப.01.56 வரை
சுபநேரம்:
003.02–04.32 வரை
இராகுகாலம்:
09.02–10.32 வரை

# சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 5 | | | | 3 | 6 |
| | 3 | | 8 | | | | 9 | |
| | | 7 | | | 4 | 5 | | |
| 7 | | | | 1 | 5 | | | |
| | 6 | 3 | | | | 9 | 5 | |
| | | | 2 | 3 | | | | 1 |
| | | 2 | 7 | | | 8 | | |
| | 7 | | | | 8 | | 4 | |
| 5 | 8 | | | | 9 | | | |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 9 | 4 | 3 | 7 | 5 | 1 | 8 | 2 |
| 2 | 7 | 3 | 9 | 1 | 8 | 5 | 6 | 4 |
| 5 | 1 | 8 | 6 | 2 | 4 | 9 | 7 | 3 |
| 4 | 6 | 5 | 8 | 3 | 1 | 2 | 9 | 7 |
| 8 | 2 | 9 | 5 | 4 | 7 | 3 | 1 | 6 |
| 7 | 3 | 1 | 2 | 6 | 9 | 4 | 5 | 8 |
| 3 | 5 | 2 | 7 | 9 | 6 | 8 | 4 | 1 |
| 1 | 8 | 7 | 4 | 5 | 2 | 6 | 3 | 9 |
| 9 | 4 | 6 | 1 | 8 | 3 | 7 | 2 | 5 |

சுடோக்கு ஒரு எண் விளை யாட்டு. தர்க்க ரீதியான ஒழுங் குபடுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண் களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண் டும். இந்தப் பெட்டி 9 நிரல் களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக் கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட் டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என் றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிர லிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண் டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ் வாறே 1-9 இலக் கங்கள் இரட்டைப்படாம[illegible] வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டி யதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்ப தாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிறந்த எண்பலன் பற்றி தெரிந்து கொள்வோம்

1,10, 19, 28 ஆகிய திகதிகளில் பிறந்தவர்கள் முதலாம் எண் ஆதிக்கத்துக்கு உரியவர்கள். முதலாம் எண்ணுக் குரிய கிரகம் சூரியன் ஆவார்.

### குண அமைப்பு

1ஆம் எண் ஆதிக்கத்தில் பிறந்தவர்கள் சூரியன் எப்படி உலகுக்கு ஆதாரமாக விளங்கி ஒளி தருகின்றதோ, அது போல பலருக்கும் நன்மை செய்து வாழ்வார்கள். தைரியமும், வீரமும், அஞ்சா நெஞ்சமும் கொண்டவர்கள், அன்பும், பண்பும், மரியாதையும், தெய்வபக்தியும் கொண்ட குண இயல்பும் இருக்கும். வீரம் நிறைந்து அமைதியுடன் தோற்றம் அளிப்பார்கள். வம்புச் சண்டைக்குப் போக மாட்டார்கள். வந்த சண்டையை விடவும் மாட்டார்கள். எதிரிகளைப் பந்தாடும் ஆற்றல் இவர்களுக்கு உண்டு. தன்னம்பிக்கை அதிகம் இருக்கும். நியாயத்தை மிகவும் தைரியமாக எடுத்துக் கூறுவர். தீர்மானமான கருத்துக்களை கொண்டவராகவும், நல்ல உழைப்பாளியாகவும் இருப்பர். முன்கோபம் அதிகம் இருந்தாலும் அது நியாயத்துக்காகவே இருக்கும். கள்ளம்கபடமின்றி அனைத்துக் காரியங்களையும் துணிந்து செயற்படுத்துவதால் இவர்களுக்கு விரோதிகளும் அதிகம் இருப்பர். பெரிய தவறுகளை எளிதில் மன்னிக்கும் சுபாவம் கொண்ட இவர்கள், சிறிய தவறுகளைப் பெரிதாக்கி விடுவார்கள். தமது மனசாட்சியையே சட்டமாகக்கொண்டுநியாயவாதியாகச் செயற்படுவார்கள். தனக்கு இடையூறு செய்தவர்களைப் பந்தாடிய பின்னர் தான் நிம்மதி அடைவார்கள். தனக்கு நிகரில்லாதவர்களிடம் சரிசமமாகப் பழக மாட்டார்கள். தன்னிடம் தவறு இருந்தால் மன்னிப்புக் கேட்பார்கள். பிறருடைய தவறுகளையும் தனக்குக் கீழ்ப்படிந்தால் மன்னிக்கக் கூடியவர்கள். இவர்களுடைய போக்கு சிலருக்கு நியாயமாகத் தோன்றினாலும், பலருக்கு அநியாயமாகத் தோன்றும். வாழ்வில் பலமுறை தோற்றாலும் இறுதியில் வெற்றி இவர்களுக்கே. இராஜதந்திரத்தைக் கையாள்வதில் திறமை பெற்றவர்கள். ஆதலால் மற்றவர்களின் தந்திரம் இவர்களிடம் பலிக்காது. எதிலும் தனித்து நின்று போராடி வெற்றி பெறுவார்கள். வயது, அனுபவம் உதாரண குணமும் அமையும். இவர்களிடம் வஞ்சனை, சூது, முதலியவற்றை காண்பது அரிது. வெள்ளை உள்ளம் கொண்ட இவர்கள் தங்களால் முடிந்த உதவிகளை பிறருக்கு செய்வார்கள். அதிக பேச்சுத்திறமை உண்டு. எதிலும் சுதந்திரமாகச் செயற்படக்கூடிய ஆற்றல் கொண்டவர்கள்.

### உடல் அமைப்பு ஆரோக்கியம்

முதலாம் எண்ணில் பிறந்தவர்கள் நல்ல கம்பீரமான தோற்றத்தை உடையவராக இருப்பார்கள். உடலுக்கேற்ற உயரமும், பருமனும், கனிந்த பார்வையும், உருண்டை முகமும் இருக்கும். நிமிர்ந்த நடையும், தவறு கண்ட இடத்தில் சீறிப்பாயக்கூடிய குணமும் இருக்கும். பெரும்பாலானவர்களுக்கு கண் தொடர்பான பலவீனம் இருக்கும். கண்ணாடி அணிய நேரிடும். இருதயம் சம்பந்தப்பட்ட நோய்களும்,



குருதி அழுத்தம் சம்பந்தப்பட்ட நோய்களும், அஜீரணக் கோளாறு போன்ற நோய்களும் அதிகம் ஏற்பட வாய்ப்புண்டு. புளிப்பு, காரம் ஆகியவற்றை அதிகம் சாப்பிடுபவர்கள். ஆதலால் உணவு விடயத்தில் மிகவும் கவனத்துடன் செயற்படுவது நல்லது- உஷ்ணம் சம்பந்தப்பட்ட நோய்களும் உண்டாகக்கூடும் என்பதால் குளிர்ச்சியான பொருள்களை அதிகம் சாப்பிடுவது நல்லது.

### குடும்ப வாழ்க்கை

முதலாம் எண்ணில் பிறந்தவர்கள் அதிக கலாரசனை உடையவர்கள். ஆகையால் இளமையில் அடிக்கடி காதல் வயப்படுவார்கள். அனேகமாக இவர்களுக்குக் காதல் திருமணம் நடைபெறுவதற்கான வாய்ப்பு அதிகம். கூட்டுக் குடும்பத்தை விட தனித்து வாழ வேண்டும் என்பதே இவர்களின் விருப்பம். தனித்து வாழ்ந்தாலும் மற்றவர்களை ஆதரிக்கும் பொறுப்பிலிருந்து செய்து முடிப்பார்கள். திருமண வாழ்க்கையில் சில கருத்து வேறு பாடுகள் தோன்றி சில நேரங்களில் கவலைகளை உண்டாக்கும். அனுசரித்து நடக்கக்கூடிய வாழ்க்கைத் துணை வாய்த்தால் மட்டுமே குடும்ப வாழ்க்கை அமைதியானதாக இருக்கும்.

### பொருளாதாரம்

முதலாம் எண்ணில் பிறந்தவர்களுக்கு பொருளாதார நிலை ஒரே சீராக இருக்கும். ஆடம்பர வாழ்க்கையையும், உயர்தரமான ஆடை, அணிகலன்கள் அணிவதையுமே விரும்புவார்கள். எவ்வளவு சம்பாதித்தாலும் அதற்கேற்ற செலவுகளும் இருக்கும். கடன்கள் அதிகம் ஏற்படாது. ஏற்பட்டாலும் அவற்றைச் சமாளிக்கும் ஆற்றலும் இருக்கும்.

### தொழில்

முதலாம் எண் சூரியனின் ஆதிக்கம் கொண்டது. எதிலும் முதன்மையாகச் செயற்படக்கூடிய திறன் கொண்டவர்கள், வாழ்வில் அதிகம் சம்பாதிக்கும் திறமை. நல்ல உயர்வான பதவிகள், பலரை நிர்வகிக்கும் பொறுப்பு யாவும் அமையும். அரசியல் சம்பந்தப்பட்ட துறை களில் நல்ல முன்னேற்றம் கிட்டும். அரச உத்தியோகமும் இவர்களுக்கு அமையும். சித்த மருத்துவம், ஹோமியோபதி போன்றவற்றிலும் நல்ல முன்னேற்றம் கொடுக்கும். எடுக்கும் காரியங்கள் அனைத்திலும் திறம்படச் செயற்பட்டு அதிகாரமிக்க பதவிகளை அடைவார்கள். தேவையற்ற எதிர்ப்புகளும் இருக்கும்.

### நண்பர்கள்- பகைவர்கள்

முதலாம் எண்ணில் பிறந்தவர்கள் சூரியன் ஆதிக்கத்தில் பிறந்தவர்கள் என்பதால் இவர்களுக்கு அதிகார குணம் இருக்கும். இவர்களை அனுசரித்து நடப்பவர்கள் மட்டுமே இவர்களுக்கு நண்பர்களாக இருக்க முடியும். 2,9,3 ஆகிய எண்களில் பிறந்தவர்கள் இவர்களுக்கு நண்பர்களாகவும் 4,5,7,8 ஆகிய எண்களில் பிறந்தவர்கள் இவர்களுடன் ஒத்துப் பழக முடியாதவர்களாகவும் இருப்பார்கள். நண்பர்களைத் தேர்ந்தெடுப்பதில் கவனத்துடன் செயற்பட்டால் நல்ல நட்புகள் கிடைக்கும்.

### சூரியனுக்குரிய காலம்

ஒவ்வொரு வருடமும் ஆங்கில வருட ரீதியாக ஜூலை 22 முதல் ஓகஸ்ட் 22 ஆம் திகதி வரை சூரியனுக்குரிய காலமாகும். ஞாயிற்றுக்கிழமை சூரியனுக்கு உரியது.

### சூரியனுக்குரிய திசை

சூரியனுடைய திசை கிழக்கு. பிரார்த்தனை செய்யும் இடம், பூஜை அறை, சமையல் அறை போன்றவை சூரியனுக்குரியவை. எந்த வேலை செய்வதாக இருந்தாலும் கிழக்குப் பக்கமாக இருந்து தொடங்கினால் அற்புதமான நற்பயனை அடையலாம்.

### அதிர்ஷ்டக் கல்

சூரியனின் ஆதிக்கமான எண் ஒன்றில் பிறந்தவர்கள் அதிஷ்டக் கல்லாக மாணிக்கத்தை செப்பு உலோகத்தில் பதித்து அணிய வேண்டும். இந்த அதிர்ஷ்டக் கல்லை அணிவதன் மூலம் மனோதைரியம், சாந்தமான குணம், எடுக்கும் முயற்சிகள் அனைத்திலும் வெற்றி போன்ற நற்பலன்கள் உண்டாகும். உஷ்ணம் சம்மந்தப்பட்ட நோய்கள், கண்நோய் போன்றவை விலகும். தனவரவும், நன்மதிப்பும் உண்டாகும்.

### பரிகாரங்கள்

முதலாம் எண்ணில் பிறந்தவர்கள் சூரிய தேவனுக்கு பரிகாரம் செய்வது நல்லது. தினமும் காலையில் சூரிய நமஸ்காரம் செய்வது. சிவ வழிபாடுகள் மேற்கொள்வது நல்லது.

### அதிர்ஷ்டம் தருபவை

அதிர்ஷ்டத் திகதிகள் -1,10, 19, 28
அதிர்ஷ்டத் நிறங்கள் - இளஞ்சிவப்பு, மஞ்சள்
அதிர்ஷ்டத் திசை - கிழக்கு
அதிர்ஷ்டக் கிழமை ஞாயிறு
அதிர்ஷ்டக் கல் - மாணிக்கம்
அதிர்ஷ்ட தெய்வம் சிவன்

# பெண்களுக்கு பொறுமையே அவசியம்

**பொ**றுமை என்பது பெண்களுக்கு இருக்க வேண்டியதொரு குணம் என ஆண்களில் பலர் எதிர்பார்ப்பது உண்டு. பொறுமை என்பது எங்களுக்கு மட்டுமா இருக்கவேண்டும்? அது ஆண்களுக்கு இருக்கக் கூடாதா எனச் சில பெண்களும் கேட்டுக்கொண்டு இருக்கின்றார்கள். பொறுமை என்பது ஆண்களுக்கும் பெண்களுக்கும் பொதுவாக இருக்க வேண்டியது என்பதில் எந்தவிதச் சந்தேகமுமில்லை. "பொறுத்தார் நாடாள்வார் பொங்கினார் காடாள்வார்" எனத் தமிழ்ப் பழமொழி ஒன்று கூறுகிறது. இது பொறுமையின் முக்கியத்துவத்தை உணர்த்திக் காட்டுவதற்கு உதாரணமொன்றாகும்.

மனிதன் மிருகங்களைவிட சிறப்பாக ஆறாவது அறிவைப் படைக்கப்பட்டுள்ளான். சிந்தித்துச் செயற்படும் மாண்பாக ஆறாவது அறிவைப் பெற்றிருக்கின்றான். சிந்தனையின் நெறிப்படுத்தலில் பகுத்தறிவு செயற்பட்டு மனிதர்களை மனிதம் மிகுந்த நடத்தைகளின் மூலம் நல்லவர்களாக்கி நல்வாழ்வுக்குள் நுழைத்து உலகுக்குக் காட்டிக்கொண்டிருக்கின்றது.

பொறுமையில் பல நன்மைகளும், பிரச்சினைகளுக்குத் தீர்வுகளும் இருக்கின்றன. பொறுமையில்லாதவர்கள் தமக்கு நிகழவிருக்கும் பல நன்மைகளையும் சந்தோஷங்களையும் நழுவவிட்டுக் கொண்டு வாழ்கின்றனர். அதேபோல் பொறுமையிழக்க நேரும் சந்தர்ப்பங்களில் சமயோசிதமாகப் பொறுமை காத்துக்கொண்டு வாழ்வில் வெற்றிகளைக் கண்டவர்களும் இந்த உலகில் இல்லாமலில்லை. முன்பெல்லாம் ஆண்கள் வெளியில் வேலைகளுக்குச் சென்று வருவார்கள். பெண்கள் வீடுகளில் இருந்து கொண்டு கணவர்மாரது பணிகள், குழந்தைகள் பராமரிப்பு, பெற்றோரை அரவணைத்தல் மற்றும் வீட்டு வேலைகள் எனப் பலதரப்பட்ட பாத்திரங்களை ஏற்று நடத்துவார்கள். இதனால் உழைப்பு என்பதில் முழுக்க முழுக்க ஆண்களை நம்பியே பெண்கள் வாழ்ந்து வந்தார்கள். அந்தக் காலங்களில் ஆண்கள் பொறுமையில்லாதவர்களாகவும், பெண்கள் பொறுமையுள்ளவர்களாகவும் காட்டப்பட்டிருக்கின்றார்கள். இந்தப் பழக்கங்கள் இன்றைய காலகட்டத்தில் பரிணாமம் பெற்றுச் சென்றுவிட்டது.

இணையவள்



நேரம் என்பது போதுமான அளவு இருந்த காலங்களில் வேலைகளும் அதிகமாக இருந்து வந்தன. குடும்ப வாழ்வில் பலதரப்பட்ட உறவினர்களின் உதவிகளும் அரவணைப்புக்களும் அனுசரணையும் அந்தக் காலகட்டத்தில் இருந்தது. இன்றைய இயந்திர காலகட்டத்தில் நேரத்துக்கு ஒரு வேலையை முடித்துவிடுவதற்கு நேரமே தடையாக இருக்கின்றது எனலாம். அத்துடன் அவரவர் வேலைகளை அவரவரே முடித்துக்கொள்ளும் சூழ்நிலைக்கும் தம்மை மாற்றிக் கொண்டுள்ளனர். பெண்களும் வெளியில் சென்று வேலை செய்கின்றனர். வீட்டு வேலைகள், குழந்தைப் பராமரிப்பு என்ற பலதரப்பட்ட கடமைகளும் அவர்களுக்கு உண்டு. குடும்ப வருமானத்திலும் தமது பங்களிப்பை செலுத்திக் கொண்டிருக்கின்றனர். வெளியில் வேலைக்காகச் சென்று வரும் பெண்களுக்கு அலுப்பும், சலிப்பும், கோபமும் ஏற்படாது என்பதற்கு எந்தக் காரணங்களும் சொல்லிக் கொண்டிருக்க முடியாது. அவர்களும் இயல்பில் மனிதர்கள் என்பதால் மனிதனுக்குரிய அனைத்துக் குணாதிசயங்களும் அவர்களுக்கும் இருக்கத்தான் செய்யும். இதனைப் பொறுமையுடன் பொறுத்துக் கொண்டு செயற்படும் பாத்திரத்தை இல்லறத்தில் இன்றைய ஆண்கள் ஏற்று நடத்த வேண்டும் என்பது பெண் களின் எதிர்பார்ப்பாக இருக்கலாம்.

கணவன் – மனைவிக்கு இடையில் பொறுமை இழக்கும் வேளைகளில் கோபம் வெளிவரத் தொடங் கும். இவ்வாறான நேரங்களிலும் இருவரும் பொறுமை காத்துக் கொள்வது மிக முக்கியமானதொன்றாகும். கோபத்தில் உரத்துப் பேசுதல், கூச்சலிடுதல், வசை பாடுதல் மற்றும் வீட்டிலுள்ள பொருள்களைப் போட்டு உடைத்தல் போன்ற செயற்பாடுகளைத் தவிர்த்துக் கொள்ளல் அவசியமாகின்றது. ஒரு மனிதன் பொறுமையாக இருக்கத் தன்னைப் பழக்கிக் கொள்வானாக இருந்தால், அவனிடம் அன்பும் அதிகமாக இருக்கும். அன்பு அதிகரிக்கும்போது கோபப்படுவது சகஜமாகிவிடும். பொறுமை இழந்து கோபம் அதிகமாக வரும்போது எமது சிந்தனை மறைந்து விடும். இந்தச் சந்தர்ப்பத்தில்தான் செய்வதை அறியாது தன்னால் செய்யப்பட்ட தவறைப் பிறகே புரிந்து கொள்கின்றான்.

அதிகமாகக் கோபம் ஏற்படும்போது கணவனோ அல்லது மனைவியோ விட்டுக் கொடுப்பதில் இருவருக்கும் தோல்வி என்பது இல்லை. விட்டுக் கொடுப்பின் மூலம் சந்தோஷம் கெட்டுவிடாமல் இருக்கும். இல்லறம் சிறப்புறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உதவி

கழுதை ஒன்று, நிறைப் பொதிகள் சுமந்து கொண்டு சென்றது. அதன் பின்னால் கழுதையின் எஜமானருடன், அவர் வளர்க்கும் நாயும் வந்து கொண்டிருந்தது. செல்லும் வழியில் புற்றரையைப் பார்த்ததும், கழுதையை அங்கு மேய விட்டு மரத்தின் நிழலில் படுத்துத் தூங்கினார் எஜமானர். கழுதை அங்கிருந்த புற்களை நன்கு மேய்ந்தது. ஆனால், நாய்க்கு உண்பதற்கு எதுவுமில்லை. பசி, அதன் வயிற்றைப்பிடுங்கியது. பொறுத்துப் பொறுத்துப் பார்த்த நாய், கடைசியாக கழுதையைப் பார்த்து, 'நண்பனே, என்னால் பசியைத் தாங்க முடியவில்லை. எஜமானரோ தூங்குகிறார். கொஞ்சம் கீழே படு. உனது பொதியில் உள்ள உணவில் கொஞ்சம் எடுத்துக் கொள்கிறேன்' என்று கெஞ்சியது.

நாயின் கெஞ்சலை கழுதை பொருட்படுத்தவில்லை. அது ஆனந்தமாகப் புற்களை மேய்ந்து கொண்டிருந்தது. நாயும் விடாமல் கெஞ்சிக் கொண்டிருந்தது. நாயின் தொந்தரவு தாங்காத கழுதை, 'என்னப்பா அவசரம்? எஜமானர் விழிக்கட்டும். அவர் சாப்பிடும்போது உனக்கும் தான் கொடுப்பாரே' என்றது. வேறு வழியில்லாமல் நாய் சோர்ந்துபோய்ப் படுத்துக் கொண்டது.


அப்போது ஓநாய் ஒன்று மேய்ந்து கொண்டிருந்த கழுதை மீது பாய்ந்தது. பயத்தால் அலறிய கழுதை, 'நண்பா, சீக்கிரம் ஓடிவந்து என்னைக் காப்பாற்று' என நாயைப் பார்த்துக் கதறியது.

படுத்திருந்த இடத்தை விட்டு எழுந்திருக்காமல், 'ஏன் அவசரப்படுகிறாய்? கொஞ்சம் பொறுமையாக இரு, எஜமானர் விழிக்கட்டும். அவர் தான் கட்டாயம் உனக்கு உதவி செய்வாரே' என்றது நாய். கழுதை, நாய்க்கு உதவி செய்யாத தனது தவறை நினைத்து வருந்தியது.

நீதி: நாம் மற்றவர்களுக்கு உதவினால்தான், மற்றவர்களும் எமக்கு உதவி செய்வார்கள்.

# வர்ணம் தீட்டலாம் வாங்க





# பொது அறிவுத் தகவல்கள்


1. எமது உடலில் மிகவும் கடினமான தோல் பாதத்தில் உள்ளது.
2. கழுத்து வலி, மருத்துவத்துறையில் செர்விகல் ஸ்பான்டிலிடிஸ் என்று அழைக்கப்படுகிறது.
3. ஹைப்பர் தெரிமியா என்பது உடல் வெப்பநிலை அதிகமாகுதல்.
4. ரேனுலா என்பது நாக்குக்கு அடியில் தோன்றும் நீர்க்கட்டி
5. எலும்பு, பற்களில் உள்ள புரதம் ஓட்சிசன்
6. மனித உடலில் வியர்வைச் சுரப்பிகள் சுமார் 3 மில்லியன்களுக்கு மேல் உள்ளன.
7. செரடோனின் வேதிப்பொருள் குறையும் போது தலைவலி ஏற்படும்.
8. வேகஸ் நரம்புக்கு இதயத் துடிப்பை குறைக்கும் தன்மை உள்ளது.
9. குருதிக்கு நிறம் கொடுப்பது ஹீமோகுளோபின்.
10. பெருங்குடலின் நீளம் 100 முதல் 150 செ.மீ ஆகும். சிறுகுடலின் நீளம் 5 மீற்றர்.
11. பெருங்குடலின் பணி தண்ணீர் மற்றும் தாது உப்புக்களை உறிஞ்சுதல்.
12. உடலின் மிகப் பெரிய சுரப்பி கல்லீரல்.
13. பித்தப்பை கல்லீரலின் கீழ்ப் பாகத்தில் அமைந்துள்ளது.

# தவளையார்

தத்தித் தத்தித் தவளையார்
தாவித் தரையில் பாய்கிறார்
கத்திக் கத்தி இரவெல்லாம்
கண்ணை விழித்துப் பாடுறார்
கிட்டே பாம்பு வந்ததும்
எட்டி அஞ்சி ஓடுறார்
அருகில் நீரைப் பார்த்ததும்
எகிறித் தாவிக் குதிக்கிறார்.



# வெற்றி வேண்டுமா?



எதைச் செய்தாலும் வெற்றிக்காகவே செய்கிறோம். ஆனால், எப்படிச் செய்கிறோம் என்பதைப் பொறுத்துத்தான் வெற்றியும் தோல்வியும் கணிக்கப்படுகின்றன. செய்கிற வேலைகளும் தொழில்களும் வேறுபடலாம். பொது வான தாக இருப்பது அணுகு முறையும், எம்மை நாம் ஆயத்தம் செய்து கொள்கிற விதங்களும்தான். அவற்றில் கவனம் செலுத்துகிறபோது வெற்றிக்கான விதை விழுகிறது.

நீங்கள் எதைச் செய்கிறீர்களோ அதை வெற்றிகரமாகச் செய்வது என்பதை நோக்கி நகர நகரச் சாதனை என்பதே சுலபமான வேலையாகி விடுகிறது. அணுகுமுறை எதிலிருந்து ஆரம்பிக்கிறது? எண்ணங்களிலிருந்து ஆரம்பிக்கிறது. எந்தப் பின்புலமும் இல்லாமல் தொடங்கி, சிலர் அசகாய வெற்றிகளை எட்டியிருக்கிறார்களே. அந்த வெற்றிகள் எதிலிருந்து தொடங்கின தெரியுமா? அவர்களின் அபிப்பிராயங்களில் இருந்து. தாங்கள் வெறுமையான சூழலில் இருந்தாலும் அங்கிருந்து வெற்றியாளர்களாய் வளரமுடியும் என்ற அபிப்பிராயம்தான் அவர்களுடைய முதல் உந்து சக்தி. தங்களின் உற்சாகமே அவர்களை உரிய இடத்தில் கொண்டு சேர்க்குமென உறுதியாய் நம்பியவர்கள் அவர்கள். அனைத்து வெற்றிகளும் எமது அபிப்பிராயங்களில்தான் ஆரம்பமாகின்றன என்பது நாம் அறிய வேண்டிய முதற்பாடம். அந்த அபிப்பிராயம் தோன்றுகிறபோதே அடுத்தடுத்து அதனை உறுதி செய்து கொள்ளும்விதமாக நடவடிக்கைகளும், ஒழுங்கும் தானாக உருவாகி விடுகின்றன. எனவே வெற்றி பெறவேண்டும் என்கிற அபிப்பிராயமே வெற்றிக்கு முதற்படி.

மனதில் ஏற்படும் இந்த அபிப்பிராயம் வார்த்தைகளிலும் வெளிப்படத் தொடங்குமென்றால் வெற்றியை நோக்கி இரண்டாவது அடியை எடுத்து வைக்கிறீர்கள் என்று அர்த்தம். ஏதேனும் ஒன்றில் நேர்ந்த தோல்வியைப் பற்றிப் பேசினால், புதிதாக ஒன்றைக் கற்றுக் கொள்ள வாய்ப்புக் கிடைத்தது என்று நீங்கள் சொல்லத் தொடங்கி விட்டீர்களா? அப்படியானால் வெற்றிக்கான மனோபாவம் உங்களுக்குள் அரும்பத் தொடங்கிவிட்டதாக அர்த்தம்.

ஏதேனும் ஒன்றை இதைச் செய்ய முடியாது என்று சொல்வதைவிட, வேறு எப்படிச் செய்யலாம் என்று யோசிக்கலாம் என்கிற அணுகுமுறை ஏற்படுவதுதான், மனதில் அரும்புகிற உறுதி வார்த்தைகளிலும் வெளிப்படத் தொடங்கியதன் அடையாளம். வெற்றியை நெருங்குவதற்கான வழிகளில் உடற்பயிற்சியும் ஒன்று. இது பலருக்கு ஆச்சரியமாக இருக்கும். ஆனால் உடற்பயிற்சி ஆரோக்கியத்துக்கும் நிறைகுறைப்புக்கும் மட்டுமல்ல. உடற்பயிற்சி மூலம் வாழ்க்கை இயல்பாக இருப்பதாகவும் புதிய சக்தி கிடைப்பதாகவும் நம்பிக்கை அதிகரிப்பதாகவும் ஆய்வு முடிவுகள் அறிவிக்கின்றன. வெற்றி பெற விரும்புகிறவர்களுக்கு மிக முக்கியமான இன்னொரு பண்பு, புதிய மனிதர்களையும் புதிய சூழல்களையும் தயக்கமில்லாமல் எதிர் கொள்வது. பக்கத்தில் யாராவது புதிதாகக் குடி வந்தால், அவர்களாக வந்து அறிமுகம் செய்துகொள்ளும்வரை காத்திருக்காமல், நீங்களாகச் சென்று அறிமுகம் செய்து கொள்வதில் தொடங்கி, முற்றிலும் அன்னியமான சூழலில் ஏற்படும் வாய்ப்புகளைக் கூச்சமில்லாமல் எதிர்கொண்டு, அந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்வதுவரை எத்தனையோ நிலைகளுக்கு இது பொருந்தும். நாம் சற்றும் எதிர்பாராத இடங்களிலிருந்து, எதிர்பாராத வாய்ப்புக்கள் ஏற்படுவதும், அதன் வழியே நாம் புதிய ஏணிகளில் ஏறுவதும் நிகழ்வதற்கு எல்லா சாத்தியக் கூறுகளும் உள்ளன. எனவே புதிய திசைகள் திறந்து கொள்ள [illegible] பதும், நமக்குள் [illegible] உடைத்துக்கொண்டு நதிபோலப் புறப்படுவதும் வெற்றிக்கு வழிவகுக்கும் அம்சங்கள்.

ஒருவர் வெற்றியாளராக உருவெடுக்க நினைக்கிறார் என்றால், மனதுக்குள் சில முன்னோடிகளை அவர் வரித்துக்கொள்வது வழக்கம். அப்படி வரித்துக்கொள்கிற முன்னோடிகள் நிகரற்ற வெற்றியாளர்களா என்பது முக்கியமல்ல. நிரந்தர வெற்றியாளர்களா என்பதே முக்கியம். கொடிகட்டிப் பறந்து கோலாகலமாய் வளர்ந்து பிறிதொரு நாள், அது குறுக்கு வழியில் கிடைத்த வளர்ச்சி என்று தெரிய வரும்போது, அந்த வெற்றியாளர் மீதான அபிப்பிராயம் மட்டுமா விழுகிறது? வெற்றி குறித்த நம்பிக்கையின் அடித்தளமே ஆட்டம் காண்கிறது. எனவே, சரியான மனிதரை சரியான காரணங்களுக்காக முன்னோடியாக வரித்துக்கொண்டு முன்னேறுவது மிகமிக முக்கியம். ஒரு பாதையில் நீங்கள் போகிறபோது வாகனத்தை நிறுத்தி வழி கேட்கிறீர்கள். சிலர் சரியாக வழி காட்டுகிறார்கள். சிலர் குழப்புகிறார்கள். சிலர் அலட்சியமாக நகர்ந்து போய்விடுகிறார்கள். இதற்கிடையே, வீதிக்குக் குறுக்கே அவசரக் காரர்களிலிருந்து ஆட்டுக்குட்டிகள் வரை வருவதுண்டு. இவற்றையெல்லாம் தாண்டிப் பயணத்தை மேற்கொள்வதே, சென்று சேர்கிற இடத்தில் செய்யவேண்டிய முக்கியமான [illegible]. அந்தப் பணியில் இருக் [illegible] வழியில் நடந்தவற்றை நினைத்துக் கொண்டிருப்பீர்களா என்ன? வாழ்க்கைப் பயணமும் அப்படித்தான். உங்கள் இலக்கை எப்படியாவது சென்றடைய வேண்டுமே தவிர, வழியில் வரும் விமர்சனங்களை, சின்ன சின்ன சீண்டல்களை பொருட்படுத்தக் கூடாது.

வெற்றிக்கு மற் றொரு முக்கியமான வழி, பாராட்டு. பாராட்டு என்றதுமே, மற்றவர்கள் பாராட்டும்படி வாழ்வதுதான் முதலில் எமது மனதில் தோன்றும். அது மட்டும் போதாது. மற் றவர்கள் பாராட்டும் விதமாக வளர்வது போலவே, மற்றவர்களைப் பாராட்டும் பண்பையும் வளர்த்துக் கொள்ள வேண்டும். பாராட்டு மட்டும் போதாது. முடிந்தவரை மற்றவர்கள் வெற்றி பெற உதவுவதுகூட உங்கள் வெற்றிகளுக்குத் துணை நிற்கும். உதவி தருபவர்களே உதவி பெறுகிறார்கள் என்பது பொதுவிதி. எப்போதோ விதைத்த விதை எத்தனையோ பழங்களைத் தருவதுமாதிரி, எப்போதோ செய்கிற உதவி நிகரற்ற நன்மைகளாகத் திரும்பவரும். உள்ளத்தில் ஏற்படும் அபிப்பிராயம், உங்களிடம் வெளிப்படும் வார்த்தைகள், உடற்பயிற்சி, அறியாத இடங்களிலும் ஆளுமையுடன் அணுகுதல், உண்மையான வெற்றியாளர்களைப் பின்பற்றுதல், முக்கிய இலக்கில் மட்டும் கவனம் செலுத்துதல், மற்றவர்களைப் பாராட்டி, உரிய உதவிகள் புரிதல். இத்தனை பண்புகளும் எப்போது உங்களிடம் ஜொலிக்கிறதோ, நீங்கள் வெற்றி பெறப் போவது நிச்சயம்!




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு-கிழக்கு மாகாணங்களில் ஐ.நா. அலுவலகங்கள் வேண்டும்

***ஜெனிவாவில் அன்புமணி ராமதாஸ் கோரிக்கை***

ஜெனிவா, ஒக்.2

இலங்கையின் போர்க் குற்றங்கள் தொடர்பாக சர்வதேச நீதி விசாரணை நடத்த வேண்டும் என்று ஐ.நா.மனித உரிமைகள் சபையில் பா.ம.க இளைஞரணித் தலைவர் அன்புமணி ராமதாஸ் வலியுறுத்தினார்.

அத்துடன் வடக்கு–கிழக்கு மாகாணங்களில் ஐ.நா. மனித உரிமைகள் சபை தமது கிளை அலுவலகங்களை அமைக்கவேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் சபையில், இலங்கையில் நடைபெற்று வரும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக தாக்கல் செய்யப்பட்ட விசாரணை அறிக்கை மீதான பொது விவாதம் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்த விவாதத்தில் அன்புமணி பேசியது குறித்து ப.ம.க வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதில் மேலும் கூறப்பட்டதாவது:–

போர்க் குற்றச்சாட்டுக்கு ஆளாகியுள்ள இலங்கைக்கு, அதன் குற்றங்கள் தொடர்பாக விசாரித்து தீர்ப்பளிக்கத் தார்மீக உரிமை இல்லை. இலங்கையில் தமிழர் வசிக்கும் கிராமங்களில் இன்னும் இராணுவ முகாம்கள் உள்ளன. தமிழர்களிடம் இருந்து பறிக்கப்பட்ட நிலங்கள் இன்னும் திரும்ப ஒப்படைக்கப்படவில்லை. தமிழ் மக்கள் இன்னும் அச்சத்தில் வாழும் சூழல் உள்ளது. அதி உயர் பாதுகாப்பு வலயங்கள் இன்னும் அப்படியே நீடிக்கின்றன. எனவே, இலங்கையின் போர்க் குற்றங்கள் தொடர்பாக சர்வதேச விசாரணை தேவை.

இது தொடர்பாகத் தமிழக சட்டப் பேரவையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இந்தவிவகாரத்தில் இந்தியா அமைதி காப்பது மிகுந்த ஏமாற்றம் அளிக்கிறது. போர்க்குற்றம் தொடர்பான விசாரணையின் சாட்சிகளுக்கு போதிய பாதுகாப்பு அளிப்பதற்கு வசதியாக இலங்கையின் வடக்கு–கிழக்கு மாகாணங்களில் கிளை அலுவலகங்களை ஐ.நா. மனித உரிமைகள் சபை அமைக்க வேண்டும்–என்றுள்ளது.

(த–வ)

## இலங்கை வருகிறார் ஜப்பான் வழக்கறிஞர்

இலங்கையில் இடம்பெறும் போர்க்குற்ற விசாரணைகளுக்குத் தமது நாட்டுப் பிரபல வழக்கறிஞரை அனுப்புவதாக ஜப்பான் அறிவித்துள்ளது.

ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 30 ஆவது அமர்வில் நேற்று முன்தினம் நடைபெற்ற இலங்கை தொடர்பான விவாதத்தில் ஜப்பான் பிரதிநிதி இந்த அறிவிப்பை வெளியிட்டார்.

ஜப்பான் உயர்நீதிமன்றின் முன்னாள் நீதிபதியும் கம்போடியா நீதிமன்றின் முன்னாள் விசேட நீதிபதியுமான பிரபல வழக்கறிஞரையே இவ்வாறு இம்மாதம் இலங்கைக்கு அனுப்புவதாக ஜப்பான் குறிப்பிட்டுள்ளது. இலங்கை உண்மை மற்றும் தேசிய நல்லிணக்கத்தை கட்டியெழுப்ப ஜப்பான் உதவும் எனவும் அந்நாட்டுப் பிரதிநிதி ஐ.நா மனித உரிமைகள் சபையில் தெரிவித்தார். (த–வ)


ஆங்கில வகுப்புக்கள்

ஆங்கில இலக்கணம், இலக்கியம், Latin, French ஆகிய மொழிகளை சிறந்த முறையில் கற்பதற்கு இம் மொழிகளை கற்பிப்பதில் 45 வருடகால அனுபவமுள்ள ஆசிரியர் க.சி.சிவசுப்பிரமணியம், புலோலி தெற்கு, புலோலி என்பவரை நாடி சிறந்த முறையில் கற்று பயன் பெறுங்கள்.

K.பிரதீபன் MBA (London)

வேலைவாய்ப்பு

★ கட்டார் நாட்டில் — Nos

1) Plumber 1300 - 1500 QR - 10
2) Electricians 1300 - 1500 QR - 10
3) A/C Technician 1300 - 1500 QR - 10
4) Mason 1300 - 1500 QR - 10

★ ஓமான் நாட்டில்

1) House driver 140 ஓமான் றியால் - 15
2) House maid 100 ஓமான் றியால் - 15
3) Couple (husband wife) 100,000 இலங்கை ரூபா - 10

தொடர்பு : குபேரன் 0773957291
Orient Lanka International (Pvt) Ltd.
Kirulappane, Colombo - 6


# இலங்கையில் நல்லிணக்கம் ஏற்படுவதற்கு ஒத்துழைப்பு

***ஐரோப்பிய ஒன்றியம் தெரிவிப்பு***

ஜெனிவா, ஒக். 2

இலங்கையில் நல்லிணக்கம் ஏற்படுவதற்கு எதிர்காலத்தில் அதிகபட்ச ஒத்துழைப்பை வழங்கவுள்ளதாக ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்துள்ளது.

மனித உரிமைகள் ஆணையாளர் செயிட் அல் ஹுசைன் இலங்கை தொடர்பாக மனித உரிமைகள் சபையில் முன்வைத்த விசாரணை அறிக்கை பற்றி நேற்றுமுன்தினம் உறுப்பு நாடுகளிடையே இடம்பெற்ற விவாதத்தின்போதே இந்த கருத்து வெளியிடப்பட்டது.

இது தொடர்பில் ஐரோப்பிய ஒன்றியம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:–

நல்லாட்சியை வலுப்படுத்தல், மனித உரிமை மேம்பாடு, நல்லிணக்கம், நீதியை நிலை நாட்டுதல் போன்ற விவகாரங்களில் இலங்கைக்கு ஒத்துழைப்பு வழங்கப்படும்.

முதல்கட்டமாகச் சட்டம் ஒழுங்கு மற்றும் மனித உரிமை விவகாரங்களில் இலங்கையுடன் இணைந்து செயற்பட விரும்புகின்றோம். ஐ. நா. மனித உரிமைகள் சபையில் இலங்கை தொடர்பில் நிறைவேற்றப்பட உள்ள தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதற்கு பூரண ஒத்துழைப்பு வழங்கப்படும் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.(த)


ஜயோதா

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 1198
சீட்டிழுப்பு திகதி 2015.10.01
வெற்றி இலக்கங்கள்
14 46 55 56 U
ஜக்பொட் பரிசு
ரூ. 31,129,560/=

SUPER BALL
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 403
சீட்டிழுப்பு திகதி 2015.10.01
வெற்றி இலக்கங்கள்
18 22 34 65 25 Z
சுப்பர் ஜக்பொட்
ரூ. 55,684,460/=

தவறிவிட்டது

மல்லிகை, காரைநகரைச் சேர்ந்த நடேச குலேந்திரன் ஆகிய எனது I.C (761692470V) இத்தாலி விசா மற்றும் ஆவணங்கள் அடங்கிய பேர்ஸ் பொன் னாலைச் சந்தி, சங்கானை, அளவெட்டி, மல்லாகம் ஆகிய பகுதிகளில் எங்கேயோ தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் பின்வரும் T.P மூலம் தந்துதவவும்.
077 308 8892, 077 209 5045

அறிவித்தல்



கே. உதயன்
NIC NO. 861321100V

எமது நிறுவனத்தில் பணியாற்றிய மேல் காணும் பெயர் கொண்ட உதவி பிரதேச முகாமையாளர் தற்பொழுது எமது நிறுவனத்தில் சேவையில் இல்லை என்பதை இத்தால் அறிவிப்பதோடு, அவருடன் மேற்கொள்ளும் எவ்வித கொடுக்கல் வாங்கல்களுக்கும் எமது நிறுவனம் பொறுப்பேற்க மாட்டாது என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.


# அரசின் நல்லெண்ணம் நம்பிக்கை தருகின்றது

***வடக்கு முதலமைச்சர் தெரிவிப்பு***

ஜெனிவா அறிக்கையின் பின்னர் அரசு நல்லெண்ணத்தின் அடிப்படையில் சில நடவடிக்கைகளை எடுக்கும் எனத் தான் நம்புவதாகக் குறிப்பிட்ட வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி. விக்னேஸ்வரன், இதில் அரசியல் கைதிகளையும் விடுவிப்பார்கள் என எண்ண இடமுண்டு எனவும் தெரிவித்தார்.

அத்துடன் அரசியல் கைதிகளுக்கு என்று ஒரு அமைப்பை உருவாக்கவேண்டுமெனவும் அவர் வலியுறுத்தினார்.

அரசியல் கைதிகளாக உள்ள தத்தமது தந்தையரை விடுவிக்கக் கோரி யாழில் நேற்று முன்தினம் சிறுவர்கள் கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்றை நடத்தியதுடன் ஜனாதிபதிக்கான மனு ஒன்றையும் முதலமைச்சர் ஊடாகக் கையளித்தனர்.

அந்த மனுவைப் பெற்றுக்கொண்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே வடக்கு முதலமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசியல் கைதிகளுக்காக முற்பட்டு வாதாட முன்வரும் சட்டத்தரணிகளுக்குப் பணத்தைக் கொடுக்கும் அளவுக்கு அரசியல் கைதிகளிடம் பணம் இல்லை. ஆகவே அரசியல் கைதிகளுக்கு என ஒரு அமைப்பை உருவாக்கி அந்த அமைப்பின் ஊடாகச் சட்டத்தரணிகளுக்குப் பணத்தை வழங்க முடியும்.

அரசியல் காரணங்களுக்காகவே பலர் கைது செய்யப்பட்டு உள்ளனர். இலங்கையில் அரசியல் கைதிகளின் நிலை அரசியல் ஆக்கப்பட்டு உள்ளது. அதனால் தான் அவர்களுடைய பிரச்சினை தீர்க்கப்படவில்லை.

வடக்கு மாகாண சபை பதவியேற்ற காலத்தில் இருந்தே அரசியல் கைதிகளின் விடுதலை பற்றி கலந்துரையாடியும் பேசியும் வருகின்றோம். ஆனால் இதுவரை அவர்களுடைய பிரச்சினை தீர்க்கப்படவில்லை. அரசியல் கைதிகள் நாட்டின் சட்ட திட்டங்களுக்கு அமைவாக அல்லாது அரசியல் காரணங்களுக்காகவே கைது செய்து அவர்கள் மீது குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி அவர்களை வாட்டுகின்றார்கள்.

ஜெனிவாவுக்கு நல்லெண்ணத்தை வெளிப்படுத்தும் வகையில் இந்த அரசு சில நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என நம்புகின்றேன். அதில் அரசியல் கைதிகளையும் விடுவிப்பார்கள் என எண்ண இடமுண்டு –என்றார். (த–வ)


மலேசியாவில் ஐந்து நட்சத்திர ஹோட்டலில் வேலை வாய்ப்பு

★ சட்டபூர்வமான வேலை அனுமதிப்பத்திரம் (Original work permit) 3 வருடங்களுக்கானது (அரசாங்க அனுமதிக்கட்டணம் மாத்திரம்)
★ சம்பளம் - 1406 மலேசிய றிங்கிற் (myr)
★ தங்குமிடம், சீருடை முற்றிலும் இலவசம்
★ ஓரளவு ஆங்கில அறிவு அவசியம்

உடன் தொடர்பு கொள்ளவும்
தொடர்பு : குபேரன் 0773957291
Orient Lanka International (Pvt) Ltd.
Kirulappane, Colombo - 6

யாழ்.நகரில் பிரபல்யமான கையடக்கத் தொலைபேசி திருத்தும் பாடநெறி
Mobile Phone Repairing Course

மாதம் 50,000 முதல் 100,000 இற்கு மேல் வருமானம் பெறும் நிரந்தர உள்நாட்டு, வெளிநாட்டு வேலைவாய்ப்பு

- ஆரம்பம் முதல் சரளமாக கற்பிக்கப்படும்.
- சகல கேள்விகளுக்கும் தெளிவான விளக்கம்
- தனிப்பட்ட கவனிப்பு
- Smart Phone கள் உட்பட அனைத்து Phone களும் பயிற்சியளிக்கப்படும்.
- சுயமாக வேலை செய்யும் அளவுக்கு பயிற்சியளிக்கப்படும்.

இலவசமாக:

- இரகசியங்கள் அடங்கிய (CD) வழங்கப்படும்.
- கையேடு

Oct-5ஆம் திகதி காலை 9.00 மணி முதல் 5,6,7,8 ஆகிய நான்கு தினங்களில்

Special Trainer Ganesh Sir

பாடநெறிக் கட்டணம் 10000 | பதிவுக் கட்டணம் 2500

வயதெல்லை இல்லை. ஆரம்ப அறிவு, ஆங்கிலம் தேவையற்றது

மட்டுப்படுத்தப்பட்ட அனுமதிகள் என்பதால் முன்கூட்டியே பதிவு செய்யவும்.

BTEC Hospital Road Vembadi Junction, Jaffna. 0777444225 0776131358

துயர் பகிர்கின்றோம்

Prof.Dr. மருது கந்தப்பு Ph.D



எங்கள் பாசத்திற்கும் அன்புக்கும் உரிய குலவிளக்கு அணைந்த செய்தியறிந்து ஆறாத் துயரடைவதோடு நிலைகுலைந்து தவிக்கின்றோம்.

மாமாவின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எங்களின் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவிப்பதோடு மாமாவின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனின் பாதங்களைப் பணிகின்றோம்.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

உம் பிரிவால் துயருறும்
அன்பு அக்கா - சிவகாமிப்பிள்ளை கனகசபை (லண்டன்)
மருமக்கள் -
சூரியா குடும்பம் (நெடுந்தீவு)
கருணா குடும்பம் - (லண்டன்)
சிவம் குடும்பம் - (லண்டன்)
நவராசா குடும்பம் - (லண்டன்)
கோசலா குடும்பம் - (லண்டன்
கௌரி குடும்பம் - (யாழ்ப்பாணம்)
வைசாயினி குடும்பம் - (லண்டன்)
நெடுந்தீவு - 11


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உயர்தர உயிரியல் வகுப்புகள் (Biology) (2016 A/L Repeat batch)**

பல மருந்துவர்களை உருவாக்கிய 10 வருடத்திற்கு மேற்பட்ட கற்பித்தல் அனுபவம் உள்ள உயர்தர உயிரியல் துறையில் நிபுணத்துவம் வாய்ந்த ஆசிரியரினால் வகுப்புகள் நடத்தப் படுகின்றது.

2016 A/L(Repeat) பிரிவுகளுக்கான வகுப்பு நாளை (03.10.2015) சனிக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு ஆரம்பமாகின்றது.

Doctor's Academy
No-626I/L, K.K.S வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ் இந்துக் கல்லூரி அருகில்)
T.P: 077 320 3137

**வேலைவாய்ப்பு!**

அலிசன் நிறுவனத்தின் கொக்குவில், இணுவில் மற்றும் கிளிநொச்சிக் கிளைகளில் பணிபுரிவதற்கு பெண் பயிலுனர்கள் தேவை.

077 986 6409 /021 300 3800


## போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்

**வைத்தியசாலையில் இருந்து அகற்றப்படும் பொருட்களை தொடர்ச்சியாக வழங்குவதற்கான**

**கேள்வி அறிவித்தல் - 2015/2016**

யாழ் போதனா வைத்தியசாலையில் இருந்து அகற்றப்படும் பின்வரும் பொருட்களை தொடர்ச்சியாக வழங்குவதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பொருட்களின் விபரம்

1. வெற்று மருந்து பிளாஸ்ரிக் ரின்கள
2. சிரட்டைகள
3. பழைய பத்திரிகைகள்
4. வெற்றுக் கண்ணாடிப் போத்தல்கள்
5. வெற்றுக் காட்போட் பெட்டிகள்
6. 5L வெற்றுப் பிளாஸ்ரிக் கான்
7. 10L வெற்றுப் பிளாஸ்ரிக் கான்
8. 15L பிளாஸ்ரிக் வாளிகள்
9. வெற்று ஜாம் போத்தல்கள்
10. வெற்று பிளாஸ்ரிக் குளோரின் பரல்கள்

01) கேள்விப்படிவம் பெறுபவர்கள் தேசிய அடையாள அட்டையின் புகைப்படப் பிரதியைச் சமர்ப்பித்து வைத்தியசாலையின் நிதிப் பிரிவில் கேள்விப் படிவத்தினை 2015.10.20 ஆம் திகதி பி.ப 3.00 மணி வரை பெற்றுக்கொள்ள முடியும்.

02) பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை உறையிலிட்டு ஒட்டி உறையின் மேற்பகுதியில் வைத்தியசாலையில் இருந்து அகற்றப்படும் பொருட்களை வழங்குவதற்கான கேள்வி 2015/2016 எனக் குறிப்பிட்டு "பணிப்பாளர், போதனா வைத்தியசாலை யாழ்ப்பாணம்" என்ற முகவரியிட்டு 2015.10.21 ஆம் திகதி பி.ப 3.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபால் மூலமோ அல்லது நேரடியாக கேள்விப் பெட்டியிலோ இட முடியும். தாமதமாக கிடைக்கும் கேள்விகள் நிராகரிக்கப்படும்.

03) உரிய நேரத்தில் கிடைக்கும் கேள்விகள் 2015.10.21 ஆம் திகதி பி.ப 3.15 மணியளவில் திறக்கப்படும். மேலும் கேள்வி திறத்தலின் போது கேள்விதாரர் அல்லது அவரின் பிரதிநிதி ஒருவர் கலந்து கொள்ள முடியும்.

04) சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமை யாழ் போதனா வைத்தியசாலை பணிப்பாளருக்கே உரியது. மேலதிக விபரங்கள் தேவைப் படின் வைத்தியசாலையின் நிதிப் பிரிவில் பெற்றுக்கொள்ளலாம். (தொ.இல.021-2223149)

**பணிப்பாளர்,**
**போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.**

(C19146)(11)


**பாராட்டி வாழ்த்துகின்றோம்**




தமிழ் மக்களுக்காக குரல் கொடுத்து மக்கள் மனதில் என்றென்றும் நிலைத்து நிற்கும் முன்னைநாள் அமைச்சரும் அமரரும் ஆகிய **தியாகராஜா மகேஸ்வரன்** வழியிலே அவர் விட்டுச்சென்ற பணிகளை மீளத் தொடர்வதற்காக தெரிவு செய்யப்பட்டுள்ள

**கௌரவ திருமதி விஜயகலா மகேஸ்வரன்**

அவர்கள் சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சராக தெரிவு செய்யப்பட்டதை மனதார வாழ்த்துகின்றோம். தமிழ் மக்களுக்கு நிறைந்த சேவையாற்றி நீடூழி காலம் வாழ எல்லாம் வல்ல செல்லச்சன்னிதி முருகனின் அருளும் ஆசியும் வேண்டி நிற்கின்றோம்.

தேசிய ஊழியர் சங்கம் சார்பாக
யாழ்சாலை [கோண்டாவில்]
காரைநகர் சாலை
S. செல்வராஜா பிரதான அமைப்பாளர்
மற்றும் ஊழியர்கள்
இலங்கை போக்குவரத்துச்சபை வடக்கு


## NSB பகிரங்க ஏல

தேசிய சேமிப்பு வங்கியின் [illegible] கிளைகளில் அடகுவைக் கப்பட்டு31.05.2014 வரை மீட்கப்படாத அல்லது புதுப்பிக்கப்படாத தங்க ஆபரணங்கள் நாளை (03.10.2015) சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு அந்தந்த கிளைகளிலேயே பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளது என்பதை அறியத்தருகின்றோம்.

01. ஊர்காவற்றுறை
02. நெல்லியடி
03. வங்காலை
04. சாவகச்சேரி
05. பருத்தித்துறை

ஏலத்தை இரத்துச்செய்யும் உரிமை வங்கிக்கு உண்டு.

வடபிராந்திய முகாமையாளர்
தேசிய சேமிப்பு வங்கி

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0214931111

# VACANCIES

## UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

University of Jaffna will entertain applications upto **06.11.2015** from the qualified persons for the under mentioned posts.

### FACULTY OF SCIENCE

Senior Lecturer Grade I / Senior Lecturer Grade II in **Engineering Technology**

**Note:** Special consideration will be given to those who have degrees in Technology or Engineering in one or more of the following fields:

- Building Construction /Civil Engineering
- Automobile Technology/Mechanical Engineering
- Electro technology/Electrical & Electronic Engineering

### FACULTY OF AGRICULTURE

Senior Lecturer Grade I / Senior Lecturer Grade II in **Bio system Technology**

**Note:** Special consideration will be given to those who have degrees in Bio system Technology specialized in one or more of the following fields

- Food Production Technology
- Commercial Green farming Technology

### SALARY AND OTHER BENEFITS

| Post | Salary scale |
|---|---|
| Senior Lecturer Grade I | Rs. 45,545 – 7 x 1050 – 52,895/- p.m. |
| Senior Lecturer Grade II | Rs. 39,755 – 11 x 790 – 48,445/- p.m. |

Note:

In addition to the above salary, the following allowances will also be paid:

i) Academic allowance –Senior Lecturer Gr.I/Gr.II – 120% of the basic salary
ii) Special allowance -20% of the basic salary
iii) Additional monthly allowance – 20% of the basic salary
iv) Cost of living allowance of Rs.7,800/-p.m.
v) Interim allowance of Rs.10,000/- p.m.

Further 35% of the basic salary will be paid as Research allowance based on the research activity of the academic staff.

**Statutory benefits:**

(i) Sabbatical leave entitlement for the holder of the Post of Senior Lecturer Grade I and Senior Lecturer Grade II
(ii) Membership in Universities Provident Fund and Pension Scheme in the University system.
(iii) Gratuity payments
(iv) Employees' Trust Fund benefits.
(v) Free Medical Services.

Applications for the above posts shall be sent to the Deputy Registrar/Academic Establishments, University of Jaffna, Thirunelvely, Jaffna.

Application forms and other details may be obtained from the office of the Deputy Registrar/ Academic Establishments, University of Jaffna, either in person or by post, on a payment of Rs.100/- per application form. Those who wish to obtain application forms by post are requested to send a Money Order/Postal Order drawn in favour of the **Bursar, University of Jaffna** together with a self –addressed stamped envelope 23x10 c.m. in size.

Application forms and other details will also be available in the University website **www.jfn.ac.lk.** Those who wish to send the application forms downloaded from the University website should attach a Money Order/Postal Order for Rs.100/- to the application form drawn in favour of the **Bursar, University of Jaffna.**

Those who wish to apply for **more than one** post should apply in **separate forms.**

Applicants from the University System/Government Departments /Corporations and Statutory Board should channel their applications through the Head of respective Institutions. Illegible, incomplete and late applications will be rejected without intimation. Only short listed applicants will be called for an interview.

REGISTRAR
UNIVERSITY OF JAFFNA
SRI LANKA
2015.10.01

(C/19148)(10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் துஷ்பிரயோகம்; 4000 வழக்குகள் தேக்கம்

## *விசாரணைகளைத் துரிதப்படுத்துமாறு சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை கோரிக்கை*

கொழும்பு, ஒக்.2

இலங்கையில் சிறுவர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட துஷ்பிரயோகங்கள் சம்பந்தமான சுமார் 4 ஆயிரம் வழக்குகள் நீதிமன்றங்களில் தேங்கிக் கிடப்பதாகச் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைப் வட்டாரங் கள் தெரிவித்துள்ளன.

சிறுவர்துஷ்பிரயோகம்சம்பந்தமான சகல முறைப்பாடுகளையும் 1929 எனும் தொலைபேசி இலக்கத்துக்கு அறிவிக்கலாம் என கடந்த ஜனவரி மாதம் அதிகாரசபை விளம் பரம் செய்திருந்தது.அதனைத்தொடர்ந்து சுமார் 6,500 முறைப் பாடுகள் பதிவாகின.அதிகப்படியானமுறைப்பாடுகள் கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்களில்இருந்துகிடைத்துள்ளன.

தற்போதுள்ள சட்டங்களின்படி சிறுவர் துஷ்பிரயோகங்களுக்கு குறைந்த பட்சமாக பத்து வருட சிறைத்தண்டனையும் உச்சபட்சமாக இருபது வருட சிறைத்தண்டனையையும் விதிக்கமுடியும் என வும் எனினும் வழக்குகள் இழுத்தடிக்கப்படுவதால் இக்குற்றங் கள் தொடர்ந்தும் அதிகரித்துச் செல்வதாக தேசிய சிறுவர் அதிகார சபையின் தலைவி நடா பாலேந்திரா தெரிவித்தார். (த)

---

**தொடர்ச்சிகள்**

**வாக்கெடுப்பில்**

ளடக்கி ஒரு உள்ளக விசாரணைப் பொறிமுறையை அமைக்கவேண்டும் என்பதே இந்தத் தீர்மானத்தின் சாராம்சமாகும்.

இந்தத் தீர்மானத்துக்கு அமெரிக்கா, அல்பேனியா, ஆஸ்திரேலியா, ஜேர்மனி, கிறீஸ், லத்வியா, மொண்டிநீக்ரோ, போலந்து, ருமேனியா, மசிடோனியா மற்றும் பிரிட்டன் ஆகிய நாடுகள் இணை அனுசரணை வழங்கியிருந்தன.

அத்துடன் இந்தத் தீர்மானத்துக்கு ஆதரவு தெரிவித்து மேலதிகமாக 25 நாடுகள் இணைப் பங்காளராக நேற்று இணைந்து கொண்டன. இலங்கையும் இந்தத் தீர்மானத்தின் இணைப் பங்காளராக இணைந்து கொள்வதாக ஏற்கனவே அறிவித்திருந்தது.

முன்னரே சமர்ப்பிக்கப்படவிருந்த குறித்த தீர்மான வரைவில் காணப்படும் சில சொற் பிரயோகங்களில் மாற்றம் செய்ய இலங்கை மேற்கொண்ட முயற்சியினால் அது 5 மணி நேரம் தாமதமானது.

இந்த நிலையில் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நடைபெற்றுவரும் 30 ஆவது அமர்வில் நேற்று நடைபெற்ற 40ஆவது கூட்டத்திலேயே அமெரிக்காவால் ஏ/எச்.ஆர்.சி/30/எல்.29 என்ற இலக்கத்தீர்மான வரைவு சமர்ப்பிக்கப்பட்டது.

இலங்கை நேரப்படி, நேற்று மாலை 4.55 மணியளவில் தீர்மான வரைவு மீதான விவாதம் ஜெனிவாவில் ஆரம்பித்தது.

முதலில், ஜெனிவாவுக்கான அமெரிக்கத் தூதுவர் கெய்த் ஹாப்பர் உரையாற்றினார். இதையடுத்து தீர்மான வரைவுக்கு இணை அனுசரணை வழங்கிய நாடுகளான மொண்டிநீக்ரோ, மசிடோனியா, பிரிட்டன் ஆகிய நாடுகளின் பிரதிநிதிகள் உரையாற்றினர்.

இதனையடுத்துச் சீனப் பிரதிநிதி உரையாற்றினார். தொடர்ந்து இந்தத் தீர்மானம் மீது உரையாற்ற வேறு நாடுகள் முன்வராத நிலையில், சம்பந்தப்பட்ட நாடான இலங்கையின் பிரதிநிதி ரவிநாத் ஆரியசிங்கவுக்கு உரையாற்ற வாய்ப்பளிக்கப்பட்டது.

இதையடுத்து, தீர்மான வரைவை வரவேற்றுத் தென்னாபிரிக்கா மற்றும் கானா நாடுகளின் பிரதிநிதிகள் உரையாற்றினர். இந்த நிலையில், தீர்மான வரைவு குறித்து வாக்கெடுப்பு நடத்த வேண்டுமா என்று உறுப்பு நாடுகளின் பிரதிநிதிகளிடம் கேள்வி எழுப்பப்பட்டது.

ஆனால் எந்த நாடும், வாக்கெடுப்பு நடத்தக் கோராத நிலையில், தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியதாக அறிவிக்கப்பட்டது.

இலங்கை நேரப்படி மாலை 5.15 மணி யளவில் மனித உரிமைகள் சபைத் தலைவர் தீர்மானம் ஏகமனதாக ஏற்கப்பட்டது என்று அறிவித்தார்.

இந்தத் தீர்மானத்தின் பிரகாரம் 20 பரிந்துரைகளில் இரண்டு பரிந்துரைகள் கோடிட்டுக்காட்டப்பட்டுள்ளன. இதனடிப்படையில்,

1. நீதித்துறைக்குட்பட்ட சட்டத்தின் ஆட்சியை நிலைநிறுத்தும், அனைத்து சமூகங்களைக் கொண்ட இலங்கை மக்கள் மத்தியில் நம்பிக்கையைக் கட்டியெழுப்பும், பொறுப்புக் கூறலுக்கு இலங்கை அரசு வழங்கியிருக்கும் அங்கீகாரம் வரவேற்கப்படுகின்றது. குற்றஞ்சாட்டப்பட்டுள்ள மனித உரிமை மீறல்கள் மற்றும் துஷ்பிரயோகங்கள், சர்வதேச மனிதநேயச் சட்ட மீறல்கள் மற்றும் அவை தொடர்பானவற்றை விசாரிக்க விசேட வழக்கறிஞர்களுடன் கூடிய நீதித்துறைப் பொறிமுறை ஒன்றை உருவாக்குகின்ற இலங்கை அரசின் முன்மொழிவு கவனத்திலெடுக்கப்பட்டு வரவேற்கப்படுகிறது.

சுதந்திரமான நீதி மற்றும் வழக்குத் தொடுநர் அமைப்புக்களைக் கொண்டதான நம்பகமான நீதிச் செயற்பாடுகள் நேர்மையும் பாரபட்சமின்மையும் கொண்டவர்கள் என அறியப்பட்ட மனிதர்களால் வழிநடத்தப்படவேண்டுமென உறுதியளிக்கப்படுகின்றது. பொதுநலவாய மற்றும் ஏனைய வெளிநாட்டு நீதிபதிகளைக் கொண்ட விசேட வழக்கறிஞர்கள் அலுவலகம், பிரதிவாதிகளின் வழக்கறிஞர்கள், அதிகாரமளிக்கப்பட்ட வழக்குத் தொடுநர்கள் மற்றும் விசாரணையாளர்கள் ஆகியவர்கள் இலங்கை நீதிப்பொறிமுறைக்குள்ளே பங்குபற்றுவதன் முக்கியத்துவம் மேலும் உறுதிப்படுத்தப்படுகின்றது.

2. ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தின் பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தலையும், இந்தத் தீர்மானத்தின் நடைமுறைகளையும் தொடர்ந்து மதிப்பீடு செய்யுமாறும், நல்லிணக்கம், பொறுப்புக் கூறல் மற்றும் மனித உரிமைகள் தொடர்பிலான பரிந்துரைகளையும் மனித உரிமைகள் சபையின் 32ஆவது அமர்வில் (2016 செப்ரெம்பரில்) வாய்மொழி மூலமாக இற்றை வரைக்குமான இந்த விடயங்கள் தொடர்பில் பணிகளை செய்யுமாறும் 34ஆவது அமர் வில் ( 2017 செப்ரம்பர்), தற்போதைய அமர்வின் நடைமுறைப்படுத்தல் கலந்துரையாடலைத் தொடர்ந்து விரிவான அறிக்கையை மதிப்பீடுசெய்யுமாறும் ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளருக்கு இந்தத் தீர்மானம் பரிந்துரைத்துள்ளது.

தீர்மானம் நிறைவேற்றப்பட்டதாக அறிவிக்கப்பட்ட பின்னர், இந்தியப் பிரதிநிதி மனித உரிமைகள் சபையில் உரையாற்றினார்.

இதேவேளை ஐ.நா. மனித உரிமைகள்சபையில் இலங்கை தொடர்பில் அமெரிக்காவால் ஏற்கனவே முன்வைக்கப்பட்ட மூன்று தீர்மானங்களுக்கும் எதிர்ப்பு தெரிவித்த சீனாவும் இந்த தீர்மானத்துக்கு ஆதரவு வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-வ)

**தந்தை**

தமிழ் விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு கருத்து வெளியிடு கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

புனித பத்திரிசியார் கல்லூரியில் தான் படித்த காலங்களை நினைவு கூர்ந்து கருத்துக்களைத் தெரிவித்த எதிர்க் கட்சித் தலைவர் சம்பந்தன், தனது வாழ்வில் இந்தக் கல்லூரி முக்கியமானது என்றும் குறிப்பிட்டார்.

வன்முறை

தற்போது தமிழர்களின் கல்வி நிலை பின்னடைந்துள்ளது என்றும் 30 ஆண்டுகாலப் போரின் விளைவாக இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது எனவும் அவர் தெரிவித்தார். இதனை மாற்ற வேண்டும் என்று குறிப்பிட்டார். ஒரு காலத்தில் பல்கலைக்கழகத்துக்கு அதிகளவான தமிழ் மாணவர்கள் தெரிவாகிக் கொண்டிருந்தமையால் தரப்படுத்தல் கொண்டு வரப்பட்டது என்றும், அது அநீதியானது எனவும் தெரிவித்த அவர், அதனாலேயே இந்த நாட்டில் வன்முறை உருவானது என்றார்.

வன்முறை எந்த விடயத்துக்கும் ஒரு நியாயமான – நிரந்தரமான முடிவை ஏற்படுத்தக் கூடிய வல்லமை உடைய கருமம் இல்லை என்பதை உணர்ந்து கொண்டுள்ளோம் என்றும் சம்பந்தன் குறிப்பிட்டார்.

இந்த எதிர்க்கட்சித் தலைவர் பதவி எனது பதவியல்ல. எமது மக்களின் பதவி. வடக்கு – கிழக்கிலுள்ள மக்கள் எங்களுடைய கட்சியை ஆதரித்ததன் காரணமாகக் கிடைத்த பதவி. உங்கள் ஜனநாயகக் கடமையினால் எங்கள் கட்சிக்குக் கிடைத்த பதவி. அதனடிப்படையிலேயே இந்தப் பதவியை நான் பயன்படுத்துவேன் என்று சம்பந்தன் இதன்போது தெரிவித்தார்.

சர்வதேச தலையீடு

தமிழ் மக்களுக்கு நியாயம் – நீதி வழங்கப்படவில்லை. இதனால் உருவான பிரச்சினை இன்னமும் தீர்க்கப்படவில்லை. சர்வதேசம் இதனை அறிந்துள்ளது. இதன் காரணமாகவே 2012, 2013, 2014 ஆம் ஆண்டுகளில் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் தீர்மானங்கள் கொண்டு வரப்பட்டது. அந்தத் தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்படவில்லை. அப்போதைய அரசு அதனை ஏற்றுக் கொள்ளவில்லை. ஆனால் இன்று (நேற்று) மீண்டும் ஒரு தீர்மானம் கொண்டு வரப்படுகின்றது. அந்தத் தீர்மானம் ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. இலங்கை அரசும் அதனை ஏற்று நடைமுறைப்படுத்தும். அவ்வாறு இலங்கை அரசு செய்வதற்கு நாங்களும் எங்களுடைய உதவிகளைச் செய்வோம். எதிர்க்கட்சித்தலைவர் பதவி கிடைத்திருக்காவிடினும் நாம் இதனைச் செய்திருப்போம்.

அரசியல் தீர்வு

மக்களின் இறைமையினை அத்திபாரமாகக் கொண்ட அரசியல் தீர்வே எமக்குத் தேவை. எமது மக்களினால் ஏற்றுக் கொள்ளக் கூடிய – நடைமுறைப்படுத்தக் கூடிய – நிரந்தரமாக இருக்கக் கூடிய ஓர் தீர்வே தேவை. நாம் நிதானமாகச் செயற்படுவோம். மக்களை ஒரு போதும் கைவிட மாட்டோம். தொடர்ந்து போராடிக் கொண்டிருக்க முடியாது. எங்களுக்கு ஓர் நிரந்தரத் தீர்வு தேவை.

அடுத்த வருடம் அரசியல் தீர்வு ஏற்படக் கூடிய சூழல் ஏற்படும். அவ்விதமான தீர்வுக்கு ஒரு வழி பிறக்கின்றபோது அதனைப் பற்றிச் சிந்திக்க வேண்டிய கடமைப்பாடு எமக்கு இருக்கின்றது. அது தந்தை செல்வாவுக்கு ஏற்புடைய தீர்வாக இருக்கும் என்று நான் கருதினால் அந்தத் தீர்வை ஆதரிப்பதற்கு நான் தயங்கமாட்டேன். ஆனால் அந்தத் தீர்வு தந்தை செல்வா நிராகரித்திருப்பார் என்று நான் கருதினால் அதனை ஏற்றுக்கொள்ளமாட்டேன். தந்தை செல்வாவின் சிந்தனையினால்தான் இன்றும் நாம் வழி நடத்தப்படுகின்றோம். அவர் எவ்வாறு மக் களைக் கைவிடாமல் கடைசி வரை மக்களுக்காகப் போராடினாரோ அதே போன்று நாமும் செயற்படுவோம் – என்றார். (த-5)

**தீர்மானத்தில்**

ஆகவே அமெரிக்கவின் தீர்மானித்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள இந்த மாற்றங்களைத் தாம் ஏற்றுக் கொள்வதாகவும் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

அமெரிக்காவினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள இந்த பிரேரணை மீதான விவாதம் நிறைவடைந்த பின்னர் ஜெனிவாவில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்து வெளியிட்ட தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம். ஏ. சுமந்திரன் இதனைத் தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் கூறியது போன்று பிரேரணையில் குறிப்பிடப்பட்டுள்ள அன்னைத்து விடயங்களையும் நிறைவேற்றுவதற்கு இலங்கை அரசு முன்வர வேண்டும்.

அமெரிக்காவின் தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை நிறைவேற்றுவதற்கு எங்களுடைய முழு ஆதரவையும் நாம் வ்ழங்க தயாராக இருப்பதோடு, எங்களுடைய கருத்துக்களும் உள் வாங்கப்பட வேண்டும்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு சரியான தீர்வு கிடைக்கும் வகையில் இலங்கை அரசும் உண்மைத் தன்மையுடன் செயற்பட வேண்டும்.

இந்தத் தீர்மானத்தை நாம் ஏற்றுக் கொள்வதுடன் இதனை சந்தர்ப்பமாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.


## மரண அறிவித்தல்

### திருமதி பரமேஸ்வரி கணபதிப்பிள்ளை



காரைநகர் களபூமியைப் பிறப்பிடமாகவும் மூளாய் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பரமேஸ்வரி கணபதிப்பிள்ளை நேற்று (01.10.2015) வியாழக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகம் - செல்லமுத்து தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்ற திரு.திருமதி சின்னையா தம்பதியினரின் மருமகளும், காலஞ்சென்ற கணபதிப்பிள்ளையின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம், சரஸ்வதி அம்மா, பரமேஸ்வரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், துளசிதாசன், தயாழினி ஆகியோரின் பாசமிகு தாயாரும், சுயந்தன், சோபிகா ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.10.2015) வெள்ளிக் கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக மூளாய் பித்தனை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மூளாய் தெற்கு
மூளாய்.

தகவல் :
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### திருமதி சரஸ்வதி கந்தசாமி



சுழிபுரத்தைப் பிறப்பிடமாகவும், திருவையாற்றை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சரஸ்வதி கந்தசாமி நேற்று (01.10.2015) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தசாமியின் (ஓய்வு பெற்ற உத்தியோகத்தர் - நீர்பாசனத்திணைக்களம்) அன்பு மனைவியும் காலஞ்சென்ற சின்னத்தம்பி - செல்லாச்சி தம்பதியினரின் மகளும் காலஞ்சென்ற செல்வராசா மற்றும் செல்வராணி (ஹொலண்ட்), கனகராசா (ஜேர்மனி), இராசமணி (திருவையாறு), பத்மலோசனி (ஜேர்மனி), காலஞ்சென்றவர்களான ரவிச்சந்திரன், ராஜேஸ்வரன், விஜயலலிதா மற்றும் சிறீஸ்கந்தராஜா (பிரான்ஸ்), சுசிலாதேவி (திருவையாறு), கிருஸ்ணராஜா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், இந்திராணி (யாழ்ப்பாணம்), கனகராசா (கொலண்ட்), சரஸ்வதி (ஜேர்மன்), பிள்ளையார் (மாவட்டச் செயலகம் கிளிநொச்சி), சிறீகரன் (ஜேர்மனி), மாலதி (யாழ்ப்பாணம்), நிர்மா (பிரான்ஸ்), தயாபரன் (திருவையாறு) ஆகியோரின் அன்பு மாமியாரும், ரூபினி, ரமேஸ், சசி, செல்வன், சாந்தன், சுகந்தி, வாசுகி, அஜந்தன், அஜந்தினி, றஜனி, கிரிதரன், காலஞ்சென்ற கேதாஸ் மற்றும் கயல்விழி, டினேஸ், மதுஷிகா, நளாயினி, நிதுஷன், கிருஷாந், விதுஷிகா, விதுரன், தமிழ்நிலவன், தட்சிகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், றம்மியா, அஜய், சஞ்சீவ், அஸ்வின், சோபினி, றிலக்சன், ஜவி ஆகியோரின் அன்புப் பூட்டியும் அவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.10.2015) வெள்ளிக்கிழமை அன்னாரின் இல்லமாகிய 130/3 திருவையாறு முகவரியில் மு.ப 10.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக இரணைமடு பொது மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் :
குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போரினால் சிறுவர்களே மிகமோசமாகப் பாதிப்பு

## யுனிசெப் அமைப்பு சுட்டிக்காட்டு

கொழும்பு,ஒக்.2
தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் படையினருக்கும் இடையிலான போர் காரணமாக அதிகளவில் சிறுவர்களே பாதிக்கப்பட்டனர் என யுனிசெப் அமைப்பு தெரிவித்துள்ளது.
சிறுவர்களும், போர் இடம்பெற்ற காலத்தில் சிறுவர் சிறுமியராக இருந்தவர்களும் போரின் பாதிப்பையும் அழுத்தங்களையும் மிக மோசமாக அனுபவித்துள்ளனர் என அது சுட்டிக்காட்டியுள்ளது.
இது தொடர்பில் யுனிசெப் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
ஐ. நா மனித உரிமைகள் சபையின் இலங்கை தொடர்பிலான அறிக்கையிலும் சிறுவர்களின் பிரச்சினைகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படவேண்டும். சிறுவர் போராளிகளாக இணைக்கப்பட்டவர்கள், உயிரிழந்தவர்கள், காணாமற் போனவர்களின் குடும்பத்தினர் விசேடமாக கவனிக்கப்பட வேண்டும்.
உண்மை கூறுதல், நல்லிணக்கத்தை ஏற்படுத்தல், நட்டஈடு வழங்குதல் உள்ளிட்ட அனைத்து செயன்முறைகளிலும் பாதிக்கப்பட்ட சிறுவர்கள் மற்றும் அவர்களது குடும்பங்களுக்கு முன்னுரிமை அளிப்பது அவசியம்.
போர் இடம்பெற்ற காலத்தில் காணாமற்போன தமது பிள்ளைகளுக்கு என்ன நேர்ந்தது என்பதனை அறிந்து கொள்ளும் உரிமை அனைத்துப் பெற்றோருக்கும் உண்டு. போர் காரணமாகச் சிறுவர் சிறுமியருக்கு ஏற்பட்ட பாதிப்புக்கள், இடர்கள் என்பவற்றை ஐ. நாவும் ஏனைய தரப்பினரும் அங்கீகரிக்கவேண்டும் -என்றுள்ளது. (த-வ)

### வவுனியா

கலை அடுத்து அவரை இடமாற்றம் செய்யுமாறு வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்திருந்தனர். ஆயினும் அரசு அதனை உடனடியாக நடைமுறைப் படுத்தவில்லை.
இந்நிலையில் தற்போது, அவர் காலி மாவட்டத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.
வவுனியா அரச அதிபராக வட பகுதியில் கடமையாற்றும் ஒரு மூத்த அதிகாரயின் பெயரே சிபார்சு செய்யப்பட்டுள்ளதாக அறியமுடிகின்றது. (த-101)

### தலையணையில்

தைச் சேர்ந்த காந்தன் சந்தோஸ் என்ற குழந்தையே இவ்வாறு உயிரிழந்தது.
அன்றையதினம் பிற்பகல் 5.30 அளவில் தாயார் பாலூட்டிவிட்டுத் தலையணையில் குழந்தையை நித்திரையாக்கிவிட்டு உடுபுடைவைகள் தோய்ப்பதற்குச் சென்றுள்ளார். இரவு திரும்பி வந்து பார்த்த போது குழந்தை குளிர்ந்த உடலுடன் மூச்சுப் பேச்சின்றிக் காணப்பட்டுள்ளது.
உடனடியாகக் குழந்தையை யாழ். போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டபோதும் குழந்தை ஏற்கனவே உயிரிழந்து விட்டமை பரிசோதனையில் தெரிய வந்தது.
குழந்தையைத் தலையணையில் நித்திரையாக்கும்போது அருகே தலையணை வைப்பது வழமை. அன்றையதினம் தாயார் அவ்வாறு வைக்கத் தவறிவிட்டார் என்று மரண விசாரணையில் கூறப்பட்டுள்ளது. தலையணையின் மீது துவாய் விரிக்கப்பட்டிருந்தது. அதனால் தலையை அசைத்துத் திரும்பிய குழந்தை குப்புறப் புரண்டு படுத்துள்ளது. அதன்போதே குழந்தையின் முகம் அதன்மேல் அழுத்தப்பட்டிருக்கலாம் என்றும், குழந்தையால் தலையைத் தூக்க முடியாமல் போயிருக்கலாம் என்றும், அதனால் முகம் தலையணையில் அழுத்தப்பட்ட நிலையில் மூச்சுத் திணறலுக்கு உள்ளாகி உயிரிழந்திருக்கலாம் என்றும் கூறப்பட்டது.
நீதிமன்ற உத்தரவுப்படி திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் விசாரணை மேற்கொண்டு குழந்தையின் சடலத்தை நேற்றுப் பெற்றோரிடம் ஒப்படைத்தார்.
இது தொடர்பில் யாழ்.போதனா வைத்தியசாலைச் சட்ட மருத்துவ நிபுணரிடம் கேட்டபோது அவர் தெரிவித்ததாவது:-
குறித்த குழந்தையின் தாய்க்கு 19 வய்து. அவருக்கு அது இரண்டாவது குழந்தை. இளவயதுத் திருமணமே இது. அதனாலும் அவருக்குச் சம்பவம் பற்றிய அனுபவங்கள் இல்லாதிருந்திருக்கலாம் - அது பற்றிஅவர் அறிந்திருக்கத் தவறியிருக்கலாம். ஒரு வகையில் பெற்றோரின் கவனவீனம் என்றும் அதனைக் கூறலாம். குழந்தைகள் விடயத்தில் பெற்றோரின் அக்கறை எந்தளவுக்குத் தேவை என்பதனை இந்தச் சம்பவமும் உணர்த்துகிறது என்று தெரிவித்தார். (த-4)

### இலங்கையில்

தெரிவித்துள்ளார். அவர் தனது உரையில்,
இந்தியா எப்பொழு தும் ஐக்கிய இலங் கைக்குள் அனைத்து இனங்களும் தமது அடையாளங்களை உறுதிப்படுத்தும் வகையில் வாழ்வதையே விரும்புகிறது.
இந்நிலையில், தமிழ் சமூகம் சம உரிமையுடனும், பாதுகாப்புடனும், தமது அபிலாசைகளை ஐக்கிய இலங்கைக்குள் பெற வேண்டும் என்பதை இந்தியா விரும்புகின்றது.
போரினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மறுவாழ்வளிக்க இந்தியா தொடர்ந்து ஆதரவளிக்கும் என இந்தியப் பிரதிநிதி மேலும் தெரிவித்தார்.
இதேவேளை, ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்டுள்ள இலங்கை குறித்த தீர்மானத்தை வரவேற்றுள்ள பிரிட்டனும், அமெரிக்காவும் வரலாற்றுத் தீர்மானமாகும் எனச் சுட்டிக்காட்டியுள்ளன.
இலங்கைக்குச் சர்வதேச ரீதியான ஒத்துழைப்பு வழங்கப்படும் என ஜெனிவாவுக்கான அமெரிக்கப் பிரதிநிதி கீத் ஹார்பர் தெரிவித்துள்ளார்.
இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,
ஜனவரி மாதம் முதல் இலங்கையில் சாதகமான மாற்றங்களைக் காண முடிகின்றது. இந்த மாற்றங்களே இன்று இணக்கப்பாட்டுடன் கூடிய தீர்மானமொன்றை நிறைவேற்ற வழியமைத்தது.
ஜெனிவா தீர்மானமும் எமது முயற்சிகளும் இலங்கைக்கு உதவி வழங்கும் நோக்கிலானது. இலங்கைக்கு இருதரப்பு அடிப்படையிலும், பல தரப்பு அடிப்படையிலும் தொடர்ச்சியாக ஒத்துழைப்பு வழங்கப் படும்-என்றார்.
மேலும், இந்த தீர்மானம் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கான வழியை அமைத்துள்ளதாக பிரிட்டன் தெரிவித்துள்ளது. இலங்கையில் நல்லிணக்கத்தையும் சுபீட்சத்தையும் ஏற்படுத்த இந்த தீர்மானம் வழியமைக்கும் என பிரித்தானிய வெளிவிவகார அமைச்சர் ஹியூகோ ஸ்வையர் தெரிவித்துள்ளார்.
இலங்கை அழுத்தங்கள் நிறைந்த காலத்திலிருந்து விடுபடுவதற்காகவே பிரிட்டன் ஐ.நா. அமைப்பில் அழுத்தங்களை பிரயோகித்து வந்ததாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.
இதன்போது கருத்து வெளியிட்ட தென்னாபிரிக்கப் பிரதிநிதி, இலங்கையின் உண்மையைத் தேடும் பணிக்கு தென்னாபிரிக்கா ஆதரவு வழங்கும். அத்துடன் புலம்பெயர் தமிழ் மக்களுடன் பேச்சுக்களை நடத்துவதன் ஊடாக இலங்கை முன்னோக்கி செல்ல முடியும் எனவும் அவர் குறிப்பிட்டார். (த-வ)

### ஹுசைனின்

நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக் குழு இன்னமும் பணியாற்றிக் கொண்டிருந்தாலும், அதன் சுயாதீனத் தன்மை மற்றும் செயற்றிறன் தொடர்பான பரவலான கவலைகள் எழுப்பப்பட்டுள்ளன. இந்த ஆணைக் குழு கலைக்கப்பட வேண்டும் என்று நாம் நம்புகிறோம். அதன் எஞ்சியுள்ள விசாரணைகள், காணாமற் போனோரின் குடும்பங்களுடன் கலந்தாலோசித்து அமைக் கப்படும் நம்பகமான, சுதந்திரமான அமைப்பு ஒன்றிடம் கையளிக்கப் படவேண்டும் என்று ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் கூறியிருந்தார்.
நேற்று முன்தினம் ஐ.நா. மனித உரிமைகள் சபை அமர்வில் ஆற்றிய உரையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்திருந்தார்.
இந்நிலையிலேயே ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளரின் கருத்துக்குக் கடும் அதிருப்தி வெளியிட்டுள்ள ஜனாதிபதி ஆணைக் குழுவின் தலைவர் முன்னாள் நீதிபதி பராக்கிரம மக்ஸ்வெல் பரணகம மேலும் தெரிவித்துள்ளதாவது:-
எமது ஆணைக்குழுவை விடவும் வேறும் எவராலும் இந்தப் பணியைச் சிறப்பாக செய்ய முடியாது. மிகவும் வெளிப்படைத்தன்மையுடன் எமது ஆணைக்குழு பணிகளை முன்னெடுத்து வருகின்றது. மக்களிடம் சாட்சியங்கள் திரட்டும் போது இராணுவத்தினரோ அல்லது பொலிஸாரோ அந்த அறைகளில் இருந்ததில்லை.
வடக்கு-கிழக்கு மற்றும் கொழும்பில் பல அமர்வுகள் நடத்தப்பட்டு 19ஆயிரம் பேரிடம் விசாரணைகள் நடத்தப்பட்டுள்ளன. இதில் 16ஆயிரம் பேர் வடக்கு- கிழக்கைச் சேர்ந்தவர்கள் . 300 பேர் வருவார்கள் என எதிர்பார்த்து அறிவிப்பு விடுத்தால் ஆயிரம் பேர் வருவார்கள். எனவே எவரும் எமது ஆணைக் குழுவின் விசாரணைகளை நிராகரிக்கவில்லை.
அமர்வுகள் மாலை வரையில் நடைபெற்றால் விசாரணைகளில் பங்கேற்போர் வீடு செல்ல தேவையான போக்குவரத்து வசதிகளைக் கூட ஏற்பாடு செய்திருந்தோம். விசாரணைகளுக்குத் தீர்வு வழங்கச் சில காலம் எடுக்கும் என்பதனை மக்கள் புரிந்துகொள்ளவேண்டும். ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நாடு திரும்பியதும் அவரிடம் நேரத்தை ஒதுக்கி அறிக்கை சமர்ப்பிக்கத் திட்டமிட்டுள்ளோம்- என்றார். (த-வ)

### இலங்கையைக்

யுள்ளது.
இலங்கையில் பொறுப்புக்கூறல், நல்லிணக்கம், மனித உரிமைகளை ஊக்குவித்தல் என்ற தலைப்பிலான தீர்மானம் நிறை வேற்றப்படுவதற்கு முன்னதாக, இதனை நடைமுறைப்படுத்துவதற்கான செலவினம் பற்றிய மதிப்பீட்டை ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் பணியகம் வெளியிட்டது.
தீர்மான வரைவின் படி, இலங்கையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்களைக் கண்காணிக்கவும், பணிகளை மேற்கொள்ளவும், ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் பணியகத்தின் குழுக்கள் கொழும்புக்குத் தலா 14 நாள்களைக் கொண்ட 6 பயணங்களை மேற் கொள்ளவுள்ளதாகவும் இந்த அறிவிப்பில் கூறப்பட்டுள்ளது. இதற்காகவே 3 லட்சத்து 37 ஆயிரத்து 800 அமெரிக்க டொலர்கள் தேவை என்று மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.
கடந்த ஆண்டு மார்ச் மாதம், இலங்கையில் விசாரணைகளை மேற்கொள்ள ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் பணியகம் 1.4 மில்லியன் டொலர் நிதி ஒதுக்கீட்டைக் கோரியபோது, அதற்கு பாகிஸ்தான் கடும் எதிர்ப்பை வெளியிட்டதுடன், அதுபற்றிய உப வாக்கெடுப்பும் நடத்தப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (த-5)

### தேசிய

சிறுவர் தினத்துக்கான கொடி, நினைவு மலர் ஆகியன வெளியிட்டு வைக்கப்பட்டன.
அதை தொடர்ந்து தமிழ், சிங்கள, முஸ் லிம் மாணவர்களின் கலை நிகழ்வுகளாக, பரதநாட்டியங்கள், நாடகங்கள் இடம்பெற்றன. அத்தோடு சிறுவர் தினத்துக்கான பாடலும் சிறப்பான முறையில் இசைக்கப்பட்டது.
சிறுவர் தினத்திற்காக இலங்கை ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரால் வழங்கப்பட்ட வாழ்த்துச் செய்திகளும் மேடையில் வாசிக்கப்பட்டன. சிறுவர் தினத்தை முன்னிட்டு மகளிர் விவகார அமைச்சினால் நடத்தப்பட்ட கலை இலக்கியப் போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசில்களும் வழங்கப்பட்டன.
இந்தச் சிறுவர் தின நிகழ்வுக்கு மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சர் சந்திராணி பண்டார, சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன், மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சின் செயலாளர் சந்திராணி சேனாரத்ன, யாழ். மற்றும் வவுனியா மாவட்ட அரச அதிபர்கள், இந்திய துணைத் தூதுவர், மதத் தலைவர்கள், யாழ்.போதனா வைத்திய சாலையின் உளவியல் மருத்துவர் சிவயோகன், பிரதேச செயலாளர்கள், பாடசாலை மாணவர்கள், சிறுவர்கள் என பலரும் கலந்து கொண்னர். (த-21)

### சுப்பர்மடத்தில்

சந்தேக நபரிடம் தொடர்ந்து விசாரணைகள் முன் னெடுக்கப்பட்டு வருவதாக உதவி பொலிஸ் அத்தியட்சகர் ஜவ்பர் தெரிவித்தார்.
இவர் ஏற்கனவே சிறுமி துஷ்பிரயோக வழக்கொன்றில் நீதிமன்றில் பிடியாணை பிறப்பிக்கப்பட்டு தேடப்பட்டு வந்த சந்தேக நபர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்
இது தொடர்பாக தெரியவருவதாவது:-
பருத்தித்துறை, சுப்பர்மடம் பகுதியில் நேற்று முன்தினம் பிற்பகல் பொலிஸார் ஜீப்பில் ரோந்துக் கடமையில் ஈடுப்பட்டனர். அப்போது அந்தப் பகுதியில் நின்ற இளைஞர் ஒருவர் பொலிஸ் ஜீப்பைக் கண்டவுடன் ஓடத் தொடங்கினார். அவர் ஓடுவதை அடுத்துச் சந்தேகமடைந்த பொலிஸார் ஜீப்பை அந்த இடத்தில் நிறுத்திவிட்டுச் சந்தேக நபரைத் துரத்திச் சென்று மடக்கிப் பிடித்ததாகத் தெரிவித்தனர்.
கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர் அல்வாயைச் சேர்ந்த கௌசிகன் எனவும், அவரைச் சோதனைக்கு உள்ளாக்கியபோது இடுப்பில் இருந்து உள்நாட்டுத் தயாரிப்பான கைத்துப்பாக்கி ஒன்று மீட்கப்பட்டதாவும் பொலிஸார் கூறினர்.
இதனை அடுத்து குறித்த அவரிடம் மேலதிக விசாரணைகள் மேற் கொள்ளப்பட்டதாகவும், துப்பாக்கிக்குள் ஒரு தோட்டா மட்டும் காணப்பட்டதாகவும், குறித்த துப்பாக்கியைத் தனது நண்பர் ஒருவர் தந்ததாக இளைஞர் பொலிஸ் விசாரணையின்போது தெரிவித்ததாகவும் பொலிஸார் குறிப்பிட்டனர்.
குறித்த நண்பர் தலைமறைவாகியிருப்பதாகவும், அவரைப் பொலிஸார் வலை வீசித் தேடிவருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.
அத்துடன் கைது செய்யப்பட்ட சந்தேக நபர் அல்வாயில் கொலைக் குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட ஜெகா என்ற சந்தேக நபரின் நண்பராக இருக்கல்ாம் என்ற கோணத்தில் விசாரணை முன்னெடுக்கப் படுவதாக உதவி பொலிஸ் அத்தியட்சகர் ஜவ்பர் தெரிவித்தார்.
இவர் ஏற்கனவே 9 வயதுச் சிறுமியை துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்க முயன்றார் என்ற குற்றசாட்டின் கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டு நீதிமன்றால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டு தேடப்படும் சந்தேக நபர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.
இவரிடம் கைத்துப்பாக்கி எங்கிருந்து கிடைத்தது என்பது குறித்து தீவிர விசாரணை முன்னெடுக்கப்படுவதாகவும் பொலிஸார் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (த-109-108)

### பாதிக்கப்பட்ட

குறிப்பில் தெரிவிக் கப்பட்டுள்ளதாவது:-
குறிப்பிட்ட தீர்மானம் இலங்கையின் மனித உரிமைகளில் முக்கியமான தொரு திருப்பு முனையாகும். போரில் ஈடுபட்ட இருதரப்பும் இழைத்த குற்றங்களை அது முக்கியமாக ஏற்றுக் கொண்டுள்ளது.
இந்த தீர்மானம் மிகச்சிறந்தது இல்லை என்றபோதிலும் இலங்கையின் உறுதி மொழிகளும் தீர்மானமும் நல்லெண் ணத்துடன் நிறைவேற்றப்பட்டால் பாதிக் கப்பட்டவர்களுக்கு இறுதியாக உண்மையும் நீதியும் கிடைப்பதற்கான வாய்ப்பு கிடைக்கும்.
குறிப்பிட்ட தீர்மானம் நீதித்துறையின் செயற்பாட்டில் நம்பகத்தன்மையை உறுதி செய்வதற்காக வெளிநாட்டு நீதிபதிகள்,விசாரணையாளர்கள், வழக்கறிஞர்களைக் கோரியுள்ளது. இது முக்கியமான விடயம். இலங்கை காலத்துக்குக் காலம் தான் தன்னுடைய படையினரை விசாரணை செய்யத் தயார் இல்லை - தன்னால் அது முடியாது என்பதை வெளிப்படுத்தி வந்துள்ளது.
பொறுப்புக்கூறும் நடைமுறை நம்பகத்தன்மை மிக்கதாகக் காணப்படுவதற்கு சர்வதேச பிரதிநிதித்துவம் அவசியம்-என்றுள்ளது. (த-வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாம் இணைவது உங்கள் வளர்ச்சிக்கு

அபிவிருத்தி வங்கியான DFCC வங்கியும், வணிக வங்கியான வர்த்தன வங்கியும் இன்று முதல் ஒரே வங்கியாக இணைந்து DFCC வங்கி என்ற நாமத்தின் கீழ் செயற்படவுள்ளன. இதன் மூலம் இன்னும் அதிக பலத்துடனும், அதிக உத்வேகத்துடனும், விரைவாகவும் எம்மால் சேவைகளை வழங்கக் கூடியதாக இருக்கும். எமது இந்தக் கூட்டிணைப்பானது நாளைய சாதனையாளரையும், இன்றைய வெற்றியாளரையும், விரைவாக அல்லது படிப்படியாக முன்னேறத் துடிப்பவர்களையும் இலக்காகக் கொண்டுள்ளது.

இந்த இணைப்பானது திட்டமிட்டுச் செயற்படுபவர்களையும், அன்றாட சூழ்நிலைகளுக்கமைய எளிமையாகச் செயற்படுபவர்களின் வளர்ச்சியையும் கருத்திற் கொண்டு மேற்கொள்ளப்பட்ட ஒரு நடவடிக்கையாகும்.

ஆறு தசாப்த காலத்திற்கும் மேலாக உங்கள் நிதிசார் தேவைகளை செவ்வனே நிறைவேற்றிய நாம் இனி இன்று முதல் இன்னும் சிறப்பாக உங்கள் அனைத்து எதிர்பார்ப்புகளையும் நிறைவேற்ற உறுதி பூண்டுள்ளோம். விரைவாகவும், வினைத்திறனுடனும் உங்கள் நிதிசார் தேவைகளை நிறைவேற்றக்கூடிய சேவையாளர்களையும், நாடு முழுவதும் வியாபித்திருக்கும் கிளைகளையும் நாம் கொண்டுள்ளோம்.

இன்று முதல் நாம் ஒரு குடும்பமாய், ஒரு அமைப்பாய் உங்கள் வளர்ச்சி கருதி செயற்பட உறுதி பூணுகின்றோம்.

**வாருங்கள், நீங்களும் எம்மோடு இணைந்து வளருங்கள்.**



DFCC வங்கி
உங்கள் வளர்ச்சிக்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





வலி.தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச தேசிய இளைஞர் சேவைகள் மன்றங்களின் 27ஆவது தடகளத் தொடர்கள் இளவாலை சென்.ஹென்றிஸ் கல்லூரி மைதானத்தில் அண்மையில் நடைபெற்றது.குறித்த நிகழ்வின் சில பதிவுகள். (ம-86)

# வாலிபர், மோகனதாஸ் அரையிறுதிக்குத் தகுதி

யாழ்ப்பாணம், ஒக். 2

அச்சுவேலி ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தின் 8ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு குறித்த கழகத்தால் யாழ். மாவட்ட ரீதியாக நடத்தப்பட்டு வரும் கரப்பந்தாட்டத் தொடரில் அச்சுவேலி தோப்பு வாலிபர் அணி, மட்டுவில் மோகனதாஸ் அணி என்பன அரையிறுதி ஆட்டங்களுக்கு தகுதி பெற்றன.

***வாலிபர் எதிர் எல்லாளன்***

இந்தத்தொடரில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இரவு 7மணிக்கு இடம்பெற்ற முதலாவது காலிறுதியாட்டத்தில் அச்சுவேலி தோப்பு வாலிபர் அணியை எதிர்த்து அச்சுவேலி எல்லாளன் அணி மோதிக்கொண்டது. முதலாவது செற்றை எல்லாளன் அணி 25:22 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றினாலும் இரண்டாவது, மூன்றாவது செற்களை முறையே 25:20, 24:21 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றிய வாலிபர் அணி 2:1 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்று அரையிறுதியாட்டத்துக்கு தகுதி பெற்றது.

***மோகனதாஸ் எதிர் ஞானதீபம்***

தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது காலிறுதியாட்டத்தில் மட்டுவில் மோகனதாஸ் அணியை எதிர்த்து மட்டுவில் ஞானதீபம் அணி மோதிக் கொண்டது. ஆட்டத்தின் முதல் செற்றை மோகனதாஸ் அணி 25:20 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்ற இரண்டாவது செற்றை ஞானதீபம் அணி 25:21 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி பதிலடி கொடுத்தது. சரிவில் இருந்து மீண்ட மோகனதாஸ் அணி 25:20 என்ற புள்ளிகளின் அடிப்படையில் மூன்றாவது செற்றை கைப்பற்ற முடிவில் அந்த அணி 2:1 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்று அரையிறுதியாட்டத்துக்கு தகுதிபெற்றது.

(ம-23)

# இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஒக். 2

மன்னார் உதைபந் தாட்ட லீக்கினால் அழைக்கப்பட்ட அணி களுக்கு இடையில் நடத்தப்பட்டுவரும் லீக் முறையிலான உதைபந்தாட்ட தொடரின் ஆட்டங்கள் மன்னார் நகரசபை மைதானத்தில் நடைபெற்று வருகின்றன. இந்தத்தொடரில் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மன்னார் நகரசபை மைதானத்தில் இடம்பெறும் ஆட்டத்தில் சாவற்கட்டு கில்லறி அணியை எதிர்த்து முருங்கன் பொதுசன சேவைகள் அணி மோதவுள்ளது. (ம-23)

வடமராட்சி உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் சமரபாகு நியூட்டன் விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட ரீதியாக நடத்திவரும் உதைபந்தாட்டத் தொடரில் இன்று வெள்ளிக்கிழமை பி.ப. 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மானிப்பாய் ரெட்றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து ஊரெழு றோயல் விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது. (ம-108)

# சம்பியனானது முள்ளானை இளைஞர் மன்றம்

## வலி.தென்மேற்கு சண்டிலிப்பாய் இளைஞர் கழகங்களின் தொடரில்



வலி வடக்கு, ஒக். 2

வலி.தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச தேசிய இளைஞர் சேவைகள் மன்ற கழகங்களுக்கு இடையே நடைபெற்ற உதைபந்தாட்டத் தொடரில் முள்ளானை-தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் கிண்ணத்தைக் கைப்பற்றியுள்ளது.

இளவாலை சென்.ஹென்றிஸ் மைதானத்தில் இடம்பெற்ற இந்த இறுதியாட்டத்தில் யங்ஹென்றிஸ் தேசிய இளைஞர் சேவைகள் மன்றமும் முள்ளானை தேசிய இளைஞர் சேவைகள் மன்றமும் பலப்பரீட்சை நடத்தின. ஆட்டத்தின் முழுநேரத்திலும் ஒரு நிமிடத்திலாவது ஒரு அணி ஏக ஆதிக்கம் செலுத்த முடியவில்லை. கோல்கள் எவையும் பதியப்படாமலேயே ஆட்டம் நிறைவடைந்தது. சமநிலைத் தவிர்ப்பிலும் போராட்டத் தன்மைதான் மேலோங்கியிருக்க முடிவில் 4:3 என்ற கோல் கணக்கில் யங்ஹென்றிஸ் தேசிய இளைஞர் சேவைகள் மன்ற அணி வெற்றிபெற்று சம்பியனாகியது. பிரதம விருந்தினராக வலி தென்மேற்கு பிரதேச செயலாளர் திருமதி யசோதா உதயகுமாரும் சிறப்பு விருந்தினராக இளவாலை சென். ஹென்றிஸ் கல்லூரி அதிபர் அருட்தந்தை ஜே.எ.ஜேசுதாசன் அடிகளாரும் கலந்து கொண்டனர்.

(ம-86)

# தேசியத்தில் பதக்கம் வென்ற மாணவர்களை கௌரவித்தது வவுனியா தமிழ் மத்திய ம.வி.

யாழ்ப்பாணம், ஒக். 2

தேசிய மட்ட பளுதூக்கல் போட்டியில் பதக்கங்களை வென்ற வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியால மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் புதன்கிழமை கல்லூரிச் சமூகத்தினால் முன்னெடுக்கப்பட்டது.




வித்தியாலயத்தின் நுழைவாயிலில் இருந்து கல்லூரியின் பிரதான மண்டபம் வரை பதக்கம் வென்ற ஜெ.சுகீசன்(வெண்கலம்),ற.ஹரிகரன்(வெண்கலம்), அ.சாமிகா தர்சினி மூவரும் அவர்களுக்கான பயிற்சியாளரும், பளுதூக்கலில் குறித்த பாடசாலையைப் பிரதிநிதித்துவம் செய்த மாணவர்களும் அழைத்து வரப்பட்டு [illegible] பாடசாலையின் அதிபர் [illegible] கத்தின் தலைமையில் கௌரவிப்பு நிகழ்வு இடம்பெற்றது. இந்த நிகழ்வுக்கு விருத்தினர்களாக வவுனியா [illegible] பிரசாந்தும் சட்டத் தரணி திருவருளும் கலந்து கொண்டனர். (ம-23)

# பல்கலையின் கரம் தொடர்

யாழ்ப்பாணம், ஒக். 2

யாழ். பல்கலைக்கழக விளையாட்டு அவையும், உடற்கல்வி அலகும் இணைந்து நடத்தும் யாழ். மாவட்ட அழைக்கப்பட்ட கழகங்களுக்கு இடையிலான இருபாலாருக்குமான கரம் தொடர் நாளையும் (சனிக்கிழமை), நாளை மறுதினமும் (ஞாயிற்றுக்கிழமை) யாழ். பல்கலைக்கழக உடற்கல்வி அலகில் இடம்பெறவுள்ளது.



சனிக்கிழமை நடைபெறும் போட்டிகள் காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகும், இறுதிப் போட்டியும் பரிசளிப்பு நிகழ்வும் ஞாயிற்றுக்கிழமை மாலை 3.30 மணிக்கு இடம்பெறும். இறுதிநாள் நிகழ்வுக்கு பிரதம விருத்தினராக யாழ்.பல்கலைக் கழகத்தின் கரம் பெண்கள் அணியின் முன்னாள் தலைவியும், மானிப்பாய் வலி தென்மேற்கு பிரதேச சபையின் செயலாளருமான திருமதி ஜெயந்தா சோமராஜ் கலந்து கொள்ள வுள்ளார். (ம-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# தீவுகள் வெளியே பங்களாதேஷ் உள்ளே

2017ஆம் ஆண்டு இங்கிலாந்தில் நடைபெறவுள்ள மினி உலகக் கிண்ணத் தொடருக்கு மேற்கிந்தியத் தீவுகள் தகுதி பெறவில்லை. தீவுகளுக்குப் பதிலாக பங்களாதேஷ் இடம்பிடித்துள்ளது.

அடுத்த மினி உலகக்கிண்ணத் தொடர் 2017 ஆம் ஆண்டு ஜூன் 1ஆம் திகதி முதல் 18 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. தரப்படுத்தலில் முதல் எட்டு இடங்களிலுமுள்ள அணிகளே மினி உலகக் கிண்ணத் தொடரில் விளையாடலாம் என்ற அடிப்படையில் கலந்துகொள்ளவுள்ள அணிகளின் விவரங்கள் நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்டன. இதில் 2006ஆம் ஆண்டுக்குப் பிறகு பங்களாதேஷ் அணி தகுதி பெற்றுள்ளது.

மினி உலகக்கிண்ணத் தொடரில் விளையாடவுள்ள அணிகளின் விவரங்கள் – ஆஸ்திரேலியா, இந் தியா (நடப்புச் சம்பியன்), தென் னாபிரிக்கா, நியூஸிலாந்து, இலங்கை, இங்கி லாந்து, பாகிஸ்தான், பங்களாதேஷ். (ம)

## யங்ஸ்ரார் அணிக்கு வெற்றி

யாழ்ப்பாணம், ஒக். 2

வவுனியா லீக்கின் முதற்தர அணிகளுக்கு இடையில் நடத்தப்பட்டுவரும் பண்டரவன்னியன் வெற்றிக்கிண்ணத்துக்கான 7 வீரர்கள் பங்குபற்றும் லீக் முறையிலான உதைபந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் வவுனியா நகரசபை மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது. இந்தத்தொடரில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் அல்ஹிஜிரா அணியை எதிர்த்து யங்ஸ்ரார் அணி மோதிக் கொண்டது. இதில் யங்ஸ்ரார் அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (ம–23)


# அப்பாடா கெயில் இல்லை

## அறிவிக்கப்பட்டது தீவுகள் அணி

இலங்கைக்கு எதிரான ஒருநாள், ரி–20 தொடர்களுக்கான மேற்கிந்தியத் தீவுகள் அணி அறிவிக்கப்பட்டுள்ளது. தீவுகளின் அதிரடி வீரரான கெயில் காயம் காரணமாக அணியில் சேர்க்கப்படவில்லை.

கெயில் மட்டுமல்லாது உலகக்கிண்ணத் தொடரில் விளையாடிய 8 வீரர்கள் இலங்கைக்கு எதிரான தொடரில் இடம்பெறவில்லை. குறிப்பாக சிமித், சமி, சிம்மன்ஸ், சுலைமான்பென், கோட்ரெல், நிகிடா மில்லர், ரோச் ஆகியோர் அணியில் இருந்து நீக்கப்பட்டுள்ளமை பெருத்த ஏமாற்றமாக அமைந்துள்ளது. அதேநேரம் பந்துவீச்சு சர்ச்சையால் உலகக்கிண்ணத் தொடரில் இடம்பெறாத சுனில் நரைன் அணிக்கு மீண்டும் திரும்பியுள்ளார்.

இதேபோல காயத்தால் விலகி இருந்த டாரன் பிராவோவும் அணிக்கு திரும்பியுள்ளார். முன்னணி வீரர்களான வெய்ன் பிராவோ, பொலார்ட் இருவரது பெயர்களும் ஒருநாள் தொடருக்காக பரிசீலிக்கப்படவேயில்லை.



தீவுகளின் ஒருநாள் அணி – கோல்டர் (தலைவர்), டாரன் பிராவோ, ரசல், சாமுவேல்ஸ், ஜெரோம் டெய்லர், பிளட்சர், முகமது, சுனில் நரைன், பிஸ்கு, பிளாக்வுட், பிராத் வெயிட், காட்டர், சார்லஸ், ரம்டின், ராம்போல். ஒருநாள் தொடருக்கான அணியில் இடம்பெறாத சமி ரி–20 ஆட்டங்களுக்கு தலைவராக உள்ளார். ரி–20 அணியில் வெய்ன் பிராவோ, பொலார்ட் இடம்பெற்றிருக்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

## மோகனதாஸிடம் வீழ்ந்தது காமாட்சி

யாழ்ப்பாணம், ஒக். 2

அச்சுவேலி ஸ்ரார் விளை யாட்டுக் கழகத்தின் 8ஆவது ஆண்டுநிறைவை முன்னிட்டு குறித்த கழகத்தினால் யாழ். மாவட்ட ரீதியாக நடத்தப்பட்டுவரும் கரப்பந் தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறிந்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

இந்தத்தொடரில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் புத்தூர் தமிழ்மதி அணியை எதிர்த்து ஆவரங்கால் மத்திய அணி மோதிக்கொண்டது. இதில் புத்தூர் தமிழ்மதி அணி 2:1 என்ற செற்கணக்கில் வெற்றிபெற்றது.

தொடர்ந்து இடம்பெற்ற ஆட்டத்தில் மட்டுவில் மோகனதாஸ் அணியை எதிர்த்து நீர்வேலி காமாட்சி அணி மோதிக் கொண்டது. இதில் மட்டுவில் மோகனதாஸ் அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ம–23)

# ஆட்டம் ஆரம்பம்



இந்தியா – தென்னாபிரிக்கா அணிகளுக்கிடையிலான மூன்று ஆட்டங்களைக் கொண்ட ரி–20 தொடரின் முதலாவது ஆட்டம் இன்று ஆரம்பமாகிறது.

தர்மசாலாவில் உள்ள மைதானத்தில் இலங்கை நேரப்படி இரவு 7 மணிக்கு ஆரம்பமாகும் இந்த ஆட்டத்தில் இந்திய அணிக்கு டோனியும்; தென்னாபிரிக்காவுக்கு பிளாஸிசும் தலைமை தாங்கு கின்றனர். தவான், ரகானே, ரெய்னா, டோனி, கோகிலி, ரோகித் சர்மா என்றவாறு பலமான துடுப்பாட்ட வரிசையை கொண்டிருக்கும் இந்தியாவுக்கு மேலும் பலம் சேர்க்கிறது அஸ்வின், ஹர்பஜன், யாதேவ், புவனேஸ்குமார், ஆரோன் என்றவாறான பந்து வீச்சு வரிசை.

ஆனால் தென்னாபிரிக்கா இலகுவான அணியல்ல பிளாஸிசின், வில்லியர்ஸ், மில்லர், டுமினி, பெக்கார்டின், ரொஸ்சாவ், அம்லா என்று துடுப்பாட்டப் படையே அந்த அணியிடம் உள்ளது. ஸ்ரெயின், அல்பி மோர்கல் கூட்டணி நிச்சயம் வேகத்தில் மிரட்டும்.

அதேபோல் டுமினி, தாகிர் கூட்டணி சுழலில் ஜாலம் காட்டும் மொத்தத்தில் இந்த ஆட்டம் அனல் பறக்கும். நீண்ட கால இடைவெளிக்குப் பின்னர் மீண்டும் வர்ண உடைக்கு திரும்பியுள்ளது கிரிக்கெட். எதுஎப்படியோ ஆட்டம் ஆரம்பம். (ம)

# கலைமதி, யுத் அடுத்த சுற்றுக்கு தகுதி

கரணவாய், ஒக். 2

வடமராட்சி உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் சமரபாகு நியூட்டன் விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட ரீதியாக நடத்திவரும் உதைபந்தாட்டத் தொடரில் நவிண்டில் கலைமதி விளையாட்டுக் கழகம் மற்றும் உடுப்பிட்டி யுத் விளை யாட்டுக் கழகம் என்பன வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்களக்கு தகுதி பெற்றுள்ளன.

### கருணாகரன் எதிர் கலைமதி

நியூட்டன் மைதானத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற முதலாவது ஆட்டத்தில் வல்வெட்டித்துறை கருணாகரன் விளையாட்டுக் கழகமும் நவிண்டில் கலைமதி விளையாட்டுக் கழகமும் பலப்பரீட்சை நடத்தின. ஆரம்பத்தில் ஆட்டம் சிறிது சொதப்பலாகவே ஆரம்பித்தது. இருப்பினும் 11 நிமிடத்தில் ஆவது கலைமதி கோல் கணக்கை ஆரம்பித்து வைக்க விறுவிறுப்பு தானாகவே தொற்றிக் கொண்டது. கருணாகரனுக்கு மேலும் அடியாக கலைமதியின் கோல் கணக்கு 2:0 என்று உயர்ந்தது. மேலதிக கோல்கள் எதுவும் முதல்பாதியில் பதியப்படாத நிலையில் முடிவடைந்தது முதல்பாதி.

இரண்டாவது பாதியிலும் 11ஆவது நிமிடத்தில் கலைமதியின் சார்பாக மூன்றாவது கோல் விளைக்கப்பட்டு அதன் இருப்பு காப்பாற்றப்பட்டதே தவிர கருணாகரனின் சார்பாக கோலெதுவும் பதிவாகவில்லை.



ஆட்டம் நிறைவடைய இரண்டு நிமிடங்கள் இருக்கும் பொழுது கருணாகரனின் சார்பாக முதல் கோலும் ஆட்டத்தின் இறுதிக் கோலும் விளாசப்பட்டது. முடிவில் 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது கலைமதி.

### யுத் எதிர் திருக்குமரன்

தொடர்ந்து இடம்பெற்ற ஆட்டத்தில் உடுப்பிட்டி யுத் விளையாட்டுக் கழகமும் உரும்பிராய் திருக்குமரன் விளையாட்டுக் கழகமும் மோதின. ஆட்டம் முழுவதையும் தனது கட்டுப்பாட்டில் வைத்திருந்த யுத் அணி 7:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ம–108)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர் உள்வாங்குகை : கல்வியாண்டு 2015, செப்டம்பர்
# BCAS Campus - Jaffna

தனியார் உயர் கல்வித்துறையில் 16 வருட அனுபவத்தையும் நம்பிக்கையும் கொண்ட **BCAS Campus** யாழ் வளாகத்தில் புதிய கற்கை நெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

## உயர் தேசிய டிப்ளோமா கற்கை நெறிகள் (BTEC Pearson edexcel HNDs)


கற்கை நெறிகள்
- **Civil Engineering**
- **Biomedical Science**
- **Quantity Surveying**
- **Computing & System Development**
- **Business Management**
- **Business Marketing**
- **HR Management**

காலம் : நான்கு கல்வி அரையாண்டுகள் (1வருடம் 6 மாத கற்கை காலம் +6 மாதகால தொழில்சார் பயிற்சி)
கட்டணம் : கற்கை நெறிக்கேற்ப வேறுபடும்
மொழிமூலம் : ஆங்கிலம்
அனுமதி : க.பொ.த உயர் தரம் (பெறுபேறுகளை எதிர்பார்த்து நிற்கும் மாணவர்களும் விண்ணப்பிக்கலாம்)



மேற்கூறப்பட்ட கற்கைநெறிகள் நான்கு கல்வி அரையாண்டுகள் கொண்டதாகவும், இக்கற்கை நெறிகளில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினாலும் (UGC) சர்வதேசத்தினாலும் அங்கீகரிக்கப்பட்ட இளமாணி பட்டப்படிப்பை பூர்த்தி செய்வதற்கு மேலதிக ஒருவருட / இறுதியாண்டு (Top-Up) கற்கையை 105 க்கு மேற்பட்ட சர்வதேச பல்கலைக்கழகங்களிலோ அல்லது எமது நிறுவனத்தின் கொழும்பு வளாகத்திலோ தொடர்ந்து பட்டத்தை பெற முடியும்.

## டிப்ளோமா கற்கை (Diploma)



கற்கை நெறிகள்

- **CAD & BS**

க.பொ.த சாதாரண தரம் அல்லது முழுமையற்ற க.பொ.த உயர் தரத்துடன் கட்டிட நிர்மாணத் துறையில் 6 மாதகால படவரைஞர் பயிற்சி நெறியின் இறுதியில் UK edexcel அங்கீகாரம் பெற்ற டிப்ளோமா சான்றிதழை பெற்றுக்கொள்ள முடியும்.

- **BTEC edexcel National Diploma in Engineering (IEF)**

Engineering துறையில் க.பொ.த சாதாரண தரம் அல்லது முழுமையற்ற கா.பொ.த உயர் தரத்துடன் சர்வதேச இளமாணி பட்டப்படிப்பினை மேற்கொள்வதற்கான 1 வருட (2 கல்வி அரையாண்டுகள்) அடிப்படை கற்கை நெறி UK edexcel அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழை பெற்றுக் கொடுக்கும்.

## கணனி மற்றும் ஆங்கில பயிற்சி பாடநெறிகள் (UK edexcel)

கற்கை நெறிகள்

- **English**

நான்கு மாத காலம் கொண்ட ஆங்கில பாடநெறி ஆங்கிலத்தில் பேச எழுத வாசிப்பதற்குரிய முழுமையான பயிற்சி அளிக்கப்படுவதுடன் சர்வதேச சான்றிதழையும் பெற்றுக்கொடுக்கிறது.

- **Information Technology (IT)**

Concept of Information Technology, Computer Maintenance & File Management, Microsoft Office, Information & Communication, Website Development, Computer Programming & Hardware & Networking போன்ற பிரிவுகளில் முழுமையாக பயிற்சியளிப்பதுடன் சர்வதேச அங்கீகாரம் கொண்ட சான்றிதழையும் பெற்றுக்கொடுக்கிறது.

- **IELTS**

சர்வதேச ஆங்கில மொழித் தகைமைகளை உத்தரவாதப்படுத்தும் இப்பாட நெறியில் Speaking, Listening, Reading and Writing போன்ற பிரிவுகளில் முழுமையானதும் தனிப்பட்ட கவனமும் செலுத்தப்படுகிறது.

**BCAS CAMPUS**
BRITISH COLLEGE OF APPLIED STUDIES
JAFFNA

மேலதிக தகவல்களுக்கு:
**077 710 2131**
16, Point Pedro Road, Jaffna, Sri Lanka.
T: 021 2219910

16 YEARS


## வருடாந்த விளையாட்டுப் போட்டி

யாழ்ப்பாணம், ஒக். 2

மூளாய் மனிதவள அபிவிருத்தி சனசமூக நிலையத்தின் வருடாந்த விளையாட்டுப்போட்டி நாளை மரதன் ஓட்டத் துடன் ஆரம்பமாகவுள்ளது. நாளை மரதன் ஓட்டத் துடன் ஆரம்பமாகும் இந்த நிகழ்வு நாளை மறுதின பாரம்பரிய விளையாட்டுக்களுடன் நிறைவு பெறும். குறித்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் கலந்துகொள்ளவுள்ளார். (ம)


பௌதிகவியல்
J.துவிராஜ்
A/L 2016,2017
Paper Class
ஆரம்பம்
ஞாயிறு 7 am
யூனிவேர்சல்
கந்தர்மடம்

கணக்கீடு
A/L 2016
கம்பனி
ஆரம்பம் திங்கள் 5 p.m
A/L 2017
வங்கி கணக்கிணக்கற் கூற்று
ஆரம்பம் திங்கள் 4 p.m
S.தவா
SHAMROCK
ஈச்சமோட்டை.

அதிபர் சேவை தரம் - 3
விசேட கருத்தரங்கு
* புதிய வினாத்தாள் அமைப்புக்கு ஏற்ப
• தயாரிக்கப்பட்ட வினாத்தாள்கள் நீண்டகால அனுபவமும் தகைமையும் கொண்ட விரிவுரையாளர்களினால் விளக்கப்படும்.
பிரிவு - I
சனி, ஞாயிறு
காலை 9.00 தொடக்கம் 4.00 மணிவரை
பிரிவு - II
ஒவ்வொரு நாளும்
மாலை 5.00 - 7.00 மணிவரை
* முன் கூட்டியே பதிவுகளுக்கு
0212223382,
0766883394
யாழ்ப்பாணக்கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு.
(யாழ்.ஆஸ்பத்திரி வீதி, கொமர்ஷல் வங்கி அருகில்)

# CHEMISTRY
## A/L 2016 DAY CLASS
**DIAS B.Sc (Hons)**
Spl in Chem
- ✓ துரித மீட்டல்
- ✓ கடந்தகால வினா - விடை
- ✓ அச்சடிக்கப்பட்ட பாடக்குறிப்புக்கள்
- ✓ வாராந்தப் பரீட்சை
- ✓ மாதிரி வினாத்தாள்கள்

**11.30 am - 1.00pm**
NEW SCIENCE WORLD
Navalar Road -Brown Road Junction.
Jaffna.

A/L பொருளியல்
MCQ BOOK - 1
ரூபா 90/=
புதிய வினாத்தாள் அமைப்பில் மேலதிக மீட்டல் வினாக்களுடன்
2015 A/L பரீட்சையில் 99 புள்ளிகள்
பெறுவதற்கு வழிவகுத்த மற்றும் பொருளியல்
ஆசிரியர் வே. கருணாகரன்
பூபாலசிங்கம் புத்தகசாலை
அன்னை புத்தகசாலை

உதயன்
advt@uthayan.com
021 493 1111

கணக்கீடு
A/L 2016
கம்பனி
ஆரம்பம் நாளை 4 p.m
A/L 2017
வங்கி கணக்கிணக்கற் கூற்று
ஆரம்பம் நாளை 7 a.m
S.தவா
B.com(Hons)(Acc spl) (PGDE)
Universal
கந்தர்மடம்

TRILLIAM MONTESSORI'S
Art'n BLOOM
Art and craft Exhibition of young and upcoming talents
Time : 9 am - 5 pm
Date : 3rd & 4th October (Saturday and Sunday)
Venue : Trilliam Montessori
45, Sangilian Rd, Nallur.
Come and appriciate the exhibits of our kids

திருநெல்வேலி சிமாட் கிட்ஸ்
THIRUNELVELY SMART KIDS
ஆங்கில ஆசிரியர் தேவை.
* G.C.E O/Lஇல் ஆங்கிலத்தில் திறமைச்சித்தி, ஆங்கிலத்தில் மேலதிக தகைமைகள் எதிர்பார்க்கப்படுகின்றன.
* 07.10.2015 அன்று பி.ப. 3.00 மணிக்கு ஆவணங்களுடன் சமூகம் அளிக்கவும்.
திருநெல்வேலி சிமாட் கிட்ஸ்
40, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி
T.P:- 021 205 2262


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 2.10.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.